NITHRA®



# ஜோதிடமும், நம்பிக்கையும்..

## பொதுவான தகவல்கள்..

## PDF வடிவில்..!!

Copyright is reserved to the publisher, therefore the person who will try to imitate or try to print this book illegally or without the prior written permission of this publisher in any form, will be responsible for the loss and may be punished  for compensation under copyright act.

இந்தப் புத்தகத்தைப் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
மறுபதிப்பு செய்வதோ, அச்சேற்றுவதோ, நகல் எடுப்பதோ
கூடாது. மீறினால் காப்பிரைட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலின் பெயர் : ஜோதிடமும், நம்பிக்கையும்..

பக்கங்கள் : 168

விலை : ரூ. 100

பதிப்பு : 2020

உரிமை : பதிப்பகத்தாருக்கே

In the compilation of this book all possible precautions have been taken to ensure that the informations provided is correct. Yet the publisher / authors will nto be held responsible for any printing errors or damage resulting from any inadvertent omission or inaccuracies in this book. However suggestions for the improvement of this book (Including printing errors, ommissions, etc. if any) are welcome and these will be incorporated in the subsequent editions of this book.

---

Published by : **P. Gokulanathan, Nithra Publications,** AV Plaza 3rd & 4th Floor, South Car Street, Tiruchengode - 637211.

# ஜோதிடமும், நம்பிக்கையும்...!!

ஜோதிடத்தின் அடிப்படை என்பது வானியல் சாஸ்திரமாகும். ஏனெனில் வானியல் சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள கிரகங்கள், நட்சத்திரங்களின் இயக்கங்களை அடிப்படையாக வைத்து இயங்குவது ஜோதிட சாஸ்திரமாகும்.

கிரகங்கள், நட்சத்திரங்கள் பூமியில் உள்ள உயிர்களின் மீது செலுத்தும் ஆதிக்கத்தை கணக்கிட்டு அதனால் விளையும் பயன்களையும், தீமைகளையும் எடுத்துக்கூறும் வல்லமை உடைய நம் முன்னோர்களால் இன்றைய தலைமுறைக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதமே 'ஜோதிடம்' ஆகும்.

ஜோதிடம் என்றாலும் சோதிடம் என்றாலும் பொருள் ஒன்றே.

இன்றைய காலக்கட்டத்தில் ஒரு புதிய கிரகம் இருக்கிறதா? என்பதை ஆய்வு செய்ய பல லட்சம் செலவு செய்து அதற்கான இயந்திரங்களை கொண்டு ஆய்வு செய்கின்றனர். ஆனால், நம் முன்னோர்களோ எவ்விதமான செலவுமின்றி வானில் சூரியன் முதலிய நவக்கோள்கள் இருப்பதையும் அவற்றிற்கு இடையேயான தொலைவு மற்றும் அவற்றின் சுற்றுக் காலங்களையும் எடுத்து கூறினர்.

### ஜோதிடம் - ஜோதி + இடம் :

ஜோதிடம் என்பது மனிதன் தன் மனதில் கொண்டுள்ள இருளை விலக்கி அறிவு என்னும் ஒளியை அளிக்கக்கூடியது. இதற்கு 'ஒளி' பற்றிய சாஸ்திரம் என்றும் பெயருண்டு.

### ஜோதிடமும், மருத்துவமும் :

அன்றைய காலக்கட்டங்களில் இன்றைக்கு இருக்கும் மருத்துவ வசதிகள் என்பது இல்லை. ஆனால், நோயாளிக்கு மருந்து தயாரித்த மருத்துவரே ஜோதிடம் அறிந்த நபராக இருந்தார்.

ஒருவரின் ஜாதகத்தில் உள்ள கிரகங்கள் அமைந்துள்ள விதத்தை கொண்டு அவருக்கு ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளை எடுத்துக்கூறி நிவர்த்தியும் செய்ய இயலும்.

### ஜோதிடத்தில் ஒருவரின் எண்ணங்கள் மற்றும் உடலமைப்பு விவரங்களை அறிய முடியுமா?

ஒருவர் பிறந்த நேரத்தில் உள்ள கிரகங்களின் அமைப்புகளை வைத்து அவரின் எண்ணங்கள் மற்றும் உடலமைப்பு பற்றியும் உடலில் உள்ள வடுக்கள் மற்றும் மச்சங்கள் வரைக்கும் சொல்ல இயலும்.

யாரென்று தெரியாத ஒரு நபர் இன்றைய சூழலில் அனுபவித்து வரும் இன்னல்களையும், நடந்து முடிந்த நிகழ்வுகள் மற்றும் அவரின் எதிர்காலம் பற்றிய வினாவிற்கு உரிய விடையை ஜோதிடம் மூலம் எடுத்துக்கூற இயலும்.

குழப்பங்களுடன், சங்கடத்துடன் தன்னை காண வரும் நபர்களின் வாழ்க்கையில் உள்ள இன்ப, துன்ப நிகழ்வுகளையும் எடுத்துக்கூறி அவருடைய மனதில் இருந்த ஐயம் நீக்கி அவரை தெளிவடைய வைக்கும் ஜோதிடர் ஒரு மனநல மருத்துவராகவும் செயல்படுகின்றார்.

### ஜோதிடம் உண்மையா?

நம்மை ஆட்டுவிக்கும் இந்த கிரகங்கள் இருக்கும்வரை ஜோதிடம் என்பது உண்மையானதே.

இன்றளவும் பல நிறுவனங்களில் ஜோதிடம் சார்ந்த துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன.

ஜோதிடம் என்பது நமது எதிர்கால வாழ்க்கையில் ஏற்பட போகும் இன்ப, துன்ப நிகழ்வுகளை எடுத்துக்கூறும் ஒரு சிறந்த கால கண்ணாடி ஆகும்.

கண்ணாடி நாம் பார்க்கும் விதத்தை கொண்டு அதற்கான பிம்பத்தை பிரதிபலிக்கும். அதைபோல் தான் ஜோதிடம் என்னும் காலக்கண்ணாடி மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை மட்டுமே அடிப்படையாக கொண்டது.

## ஜோதிடமும்... அதன் பிரிவுகளும்...!!!

ஜோதிடம் என்பது ஒருவர் பிறந்த கணத்தில் இருந்த கோள்களின் நிலை மற்றும் விண்மீன்களின் அமைப்பினைக் கொண்டு கணக்கிடப்படுவதாகும்.

ராசிகள், நட்சத்திரங்கள், கிரகங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சரியான காலத்தை அறியவும், எதிர்கால நிகழ்வுகளை எடுத்துக்கூறவும் உபயோகப்படுவது ஜோதிடம்.

ஜோதிடத்தில் வானசாஸ்திர ஜோதிடம், மாண்டேன் ஜோதிடம், ஜோதிடம், எண் ஜோதிடம், பிரசன்ன ஜோதிடம் (ஆருடம்), கைரேகை ஜோதிடம், ஒலி அலை ஜோதிடம், சாமுத்திரிக்கா லட்சண ஜோதிடம், கையெழுத்து ஜோதிடம், வாஸ்து சாஸ்திர ஜோதிடம் போன்ற பல பிரிவுகள் உள்ளன. அவற்றை பற்றி விரிவாக பார்க்கலாம்.

## ஜோதிட பிரிவுகள் :

### வானசாஸ்திர ஜோதிடம் :

வான் மண்டலத்தில் ஏற்படும் பல மாற்றங்களால் பூமியில் ஏற்படும் பருவநிலைகளின் மாற்றங்கள், இயற்கை சீற்றங்கள் மற்றும் தட்பவெப்பநிலை மாற்றங்கள் போன்றவற்றை பற்றி அறிய உதவுகின்றது.

### மாண்டேன் ஜோதிடம் :

ஓர் நாட்டின் பொருளாதார நிலை, நாணய மதிப்பு, அரசியல் நிலை, ஏற்றுமதி, இறக்குமதியின் நிலை மற்றும் விலைவாசி கடன் போன்றவற்றை பற்றி அறிய பயன்படுத்தப்படுகின்றது.

### ஜோதிடம் :

ஒரு தனிமனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள், சூழ்நிலைகள் அவன் பிறப்பு முதல் இறப்பு வரை ஏற்படும் பல சம்பவங்களைப் பற்றி அறிய பயன்படுகிறது.

### எண் ஜோதிடம் :

ஒரு தனி மனிதனின் பிறந்த தேதிக்கு தகுந்தாற்போல் அவருடைய பெயரின் எழுத்துக்களை மாற்றி அமைப்பதன் மூலம் அவர் வாழ்வில் ஏற்படும் நன்மை மற்றும் தீமைகளை பற்றி அறிய பயன்படுத்தப்படுகின்றது.

### பிரசன்ன ஜோதிடம் :

ஓர் நபர் வந்து ஜோதிடம் பார்க்கும் நேரத்தில், அந்த நேரத்தில் இருக்கும் கிரகநிலையை வைத்து அவர் வாழ்வில் ஏற்படும் நன்மை மற்றும் தீமைகளை பற்றி அறிவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

### கைரேகை ஜோதிடம் :

ஓர் தனிநபரின் கைரேகையை வைத்து அவர் வாழ்வில் ஏற்படும் நன்மை, தீமைகளை பற்றி அறிந்து கொள்ளலாம்.

### ஒலி அலை ஜோதிடம் :

ஒருவரின் ஒலி அலைகளை மாற்றி அமைப்பதன் மூலம் அவர் வாழ்வில் ஏற்படும் நன்மை, தீமைகளை பற்றி அறிய பயன்படுத்தப்படுகின்றது.

### சாமுத்திரிகா லட்சண ஜோதிடம் :

ஒருவரின் முக அமைப்பை வைத்தும், உடலமைப்பை வைத்தும் அவர் வாழ்வில் ஏற்படும் நன்மை, தீமைகளை பற்றி அறிய பயன்படுத்தப்படுகின்றது.

### கையெழுத்து ஜோதிடம் :

ஒருவர் எழுதும் கையெழுத்தை வைத்து அவர் வாழ்வில் ஏற்படும் நன்மை, தீமைகளை பற்றி அறிய பயன்படுகிறது.

### வாஸ்து சாஸ்திரம் :

ஒருவர் வசிக்கும் வீட்டின் அளவுகளை வைத்து அவர் வாழ்வில் ஏற்படும் நன்மை, தீமைகளை பற்றி அறிய உதவுகிறது.

### கிளி ஜோதிடம் :

கிளி ஜோதிடம் என்பது ஜோதிடத்தில் பலன் உரைக்கும் முறைகளில் ஒரு வகையான பிரசன்ன மார்க்கமாகும்.

கிளியின் முன்னால் சீட்டுகள் அடுக்கப்பட்டு இருக்கும். கிளி அந்த சீட்டிலிருந்து ஏதாவது ஒரு சீட்டை எடுக்கிறது. அந்த சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விவரமானது அவருடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் அவரோடு தொடர்புடையதாகவே இருக்கக்கூடும்.

### நாடி ஜோதிடம் :

பூமியில் பிறந்த மனிதர்களின் எதிர்காலம் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கு, நமது முன்னோர்கள் வருங்கால சந்ததியரின் வாழ்க்கையை குறித்து எழுதி சென்ற ஓலைச்சுவடிகளைதான் நாடி ஜோதிடம் என்று கூறுகிறோம்.

நாடி ஜோதிடம் என்பது ஒருவருடைய கைரேகையை வைத்து அவருடைய கைரேகைக்கு தொடர்புடைய ஏடுகளைக் கண்டுபிடித்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களில் அவருக்கு தொடர்பான விஷயங்களை வாசித்து விளக்கி கூறப்படும் ஒரு கலையாகும்.

மனிதனின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய விரிவான விவரங்கள் பனை ஓலைகளில் இருந்து தெரிந்துக்கொள்ளலாம்.

ஆண்கள் வலது கை கட்டை விரல் ரேகையையும், பெண்கள் இடது கை கட்டை விரல் ரேகையையும் கொண்டு நாடி ஜோதிட ஏடுகள் கணிக்கப்படுகிறது.

2000 ஆண்டுகள் பழமையான இந்த சுவடிகளை சப்தரிஷிகள் எனப்படும் அகத்தியர், கௌசிகர், வைசியர், போகர் பிரிகு, வசிஷ்டர் மற்றும் வால்மீகி ஆகிய ரிஷிகள் எழுதியதாக கூறப்படுகிறது.

ஆனால், பெரும்பாலான சுவடிகள் அகத்திய முனிவர் எழுதியதாகவே இருப்பதால், வாசிக்கும்போதும் அவரது பெயரை கூறி வாசிக்கின்றார்கள்.

மேலும், நாடி ஜோதிடத்தில் எதிர்காலம் சார்ந்த கருத்துக்களும், அதை சார்ந்த பல விவரங்களும் விளக்கப்பட்டுள்ளன.

சில விவரங்கள் தற்போதைய அல்லது கடந்த காலத்துடன் தொடர்புடையவை.

ஒவ்வொரு ஓலைக்கும் வித்தியாசமான பதில்கள் நம் முன்னோர்களால் கூறப்பட்டுள்ளன.

## நட்சத்திரமும், அதிபதியும்

ஜோதிடத்தில் அடிப்படையாக இருப்பது நட்சத்திரம் ஆகும். ஒவ்வொரு நட்சத்திரங்களுக்கும் நவகிரகத்தில் உள்ள கிரகம் அதிபதியாக இருக்கின்றது. நமது நட்சத்திரத்திற்கான அதிபதிகள் யாரென்று அறிந்து அவர்களை வழிபடுவதால் வாழ்க்கையில் தடைகள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உண்டான அதிபதிகள் இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

நட்சத்திரமும், அதிபதியும் :

01.அஸ்வினி - கேது

02.பரணி - சுக்கிரன்

03.கிருத்திகை - சூரியன்

04.ரோகிணி - சந்திரன்

05.மிருகசீரிஷம் - செவ்வாய்

06.திருவாதிரை - ராகு

07.புனர்பூசம் - குரு (வியாழன்)

08.பூசம் - சனி

09.ஆயில்யம் - புதன்

10.மகம் - கேது

11.பூரம் - சுக்கிரன்

12.உத்திரம் - சூரியன்

13.அஸ்தம் - சந்திரன்

14.சித்திரை - செவ்வாய்

15.சுவாதி - ராகு

16.விசாகம் - குரு (வியாழன்)

17.அனுஷம் - சனி

18.கேட்டை - புதன்

19.மூலம் - கேது

20.பூராடம் - சுக்கிரன்

21.உத்திராடம் - சூரியன்

22.திருவோணம் - சந்திரன்

23.அவிட்டம் - செவ்வாய்

24.சதயம் - ராகு

25.பூரட்டாதி - குரு (வியாழன்)

26.உத்திரட்டாதி - சனி

27.ரேவதி - புதன்

## நட்சத்திரமும், தெய்வங்களும்

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் அதிபதிகள் இருப்பதை போன்று நட்சத்திரத்திற்கு அதிதேவதைகள் இருக்கின்றார்கள். நமது நட்சத்திரத்திற்கான அதிதேவதைகள் யாரென்று அறிந்து அவர்களை வழிபடுவதால் வாழ்க்கையில் இன்னல்கள் நீங்கி சுபிட்சம் பெறலாம். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உண்டான அதிதேவதைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

நட்சத்திர தெய்வங்கள் :

01. அஸ்வினி - ஸ்ரீ சரஸ்வதி தேவி

02. பரணி - ஸ்ரீ துர்கா தேவி (அஸ்ட புஜம்)

03. கார்த்திகை - ஸ்ரீ சரவணபவன் (முருகப்பெருமான்)

04. ரோகிணி - ஸ்ரீ கிருஷ்ணன் (விஷ்ணு பெருமான்)

05. மிருகசீரிஷம் - ஸ்ரீ சந்திர சூடேஸ்வர் (சிவபெருமான்)

06. திருவாதிரை - ஸ்ரீ சிவபெருமான்

07. புனர்பூசம் - ஸ்ரீ ராமர் (விஷ்ணு பெருமான்)

08. பூசம் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி (சிவபெருமான்)

09. ஆயில்யம் - ஸ்ரீ ஆதிசேஷன் (நாகம்மாள்)

10. மகம் - ஸ்ரீ சூரியபகவான் (சூரிய நாராயணர்)

11. பூரம் - ஸ்ரீ ஆண்டாள் தேவி

12. உத்திரம் - ஸ்ரீ மகாலட்சுமி தேவி

13. அஸ்தம் - ஸ்ரீ காயத்ரி தேவி

14. சித்திரை - ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

15. சுவாதி - ஸ்ரீ நரசிம்மமூர்த்தி

16. விசாகம் - ஸ்ரீ முருகப்பெருமான்

17. அனுஷம் - ஸ்ரீ லட்சுமி நாராயணர்

18. கேட்டை - ஸ்ரீ வராஹ பெருமாள் (ஹயக்கிரீவர்)

19. மூலம் - ஸ்ரீ ஆஞ்சநேயர்

20. பூராடம் - ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் (சிவபெருமான்)

21. உத்திராடம் - ஸ்ரீ விநாயகப் பெருமான்

22. திருவோணம் - ஸ்ரீ ஹயக்கிரீவர் (விஷ்ணுப் பெருமான்)

23. அவிட்டம் - ஸ்ரீ அனந்த சயனப் பெருமாள் (விஷ்ணுப் பெருமான்)

24. சதயம் - ஸ்ரீ மிருத்யுஞ்ஜேஸ்வரர் (சிவபெருமான்)

25. பூரட்டாதி - ஸ்ரீ ஏகபாதர் (சிவபெருமான்)

26. உத்திரட்டாதி - ஸ்ரீ மகாஈஸ்வரர் (சிவபெருமான்)

27. ரேவதி - ஸ்ரீ அரங்கநாதன்

## நட்சத்திரமும், மரமும்

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட மரங்கள் அருள்பாவிக்கும் விதமாக உள்ளன. அந்த மரங்களை வழிபடுவதன் மூலம் முன்னேற்றமான வாய்ப்புகள் உண்டாகும். அவரவர் நட்சத்திரத்திற்குரிய மரத்தை வளர்த்து பேணி காப்பதன் மூலம் மனக்கவலைகள் குறைந்து தெளிவுடன் எப்போதும் செயல்படுவீர்கள். இனி நட்சத்திரத்திற்குரிய மரங்கள் பற்றி காண்போம்.

நட்சத்திரமும், மரமும் :

01.அஸ்வினி - ஈட்டிமரம்

02.பரணி - நெல்லிமரம்

03.கார்த்திகை - அத்திமரம்

04.ரோகிணி - நாவல்மரம்

05.மிருகசீரிஷம் - கருங்காலிமரம்

06.திருவாதிரை - செங்கருங்காலிமரம்

07.புனர்பூசம் - மூங்கில்மரம்

08.பூசம் - அரசமரம்

09.ஆயில்யம் - புன்னைமரம்

10.மகம் - ஆலமரம்

11.பூரம் - பலாமரம்

12.உத்திரம் - அலரிமரம்

13.அஸ்தம் - அத்திமரம்

14.சித்திரை - வில்வமரம்

15.சுவாதி - மருதமரம்

16.விசாகம் - விலாமரம்

17.அனுஷம் - மகிழமரம்

18.கேட்டை - பராய்மரம்

19.மூலம் - மராமரம்

20.பூராடம் - வஞ்சிமரம்

21.உத்திராடம் - பலாமரம்

22.திருவோணம் - எருக்கமரம்

23.அவிட்டம் - வன்னிமரம்

24.சதயம் - கடம்புமரம்

28.பூரட்டாதி - தேமமரம்

26.உத்திரட்டாதி - வேம்புமரம்

27.ரேவதி - இலுப்பைமரம்

## நட்சத்திர குறியீடுகள்

இருளில் இருந்த கண்களுக்கு வெளிச்சம் புலப்படும்போது ஆசைகளும், லட்சியங்களும் தோன்ற துவங்குகின்றன. அவ்வாறு தோன்றும் லட்சியங்களில் வெற்றி அடைய வேண்டும் என்பது ஒவ்வொருவரின் விருப்பம் ஆகும். ஆனால், முயற்சி செய்பவர்கள் அனைவரும் வெற்றி பெறுகிறார்கள் என்று சொல்ல முடிவதில்லை.

இந்த உலகில் பிறந்த அனைவரும் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் பிறந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அவ்வாறு அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய குறியீடுகள் அல்லது வடிவங்களை தினமும் பார்ப்பது அல்லது பயன்படுத்தும்போது அவரது முயற்சிகளில்

வெற்றிக்கான சாத்தியங்கள் அதிகரிக்கின்றன. இனி ஒவ்வொரு நட்சத்திர குறியீடுகள் மற்றும் சின்னத்தை பற்றி பார்ப்போம்.

நட்சத்திர குறியீடுகள் :

01.அஸ்வினி - குதிரைத்தலை அல்லது குதிரை உருவம்

02.பரணி - மண் பாத்திரம், அடுப்பு அல்லது முக்கோண வடிவம்

03.கிருத்திகை - கத்தி, வாள் மற்றும் ஹோம தீ ஜூவாலை

04.ரோகிணி - தேர், வண்டி, கோவில், ஆலமரம் மற்றும் சக்கரம்

05.மிருகசீரிஷம் - மான் தலை மற்றும் தேங்காயின் கண்

06.திருவாதிரை - மனித தலை, வைரம் மற்றும் நீர்த்துளி

07.புனர்பூசம் - வில் மற்றும் அம்புக்கூடு

08.பூசம் - தாமரை, புடலம் பூ, அம்பு மற்றும் பசுவின் மடி

09.ஆயில்யம் - சர்ப்பம் மற்றும் அம்மி

10.மகம் - வீடு, பல்லக்கு மற்றும் நுகம்

11.பூரம் - கட்டிலின் இரு கால்கள், சங்கு மற்றும் மெத்தை

12.உத்திரம் - கட்டில் கால்கள் மற்றும் மெத்தை

13.அஸ்தம் - கைகள் அல்லது உள்ளங்கை

14.சித்திரை - முத்து மற்றும் ஒளி பொருந்திய ரத்தினக் கற்கள்

15.சுவாதி - புல்லின் நுனி மற்றும் காற்றில் அசையும் தீபச்சுடர்

16.விசாகம் - முறம், தோரணம் மற்றும் பானை செய்யும் சக்கரம்

17.அனுஷம் - குடை, மலரும் தாமரை மற்றும் வில் வளைவு

18.கேட்டை - குடை, குண்டலம் மற்றும் ஈட்டி

19.மூலம் - அங்குசம், சிங்கத்தின் வால் மற்றும் யானை தும்பிக்கை

20.பூராடம் - விசிறி, முறம் மற்றும் கட்டில் கால்கள்

21.உத்திராடம் - யானை தந்தம், மெத்தை விரிப்பு, கட்டில் கால்கள்

22.திருவோணம் - காது, மூன்று பாதச்சுவடுகள் மற்றும் அம்பு

23.அவிட்டம் - மிருதங்கம் மற்றும் உடுக்கை

24.சதயம் - பூங்கொத்து மற்றும் வட்ட வடிவம்

25.பூரட்டாதி - கட்டிலின் இரு கால்கள், வாள் மற்றும் இரு மனித முகங்கள்

26.உத்திரட்டாதி - கட்டில் கால்கள் மற்றும் இரட்டையர்கள்

27.ரேவதி - மீன் மற்றும் மத்தளம்

## நட்சத்திரமும், பட்சியும்

ஒருவருடைய ஜென்ம நட்சத்திரத்தை கொண்டு அவருடைய நட்சத்திர பட்சியை அறிய வேண்டும். நட்சத்திர பட்சியை அறிந்து கொண்டு நாம் செய்ய நினைக்கும் காரியங்களை நமது பட்சி வலிமையாக இருக்கும் காலக்கட்டங்களில் செய்வதால் நாம் எண்ணிய வெற்றியை அடைய இயலும். ஒவ்வொரு நட்சத்திரக்காரர்களுக்கான பட்சிகள் பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

நட்சத்திரமும், பட்சியும் :

01.அஸ்வினி - வல்லூறு

02.பரணி - வல்லூறு

03.கிருத்திகை - வல்லூறு

04.ரோகிணி - வல்லூறு

05.மிருகசீரிஷம் - வல்லூறு

06.திருவாதிரை - ஆந்தை

07.புனர்பூசம் - ஆந்தை

08.பூசம் - ஆந்தை

09.ஆயில்யம் - ஆந்தை

10.மகம் - ஆந்தை

11.பூரம் - ஆந்தை

12.உத்திரம் - காகம்

13.அஸ்தம் - காகம்

14.சித்திரை - காகம்

15.சுவாதி - காகம்

16.விசாகம் - காகம்

17.அனுஷம் - கோழி

18.கேட்டை - கோழி

19.மூலம் - கோழி

20.பூராடம் - கோழி

21.உத்திராடம் - கோழி

22.திருவோணம் - மயில்

23.அவிட்டம் - மயில்

24.சதயம் - மயில்

25.பூரட்டாதி - மயில்

26.உத்திரட்டாதி - மயில்

27.ரேவதி - மயில்

## நட்சத்திரமும், தமிழ் பெயரும்

ஜோதிடத்தின் அடிப்படையாக இருக்கும் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நமது முன்னோர்களால் வைக்கப்பட்ட தமிழ் பெயர்களை பற்றி அறிந்து கொள்வோம்.

நட்சத்திரம் - தமிழ்பெயர் :

01.அசுபதி/அஸ்வினி - புரவி

02.பரணி - அடுப்பு

03.கார்த்திகை/கிருத்திகை - ஆரல்

04.ரோகிணி - சகடு

05.மிருகசீரிஷம் - மான்றலை

06.திருவாதிரை - மூதிரை

07.புனர்பூசம் - கழை

08.பூசம் - கொடிறு

09.ஆயில்யம் - அரவு

10.மகம் - கொடுநுகம்

11.பூரம் - கணை

12.உத்திரம் - உத்தரம்

13.அஸ்தம் - கை

14.சித்திரை - அனுபை

15.சுவாதி - விளக்கு

16.விசாகம் - முறம்

17.அனுஷம் - பனை

18.கேட்டை - துலங்கொலி

19.மூலம் - குருகு

20.பூராடம் - முற்குலம்

21.உத்திராடம் - கடைக்குலம்

22.திருவோணம் - முக்கோல்

23.அவிட்டம் - காக்கை

24.சதயம் - செக்கு

25.பூரட்டாதி - நாழி

26.உத்திரட்டாதி - முரசு

27.ரேவதி - தோணி

## நட்சத்திரமும், ராசி மண்டலமும்

ஜோதிட சாஸ்திரத்தில் மிக மிக முக்கியமானது நட்சத்திரம் ஆகும். கிரகங்களை விட நட்சத்திரங்களுக்கு வலிமை அதிகம். ஒருவருடைய ஜாதகம், அவர் பிறந்த நட்சத்திரத்தின் அடிப்படையில்தான் அமைகிறது.

ஒருவர் எந்த நட்சத்திரத்தில் பிறந்துள்ளாரோ? அந்த நட்சத்திரம் எந்த ராசிக்கு உரியதோ? அதுவே அவரது ஜென்ம ராசியாகும். ராசிகள் மொத்தம் 12 உள்ளன. நட்சத்திரம் மொத்த 27 ஆகும். இங்கு ஒவ்வொரு நட்சத்திரமும் 4 பாதங்களாக பிரிக்கப்பட்டு 1, 2, 3, 4 பாதங்கள் என்று குறிக்கப்படுகின்றன.

### பாதம் என்றால் என்ன?

ஒரு நட்சத்திரத்தின் ஒளிக்கற்றைகளை பிரிப்பதே பாதங்கள். ஒளிக்கற்றைகளை நான்காக பிரிப்பதாகும். அதனால்தான் ஒவ்வொரு நட்சத்திரங்களுக்கும் 4 பாதங்கள் உள்ளன.

நாழிகை தான் நட்சத்திரங்களை பாதங்களாக பிரித்தெடுப்பதில் முக்கியமான ஒன்றாகும். அதாவது ஒரு நட்சத்திரம் என்றால் 60 நாழிகை. அதை நான்கு சம பாகங்களாக பிரித்தால் ஒவ்வொரு நட்சத்திரமும் 15 நாழிகை கொண்டிருக்கும். ஒரு நட்சத்திரத்தின் முதல் 15 நாழிகை முதல் பாதம், அடுத்த 15 நாழிகை இரண்டாம் பாதம். அதுபோல மற்ற பாதங்களை பிரித்துக் கொள்வார்கள்.

### ராசி மண்டலம் :

ஒரு ராசி மண்டலம் என்பது 360 பாகைகளை (டிகிரி) கொண்டது. இந்த ராசி மண்டலத்தில் 30 டிகிரியை கொண்டது ஒரு ராசி ஆகும். மண்டலத்தில் உள்ள 27 நட்சத்திரங்கள் சமமாக ஒவ்வொரு ராசிக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பகிரப்பட்ட நட்சத்திரங்கள் பாதங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாதத்திற்கும் ஒரு குறிப்பிட்ட டிகிரிகள் வழங்கப்பட்டு 12 ராசிகளில் இடம் பெறுமாறு செய்யப்பட்டுள்ளது.

ஒரு ராசியின் பாகைகள் (டிகிரி) - 30 பாகைகள்

ஒரு நட்சத்திரத்தின் பாகை - 13 பாகைகள் 20 கலைகள்

60 கலைகள் - 1 பாகை

ராசி மண்டலத்தில் இடம்பெற்றுள்ள ராசிகளும் அவற்றின் டிகிரிகள் மற்றும் ராசி ஒவ்வொன்றுக்கும் சரிசமமாக பிரித்து கொடுக்கப்பட்ட நட்சத்திர பாதங்கள் பின்வருமாறு.

மேஷ ராசி : 0 to 30 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

அஸ்வினி : 1,2,3,4

பரணி : 1,2,3,4

கிருத்திகை : 1

ரிஷப ராசி : 30 to 60 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

கிருத்திகை : 2,3,4

ரோகிணி : 1,2,3,4

மிருகசீரிஷம் : 1,2

மிதுன ராசி : 60 to 90 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

மிருகசீரிஷம் : 3,4

திருவாதிரை : 1,2,3,4

புனர்பூசம் : 1,2,3

கடக ராசி : 90 to 120 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

புனர்பூசம் : 4

பூசம் : 1,2,3,4

ஆயில்யம் : 1,2,3,4

சிம்ம ராசி : 120 to 150 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

மகம் : 1,2,3,4

பூரம் : 1,2,3,4

உத்திரம் : 1

கன்னி ராசி : 150 to 180 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

உத்திரம் : 2,3,4

அஸ்தம் : 1,2,3,4

சித்திரை : 1,2

துலாம் ராசி : 180 to 210 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

சித்திரை : 3,4

சுவாதி : 1,2,3,4

விசாகம் : 1,2,3

விருச்சக ராசி : 210 to 240 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

விசாகம் : 4

அனுஷம் : 1,2,3,4

கேட்டை : 1,2,3,4

தனுசு ராசி : 240 to 270 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

மூலம் : 1,2,3,4

பூராடம் : 1,2,3,4

உத்திராடம் : 1

மகர ராசி : 270 to 300 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

உத்திராடம் : 2,3,4

திருவோணம் : 1,2,3,4

அவிட்டம் : 1,2

கும்ப ராசி : 300 to 330 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

அவிட்டம் : 3,4

சதயம் : 1,2,3,4

பூரட்டாதி : 1,2,3

மீன ராசி : 330 to 360 டிகிரி

நட்சத்திர பாதங்கள்

பூரட்டாதி : 4

உத்திரட்டாதி : 1,2,3,4

ரேவதி : 1,2,3,4

## நட்சத்திரமும், குணநலன்களும்.

### அஸ்வினி

நட்சத்திரம் : அஸ்வினி

அஸ்வினி நட்சத்திரத்தின் ராசி : மேஷம்

அஸ்வினி நட்சத்திரத்தின் அதிபதி : கேது

அஸ்வினி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : செவ்வாய்

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

எழில்மிகு தோற்றத்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

மனசாட்சிக்கு கட்டுப்பட்டு அனைத்து காரியங்களையும் செய்யக்கூடியவர்கள்.

செல்வாக்குடன் வாழவேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவர்கள்.

எதிலும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

சுயமாக சிந்தித்து செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்.

நன்மை, தீமை என சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

ஆடை, அலங்காரத்தில் ஆர்வம் கொண்டவர்கள்.

திட்டமிட்ட காரியம் முடியும் வரை ஓயாதவர்கள்.

அமைதியான குணநலன்களை உடையவர்கள்.

சஞ்சலமான மனநிலையை உடையவர்கள்.

சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

பலவிதமான கலைகளை அறிந்தவர்கள்.

போராடும் மனப்பான்மை உடையவர்கள்.

இவர்களிடம் ஆன்மீக உணர்வு அதிகம் இருக்கும்.

எதற்கும் பயம் கொள்ளாதவர்கள்.

சிற்றின்ப வேட்கை உடையவர்கள்.

பிடிவாத குணம் உடையவர்கள்.

இவர்கள் வாதாடுவதில் வல்லவர்கள்.

புத்திகூர்மை உடையவர்கள்.

நிர்வாகத்திறமை உடையவர்கள்.

எவருக்கும் அடிப்பணியாதவர்கள்.

## பரணி

பரணி நட்சத்திரத்தின் ராசி : மேஷம்

பரணி நட்சத்திரத்தின் அதிபதி : சுக்கிரன்

பரணி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : செவ்வாய்

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

புத்திசாலித்தனமான பேச்சுத்திறமையால் பல கீர்த்திகளை பெறுவார்கள்.

மனதில் பட்டதை வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

விதவிதமான அணிகலன்கள் மற்றும் உடைகள் அணியக்கூடியவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்றார்போல் தன்னை மாற்றிக் கொள்ளக்கூடியவர்கள்.

மற்றவர்களை கவரக்கூடிய உடலமைப்பு கொண்டவர்கள்.

அறுசுவை உணவுகளை ருசித்து உண்ணக்கூடியவர்கள்.

தலைமை பண்பு அதிகம் கொண்டவர்கள்.

எதிரிகளை மிக சுலபமாக வெற்றி கொள்வார்கள்.

கோபம் அதிகம் உடையவர்களாக இருப்பார்கள்.

பொருள் சேர்ப்பதில் ஆர்வம் கொண்டவர்கள்.

எதிலும் எளிதில் திருப்தி அடைய மாட்டார்கள்.

சிற்றின்ப வேட்கையில் ஆர்வம் உடையவர்கள்.

கலைத்துறைகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

மற்றவர்களை எளிதில் நம்பமாட்டார்கள்.

குடும்பத்தின் மீது பற்று கொண்டவர்கள்.

நிதானமின்றி செயல்படக்கூடியவர்கள்.

சுகமான வாழ்வு வாழக்கூடியவர்கள்.

பேச்சுவன்மை உடையவர்கள்.

பயந்த சுபாவம் உடையவர்கள்.

## கிருத்திகை

கிருத்திகை நட்சத்திரத்தின் ராசி : மேஷம் மற்றும் ரிஷபம்

கிருத்திகை நட்சத்திரத்தின் அதிபதி : சூரியன்

கிருத்திகை நட்சத்திரம் முதல் பாத ராசி அதிபதி (மேஷம்) : செவ்வாய்

கிருத்திகை நட்சத்திரம் இரண்டு, மூன்று மற்றும் நான்காம் பாத ராசி அதிபதி (ரிஷபம்) : சுக்கிரன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

எதிலும் தைரியத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

உடல் வலிமை உடையவர்கள்.

கருணை உள்ளம் கொண்டவர்கள்.

எந்த காரியத்திலும் விரைவாக செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

வெளிப்படையாக பேசும் தன்மை கொண்டவர்கள்.

திடீரென்று சினம் கொள்ளும் தன்மை கொண்டவர்கள்.

எளிமையான குணநலன்களை உடையவர்கள்.

தன்னுடைய விருப்பம்போல் செயல்படக்கூடியவர்கள்.

இவர்களிடம் விட்டுக்கொடுத்து செல்லும் குணம் குறைவு.

இறை நம்பிக்கை உடையவர்கள்.

மற்றவர்களிடம் இருந்து எதிலும் வேறுபட்டு செயல்படக்கூடியவர்கள்.

சில இடங்களில் ஆணவமும், கர்வமும் கொண்டு செயல்படக்கூடியவர்கள்.

பயணம் சார்ந்த செயல்பாடுகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

கலைகளின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

எதிர்பாலின மக்களிடம் நட்புடன் பழகக்கூடியவர்கள்.

பொன், பொருட்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

கல்வி வேள்விகளில் சிறந்து விளங்கக்கூடியவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

எந்த காரியத்திலும் சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

உயரிய எண்ணம் கொண்டவர்கள்.

சண்டை புரிவதில் ஆர்வம் கொண்டவர்கள்.

தற்புகழ்ச்சி அதிகம் உடையவர்கள்.

## ரோகிணி

ரோகிணி நட்சத்திரத்தின் ராசி : ரிஷபம்

ரோகிணி நட்சத்திரத்தின் அதிபதி : சந்திரன்

ரோகிணி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சுக்கிரன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

கலைகளில் ஆர்வம் உடையவர்கள்.

எளிதில் கற்று கொள்ளும் தன்மை கொண்டவர்கள்.

பொன், பொருட்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

தோல்வியை விரும்பாதவர்கள்.

அழகான தோற்றம் கொண்டவர்கள்.

பொறுமை என்பது இவர்களிடம் குறைவு.

சிக்கன குணம் அதிகம் கொண்டவர்கள்.

சுகபோக வாழ்க்கை வாழ விரும்பக்கூடியவர்கள்.

மற்றவர்கள் பொருட்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

உணர்ச்சி வசப்படும் தன்மை கொண்டவர்கள்.

சிற்றின்பம் தொடர்பான செயல்பாடுகளில் விருப்பம் உடையவர்கள்.

புத்திக்கூர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

எதையும் நேர்மறையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

எதிர்கால குறிக்கோளுடன் செயல்படக்கூடியவர்கள்.

தலைமை பண்பு அதிகம் உடையவர்கள்.

தனது முடிவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கக்கூடியவர்கள்.

சுதந்திர குணம் அதிகம் உடையவர்கள்.

சாமர்த்தியமான செயல்பாடுகளால் சூழ்நிலையை தனது கட்டுப்பாட்டில் வைத்து கொள்ளக்கூடியவர்கள்.

மற்றவர்களிடம் வேலை வாங்குவதில் வல்லவர்கள்.

## மிருகசீரிஷம்

மிருகசீரிஷ நட்சத்திரத்தின் ராசி : ரிஷபம் மற்றும் மிதுனம்

மிருகசீரிஷ நட்சத்திரத்தின் அதிபதி : செவ்வாய்

மிருகசீரிஷ நட்சத்திரம் முதல் மற்றும் இரண்டாம் பாத ராசி அதிபதி (ரிஷபம்) : சுக்கிரன்

மிருகசீரிஷ நட்சத்திரம் மூன்று மற்றும் நான்காம் பாத ராசி அதிபதி (மிதுனம்) : புதன்

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

துணிச்சலான செயல்பாடுகளை உடையவர்கள்.

எவரிடத்திலும் பயம் கொள்ளாதவர்கள்.

வாதம் புரிவதில் வல்லவர்கள்.

மற்றவர்களை சார்ந்து செயல்படாதவர்கள்.

இவர்களிடம் முன்கோபம் அதிகமிருக்கும்.

எதிலும் நேர்மையான குணநலன்களை உடையவர்கள்.

எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள்.

எடுத்த காரியத்தை செய்து முடிக்கும் திறமை கொண்டவர்கள்.

தவறுகளை தட்டிக்கேட்கும் குணம் கொண்டவர்கள்.

விடாமுயற்சி உடையவர்கள்.

சுதந்திர குணம் அதிகம் உடையவர்கள்.

பல விஷயங்களை அறிந்தவர்கள்.

சிலர் பருத்த உடல்வாகு உடையவர்கள்.

எதிர்ப்புகளை எதிர்த்து போராடி வெற்றி கொள்ளக்கூடியவர்கள்.

மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டு தனிப்பட்ட முறையில் செயல்படக்கூடியவர்கள்.

சில நேரங்களில் சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் விட்டுக்கொடுத்து செல்லக்கூடியவர்கள்.

சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

ஞாபகத்திறன் அதிகம் கொண்டவர்கள்.

தனது முடிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடியவர்கள்.

## திருவாதிரை

திருவாதிரை நட்சத்திரத்தின் ராசி : மிதுனம்

திருவாதிரை நட்சத்திரத்தின் அதிபதி : ராகு

திருவாதிரை நட்சத்திரத்தின் ராசி அதிபதி : புதன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

முரட்டு குணம் உடையவர்கள்.

எந்த செயலிலும் தனக்கு ஆதாயம் இருக்கிறதா என்று சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

குடும்ப உறுப்பினர்களின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

நண்பர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கக்கூடியவர்கள்.

தற்பெருமைக்கு மயங்கக்கூடியவர்கள்.

அழகிய உடல்தோற்றம் உடையவர்கள்.

பொது வாழ்வில் ஆர்வம் கொண்டு ஈடுபடக்கூடியவர்கள்.

உறவினர்களால் ஆதாயமற்ற சூழல் உண்டாகும்.

எதிலும் நிதானமின்றி செயல்படக்கூடியவர்கள்.

வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

புகழ்ச்சிக்கு செவி சாய்க்கும் குணம் கொண்டவர்கள்.

சிலர் சுயநலம் கொண்டு எதிலும் செயல்படக்கூடியவர்கள்.

மற்றவர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

எதையும் எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

எந்த செயலையும் தானே முன்னின்று நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

மற்றவர்களிடம் பேசியே காரியத்தை சாதித்து கொள்ளக்கூடியவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் தங்கள் கருத்துக்களை மாற்றி கொள்ளக்கூடியவர்கள்.

தனது காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடியவர்கள்.

## புனர்பூசம்

புனர்பூசம் நட்சத்திரத்தின் ராசி : மிதுனம் மற்றும் கடகம்

புனர்பூசம் நட்சத்திரத்தின் அதிபதி : குரு

புனர்பூசம் நட்சத்திரம் முதல் இரண்டு, மூன்று பாத ராசி அதிபதி (மிதுனம்) : புதன்

புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாத ராசி அதிபதி (கடகம்) : சந்திரன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

மற்றவர்கள் செய்த உதவிகளை மறக்காதவர்கள்.

சுய மரியாதை எண்ணம் அதிகம் கொண்டவர்கள்.

மற்றவர்களிடம் உதவிகளை எதிர்பார்க்காதவர்கள்.

இறை நம்பிக்கை அதிகம் உடையவர்கள்.

மற்றவர்களை எடை போடுவதில் வல்லவர்கள்.

கற்பனை திறன் அதிகம் உடையவர்கள்.

பேச்சுத்திறமை அதிகம் உடையவர்கள்.

நேர்மறை எண்ணமும், சிந்தனைகளும் அதிகம் கொண்டவர்கள்.

எவருக்கும் தெரியாமல் பல விஷயங்களை மனதில் வைத்துக் கொள்ளக்கூடியவர்கள்.

ஏட்டு அறிவை காட்டிலும், அனுபவ அறிவு அதிகம் உடையவர்கள்.

அனைவரிடமும் நட்பாக பழகும் குணநலன்களை கொண்டவர்கள்.

பொய் பேசுபவர்களை வெறுக்கக்கூடியவர்கள்.

உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

எதிலும் நிதானமாக செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

சுகபோக வாழ்க்கை வாழ விரும்பக்கூடியவர்கள்.

அளித்த வாக்குறுதிகளை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்.

பருமனான தேகம் உடையவர்கள்.

குடும்ப உறுப்பினர்களின்மீது அன்பும் அதே சமயம் கண்டிப்பும் உடையவர்கள்.

யாரையும் அவ்வளவு எளிதில் நம்பமாட்டார்கள்.

எந்த காரியத்திலும் எளிமையை விரும்பக்கூடியவர்கள்.

சாமுத்திரிகா லட்சணம் பொருந்திய உடல் அமைப்பு உடையவர்கள்.

தனது சக்திக்கு தகுந்தாற்போல் மற்றவர்களுக்கு உதவக்கூடியவர்கள்.

## பூசம்

பூசம் நட்சத்திரத்தின் ராசி : கடகம்

பூசம் நட்சத்திரத்தின் அதிபதி : சனி

பூசம் நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சந்திரன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

எதற்கும் பயம் கொள்ளாதவர்கள்.

நீண்ட ஆயுளை உடையவர்கள்.

சொந்த பந்தங்களிடம் அன்பாக பழகக்கூடியவர்கள்.

மற்றவர்களை வழிநடத்தி செல்லும் குணம் கொண்டவர்கள்.

பொருள் ஈட்டுவதில் வல்லவர்கள்.

சுயநலம் அதிகம் கொண்டவர்கள்.

எந்த செயலையும் நிதானமாக செய்யும் பழக்கம் உடையவர்கள்.

வாசனை திரவியங்களின் மீது ஆர்வம் உடையவர்கள்.

அழகான முகம் அமைப்பை கொண்டவர்கள்.

பல விஷயங்களை அறிந்து வைத்து கொள்ளக்கூடியவர்கள்.

மனசாட்சிப்படி செயல்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

மற்றவர்களை கவரும் ஆற்றல் உடையவர்கள்.

எண்ணம் ஈடேறும் வரை கடினமாக உழைக்கக்கூடியவர்கள்.

தலைமை தாங்கும் பண்பு உடையவர்கள்.

திட்டமிட்ட காரியத்தில் வைராக்கியத்தோடு செயல்படக்கூடியவர்கள்.

எப்போதும் புத்துணர்ச்சியாக செயல்படக்கூடியவர்ககள்.

கடினமான செயல்களையும் எளிமையாக செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர்கள்.

எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் திறமை உடையவர்கள்.

## ஆயில்யம்

ஆயில்ய நட்சத்திரத்தின் ராசி : கடகம்

ஆயில்ய நட்சத்திரத்தின் அதிபதி : புதன்

ஆயில்ய நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சந்திரன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

நல்ல பேச்சாற்றல் உடையவர்கள்.

கல்வி அறிவில் மேம்பட்டவர்கள்.

அழகிய விழிகளை கொண்டவர்கள்.

நயம்பட பேசுவதில் வல்லவர்கள்.

பெற்றோர்களின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்கள்.

கடினமான உழைப்பை கொண்டவர்கள்.

உருவத்தோற்றத்தை கொண்டு இவர்களின் திறமைகளை எடைப்போட முடியாது.

மனதில் பட்டதை செய்யக்கூடியவர்கள்.

மன வலிமையையும், உடல் வலிமையும் கொண்டவர்கள்.

இயற்கையை அதிகம் விரும்பக்கூடியவர்கள்.

எந்த காரியத்திலும் நிதானமாக செயல்படக்கூடியவர்கள்.

பயணங்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

பேச்சுவன்மை உடையவர்கள்.

சஞ்சல மனப்பான்மை கொண்டவர்கள்.

எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள்.

ஒரே நேரத்தில் பல செயல்களை செய்து முடிக்கக்கூடியவர்கள்.

## மகம்

மகம் நட்சத்திரத்தின் ராசி : சிம்மம்

மகம் நட்சத்திரத்தின் அதிபதி : கேது

மகம் நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சூரியன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

எதிலும் தனித்தன்மை கொண்டவர்களாக இருப்பார்கள்.

சுறுசுறுப்பான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

அனுபவ அறிவு அதிகமிருக்கும்.

குடும்பத்தின் மேல் அதிக பாசம் கொண்டவர்கள்.

நல்ல நிர்வாகத்திறமை உடையவர்கள்.

இரக்கக்குணம் கொண்டவர்கள்.

கடவுள் நம்பிக்கை அதிகம் இருக்கும்.

கொள்கை பிடிப்பு குணம் கொண்டவர்கள்.

பயணங்களில் அதிக விருப்பம் கொண்டவர்கள்.

எல்லோரையும் கௌரவமாக நடத்தக்கூடியவர்கள்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேச மாட்டார்கள்.

பொருள் சேர்ப்பதில் விருப்பம் கொண்டவர்கள்.

வசீகரிக்கும் தன்மை கொண்டவர்கள்.

எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள்.

உண்மை குணம் கொண்டவர்கள்.

எதிலும் சிந்தித்து செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

நினைத்த காரியத்தை செய்வதற்கு எந்த எல்லை வரை செல்லக்கூடியவர்கள்.

தான் செய்தது தவறு என்ற விதத்தில் மன்னிப்பு கேட்கும் குணம் கொண்டவர்கள்.

தனது செயல்பாடுகளில் மற்றவர்கள் தலையிடுவதை விரும்பமாட்டார்கள்.

சுதந்திர தன்மையுடன் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

## பூரம்

பூரம் நட்சத்திரத்தின் ராசி : சிம்மம்

பூரம் நட்சத்திரத்தின் அதிபதி : சுக்கிரன்

பூரம் நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சூரியன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

அழகான உடல் அமைப்பை உடையவர்கள்.

பயணங்கள் மேற்கொள்வதில் அதிக ஆர்வமும், ஆசையும் உடையவர்கள்.

சேமிப்பதில் அதிக கவனம் செலுத்தக்கூடியவர்கள்.

அசாத்தியமான தைரியத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

கீர்த்தியோடு வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

பல கலைகளை கற்பதில் ஆர்வம் கொண்டவர்கள்.

தற்புகழ்ச்சியில் மயங்கக்கூடியவர்கள்.

இனிமையாக பேசுவதில் வல்லவர்கள்.

தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் குறைவு.

மற்றவர்களை சார்ந்து வாழக்கூடியவர்கள்.

சிலர் சுயநலமாக செயல்படக்கூடியவர்கள்.

அதீத நினைவாற்றல் கொண்டவர்கள்.

தர்மம் செய்வதில் விருப்பம் உடையவர்கள்.

உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

அலைபாயும் மனநிலையை உடையவர்கள்.

ஆடம்பர செலவுகள் செய்வதில் வல்லவர்கள்.

பல நேரங்களில் கற்பனையில் இருக்கக்கூடியவர்கள்.

புத்திக்கூர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

தெய்வ நம்பிக்கை உடையவர்கள்.

திட்டமிட்டபடி செயல்படாதவர்கள்.

எல்லோரையும் அனுசரித்து செல்லும் குணநலன்களை உடையவர்கள்.

நேர்த்தியான உடைகளை அணிவதில் விருப்பம் கொண்டவர்கள்.

## உத்திரம்

உத்திர நட்சத்திரத்தின் ராசி : சிம்மம் மற்றும் கன்னி

உத்திர நட்சத்திரத்தின் அதிபதி : சூரியன்

உத்திர நட்சத்திரம் முதல் பாத ராசி அதிபதி (சிம்மம்) : சூரியன்

உத்திர நட்சத்திரம் இரண்டு, மூன்று மற்றும் நான்காம் பாத ராசி அதிபதி (கன்னி) : புதன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

இவர்கள் சிறந்த மனவலிமை கொண்டவர்கள்.

எதிலும் நேர்மையான குணநலன்களை உடையவர்கள்.

கம்பீரமான நடைகளை கொண்டவர்கள்.

சொன்ன சொல்லை காப்பாற்றுவார்கள்.

செய்த உதவியை மறவாதவர்கள்.

கல்வியில் ஆர்வம் உடையவராக இருக்கக்கூடியவர்கள்.

எதிர்பாலினத்தவரை கவரும் உடலமைப்பு இருக்கும்.

இறைநம்பிக்கை அதிகம் உடையவர்கள்.

பொருள் சேர்ப்பதில் வல்லவர்கள்.

தலைமை தாங்கும் குணம் அதிகமாக இருக்கும்.

எதிலும் சிக்கனமாக செயல்படக்கூடியவர்கள்.

திட்டமிட்டு செயல்படுவதில் வல்லவர்கள்.

உறவினர்களிடமும், நண்பர்களிடமும் கனிவாக பழகும் தன்மை கொண்டவர்கள்.

சுயமரியாதை அதிகம் உடையவர்கள்.

தவறென்று தெரிந்தால் தட்டிக்கேட்கும் குணம் கொண்டவர்கள்.

அனுபவ அறிவு அதிகம் உடையவர்கள்.

பேச்சாற்றல் மூலம் அனைவரையும் கவரக்கூடியவர்கள்.

உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள்.

அனைவரிடத்திலும் கண்ணியமாக பழகக்கூடியவர்கள்.

## அஸ்தம்

அஸ்தம் நட்சத்திரத்தின் ராசி : கன்னி

அஸ்தம் நட்சத்திரத்தின் அதிபதி : சந்திரன்

அஸ்தம் நட்சத்திரத்தின் ராசி அதிபதி : புதன்

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

அழகான முகம் உடையவர்கள்.

வசீகரமான உடலமைப்பு உடையவர்கள்.

பேச்சுத்திறமை உடையவர்கள்.

சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

தலைமை தாங்கும் குணம் உடையவர்கள்.

தன்னம்பிகை அதிகம் உடையவர்கள்.

ஆடை, அலங்காரத்தில் விருப்பம் கொண்டவர்கள்.

கேளிக்கைகளில் ஆர்வம் உடையவர்கள்.

வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

புதியவற்றை கற்பதில் ஆர்வம் கொண்டவர்கள்.

கலைகள் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபாடு அதிகம் உடையவர்கள்.

நிதானமாக செயல்பட்டு தனது காரியத்தை நிறைவேற்றுவதில் வல்லவர்கள்.

நினைத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

பண விஷயத்தில் சிக்கனமாக இருக்கக்கூடியவர்கள்.

பிடிக்காத செயல்களை செய்யமாட்டார்கள்.

இயற்கையை ரசிக்கும் மனப்பான்மை கொண்டவர்கள்.

எப்போதும் மகிழ்வுடன் இருக்க விரும்பக்கூடியவர்கள்.

பெற்றோர்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்கள்.

## சித்திரை

சித்திரை நட்சத்திரத்தின் ராசி : கன்னி மற்றும் துலாம்

சித்திரை நட்சத்திரத்தின் அதிபதி : செவ்வாய்

சித்திரை நட்சத்திரம் முதல் மற்றும் இரண்டாம் பாத ராசி அதிபதி (கன்னி) : புதன்

சித்திரை நட்சத்திரம் மூன்று, நான்காம் பாத ராசி அதிபதி (துலாம்) : சுக்கிரன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

ஆன்மிக எண்ணம் கொண்டவர்களாக இருக்கக்கூடியவர்கள்.

கல்வி அறிவு உடையவர்கள்.

உழைக்கும் குணம் கொண்டவர்கள்.

மற்றவர்கள் பிரச்சனைகளில் தேவையின்றி தலையிடமாட்டார்கள்.

சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

தவறுகளை தைரியமாக சுட்டிக்காட்டும் தன்மை கொண்டவர்கள்.

வாசனை பொருட்களின் மீது ஆர்வம் உடையவர்கள்.

தனது முடிவுகளில் தீர்க்கமாக இருக்கக்கூடியவர்கள்.

சிலர் சஞ்சலமான மனம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

புத்திக்கூர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடியவர்கள்.

அழகிய உடல் அமைப்பை கொண்டவர்கள்.

தனது காரியத்தில் கருத்தாக இருக்கக்கூடியவர்கள்.

எதிலும் வேகமான செயல்பாடுகளை உடையவர்கள்.

எதையும் தைரியத்துடன் வெளிப்படுத்தும் குணம் கொண்டவர்கள்.

மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

குடும்ப உறுப்பினர்களின் மீது அன்பு அதிகம் கொண்டவர்கள்.

## சுவாதி

சுவாதி நட்சத்திரத்தின் ராசி : துலாம்

சுவாதி நட்சத்திரத்தின் அதிபதி : ராகு

சுவாதி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சுக்கிரன்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

சூழ்நிலைக்கு ஏற்ப சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

அலைபாயும் மனநிலையை கொண்டவர்கள்.

தன்மான குணம் அதிகம் கொண்டவர்கள்.

பேச்சுத்திறமை உடையவர்கள்.

லட்சியம் மிக்கவர்கள்.

சிறு விஷயங்களுக்கும் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள்.

சிலர் சுயநலத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

எல்லோரிடத்திலும் கனிவாக பழகும் தன்மை கொண்டவர்கள்.

தனது முடிவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடியவர்கள்.

மனோதிடம் உடையவர்கள்.

அமைதியான தோற்றம் கொண்டவர்கள்.

விளையாட்டு குணம் அதிகமிருக்கும்.

திட்டமிட்டு செயல்படக்கூடியவர்கள்.

அனைவரையும் வசீகரிக்கும் ஆற்றல் கொண்டவர்கள்.

நட்பு வட்டம் அதிகம் கொண்டவர்கள்.

சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

## விசாகம்

விசாக நட்சத்திரத்தின் ராசி : துலாம் மற்றும் விருச்சகம்

விசாக நட்சத்திரத்தின் அதிபதி : குரு

விசாக நட்சத்திர முதல் இரண்டு, மூன்று பாத ராசி அதிபதி (துலாம்) : சுக்கிரன்

விசாக நட்சத்திர நான்காம் பாத ராசி அதிபதி (விருச்சகம்) : செவ்வாய்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

அறச்செயல்கள் செய்வதில் ஆர்வம் உடையவர்கள்.

மற்றவர்களை நம்பாதவர்கள்.

அறிவாற்றல் உடையவர்கள்.

அழகிய முக அமைப்பு உடையவர்கள்.

நல்ல குணநலன்களை உடையவர்கள்.

பிரபலமானவர்களின் தொடர்புகளை கொண்டவர்கள்.

பல விஷயங்களை அறிந்தவர்கள்.

கர்வம் உடையவர்கள்.

பொறாமை குணம் உடையவர்கள்.

கணிதத் துறையில் ஈடுபாடு உடையவர்கள்.

புகழுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

எதிலும் தீர்க்கமான முடிவுகளை கொண்டவர்கள்.

பொறுமையான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

தர்ம காரியம் செய்வதில் ஈடுபாடு கொண்டவர்கள்.

கட்டுக்கோப்பான உடலமைப்பு உடையவர்கள்.

தனக்கென கோட்பாடுகளை கொண்டவர்கள்.

சுக போக வாழ்க்கையில் ஆர்வம் கொண்டவர்கள்.

எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள்.

## அனுஷம்

அனுஷம் நட்சத்திரத்தின் ராசி : விருச்சகம்

அனுஷம் நட்சத்திரத்தின் அதிபதி : சனி

அனுஷம் நட்சத்திரத்தின் ராசி அதிபதி : செவ்வாய்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

இவர்கள் வித்தியாசமான மனநிலையை கொண்டிருப்பார்கள்.

சிக்கனமான குணநலன்களை கொண்டவர்கள்.

அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

மற்றவர்களின் குணம் அறிந்து செயல்படக்கூடியவர்கள்.

இசையில் ஈடுபாடு கொண்டவர்கள்.

ஆழ்ந்த சிந்தனைகளை உடையவர்கள்.

இவர்கள் கடுமையான உழைப்பாளிகள்.

தாழ்வு மனப்பான்மை உடையவர்கள்.

வைராக்கிய குணம் கொண்டவர்கள்.

புண்ணிய காரியங்கள் செய்வதில் ஆர்வம் உடையவர்கள்.

வாக்குவன்மை உடையவர்கள்.

வாழ்க்கையில் ஏற்ற, தாழ்வுகள் அதிகம் சந்திக்கக்கூடியவர்கள்.

கடமை உணர்ச்சி அதிகம் கொண்டவர்கள்.

கோபத்தில் என்ன செய்கிறோம் என்பதை அறியாதவர்கள்.

இவர்களின் எண்ண ஓட்டங்களை அறிந்து கொள்வது கடினம்.

அனைத்து உயிர்களின் மீதும் அன்பு கொண்டவர்கள்.

இவர்கள் பசி தாங்க மாட்டார்கள்.

## கேட்டை

கேட்டை நட்சத்திரத்தின் ராசி : விருச்சகம்

கேட்டை நட்சத்திரத்தின் அதிபதி : புதன்

கேட்டை நட்சத்திரத்தின் ராசி அதிபதி : செவ்வாய்

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் அதிகம் கொண்டவர்கள்.

சுயநலம் இல்லாதவர்கள்.

அறிவுக்கூர்மை உடையவர்கள்.

விளையாட்டுத்தனம் உடையவர்கள்.

எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று எண்ணக்கூடியவர்கள்.

மனம் போன போக்கில் செயல்படக்கூடியவர்கள்.

நுட்பமான விஷயங்களில் ஆர்வம் கொண்டவர்கள்.

மற்றவர்களின் உதவியை எதிர்ப்பார்க்காதவர்கள்.

பிடிவாத குணம் கொண்டவர்கள்.

எதையும் எதிர்கொள்ளும் மனவலிமை உடையவர்கள்.

பெரிய நட்பு வட்டம் உடையவர்கள்.

எதையும் பேசியே சமாளிக்கக்கூடியவர்கள்.

சங்கீதத்தில் ஆர்வம் கொண்டவர்கள்.

எதையாவது சிந்தித்துக்கொண்டே இருப்பார்கள்.

மற்றவர்களின் அறிவுரைகளை விரும்பாதவர்கள்.

செய்நன்றி மறவாதவர்கள்.

காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடியவர்கள்.

மனதில் உள்ளதை வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

## மூலம்

மூல நட்சத்திரத்தின் ராசி : தனுசு

மூல நட்சத்திரத்தின் அதிபதி : கேது

மூல நட்சத்திரத்தின் ராசி அதிபதி : குரு

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

எவரிடத்திலும் பணிந்து செல்லாதவர்கள்.

கம்பீரமான தோற்றத்தை கொண்டவர்கள்.

மற்றவர்கள் கவரும்படியான நடவடிக்கைளை உடையவர்கள்.

எதிலும் துணிவுடன் செயல்படக்கூடியவர்கள்.

தலைமை தாங்கும் பண்பு கொண்டவர்கள்.

கௌரவமாக வாழ வேண்டும் என்று விரும்பக்கூடியவர்கள்.

அனைவரிடத்திலும் அன்பாக பழகக்கூடியவர்கள்.

சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்.

தனது முடிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடியவர்கள்.

பெற்றோர்களின் மீது அதிகம் பாசம் கொண்டவர்கள்.

எதிலும் போராடி வெற்றி பெறக்கூடியவர்கள்.

புதிய செயல்பாடுகளின் மீது ஆர்வம் உடையவர்கள்.

கலைகளின் மீது ஆர்வமுடையவர்கள்.

ஆடை, அணிகலன்கள் மேல் விருப்பம் உடையவர்கள்.

பிடிவாத குணம் கொண்டவர்கள்.

பயணம் மேற்கொள்வதில் அதிக ஆர்வம் கொண்டவர்கள்.

## பூராடம்

பூராட நட்சத்திரத்தின் ராசி : தனுசு

பூராட நட்சத்திரத்தின் அதிபதி : சுக்கிரன்

பூராட நட்சத்திரத்தின் ராசி அதிபதி : குரு

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

இவர்களுக்கு அலங்கார பொருட்களின் மீது அதிக ஆர்வம் இருக்கும்.

எதையும் எளிதில் புரிந்துக்கொள்ளும் தன்மை கொண்டவர்கள்.

தோல்வியை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் குறைவு.

மற்றவர்களிடம் திறமையாக வேலை வாங்குவதில் வல்லவர்கள்.

மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

மற்றவர்களை கவர்ந்து இழுக்கும் வாக்குவன்மை கொண்டவர்கள்.

எப்போதும் அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

தன்னுடைய முடிவுகளில் நிலையாக இருக்கக்கூடியவர்கள்.

சில விஷயங்களில் பிடிவாத குணம் கொண்டவர்கள்.

காரியங்களை திட்டமிட்டு செயல்படுத்துவதில் வல்லவர்கள்.

நிதானமாக செயல்பட்டு தனது காரியத்தை நிறைவேற்றி கொள்ளக்கூடியவர்கள்.

பாகுபாடின்றி அனைவரிடமும் பழகக்கூடியவர்கள்.

வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

தன்னம்பிக்கையுடன் செயல்படக்கூடியவர்கள்.

நேர்மையுடன் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

தன்னை நம்புபவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்கக்கூடியவர்கள்.

## உத்திராடம்

உத்திராட நட்சத்திரத்தின் ராசி : தனுசு மற்றும் மகரம்

உத்திராட நட்சத்திரத்தின் அதிபதி : சூரியன்

உத்திராட நட்சத்திரம் முதல் பாத ராசி அதிபதி (தனுசு) : குரு

உத்திராட நட்சத்திரம் இரண்டு, முன்று, நான்காம் பாத ராசி அதிபதி (மகரம்) : சனி

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

கம்பீரமான தோற்றம் உடையவர்கள்.

எவருக்கும் அடிபணியாதவர்கள்.

மனவலிமை உடையவர்கள்.

புத்திக்கூர்மை உடையவர்கள்.

உண்மையுடன் இருக்கக்கூடியவர்கள்.

நன்றி மறவாதவர்கள்.

உடல் பலம் கொண்டவர்கள்.

நிர்வாகத்திறமை உடையவர்கள்.

சேமிப்பதில் ஆர்வம் கொண்டவர்கள்.

வைராக்கிய குணம் கொண்டவர்கள்.

தன்னைத்தானே உயர்வாக எண்ணக்கூடியவர்கள்.

மற்றவர்களின் பொருட்களின் மீது ஆசை இல்லாதவர்கள்.

எப்பொழுதும் நண்பர்களுடன் இருக்கக்கூடியவர்கள்.

தான, தர்ம காரியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள்.

காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயல்படக்கூடியவர்கள்.

ஆன்மிகம் தொடர்பான காரியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள்.

மனதில் தோன்றியதை வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

## திருவோணம்

திருவோண நட்சத்திரத்தின் ராசி : மகரம்

திருவோண நட்சத்திரத்தின் அதிபதி : சந்திரன்

திருவோண நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சனி

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

திடீரென கோபப்படும் குணம் கொண்டவர்கள். ஆனால் உடனே சமாதானமும் அடைந்து விடுவார்கள்.

எதிலும் கவனமாக செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

பசி தாங்காதவர்கள்.

சிக்கனமாக இருக்கக்கூடியவர்கள்.

பெரியவர்களிடத்தில் மரியாதை உடன் நடக்கக்கூடியவர்கள்.

மற்றவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டி தண்டிக்கக்கூடியவர்கள்.

சுத்தமான ஆடைகள் அணிவதை விரும்பக்கூடியவர்கள்.

சமூகம் சார்ந்த செயல்பாடுகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

தன்னால் முடிந்தளவு மற்றவர்களுக்கு உதவி செய்யும் குணம் கொண்டவர்கள்.

எதிலும் தெளிவான சிந்தனைகளை கொண்டவர்கள்.

நுண்கலைகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

எல்லா சூழ்நிலைகளிலும் புன்னகையுடன் இருக்கக்கூடியவர்கள்.

முன்னெச்சரிக்கை உணர்வு அதிகம் கொண்டவர்கள்.

மற்றவர்களின் மனம் அறிந்து செயல்படக்கூடியவர்கள்.

அழகிய உடல் தோற்றம் கொண்டவர்கள்.

எதிலும் சுறுசுறுப்பாக செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

யாரையும் துன்புறுத்த எண்ணாதவர்கள்.

## அவிட்டம்

அவிட்டம் நட்சத்திரத்தின் ராசி : மகரம் மற்றும் கும்பம்

அவிட்டம் நட்சத்திரத்தின் அதிபதி : செவ்வாய்

அவிட்டம் நட்சத்திரத்தின் முதல் மற்றும் இரண்டாம் பாத ராசி அதிபதி (மகரம்) : சனி

அவிட்டம் நட்சத்திரத்தின் மூன்று மற்றும் நான்காம் பாத ராசி அதிபதி (கும்பம்) : சனி

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

சுறுசுறுப்பான மனநிலையை கொண்டவராக இருப்பார்கள்.

சிக்கனமாக செலவு செய்து வாழக்கூடியவர்கள்.

அழகான தோற்றம் கொண்டவர்கள்.

எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செயல்படக்கூடியவர்கள்.

எவரிடத்திலும் பயம் இல்லாதவர்கள்.

எச்சரிக்கை உணர்வு அதிகம் உடையவர்கள்.

முன்கோபம் உடையவர்கள்.

பேச்சுக்களில் வேகமும், செயல்பாடுகளில் நிதானமும் கொண்டவர்கள்.

எதிலும் துணிச்சலுடன் செயல்படக்கூடியவர்கள்.

தியாக மனப்பான்மை உடையவர்கள்.

துணையை அதிகம் நேசிக்கக்கூடியவர்கள்.

அனுபவ அறிவு அதிகம் கொண்டவர்கள்.

இளகிய மனம் உடையவர்கள்.

தனது காரியத்தில் விடாமுயற்சியுடன் செயல்படக்கூடியவர்கள்.

தெய்வ காரியங்களில் ஈடுபாடு உடையவர்கள்.

புதுவிதமான சிந்தனைகளை உடையவர்கள்.

செல்வாக்கு உடையவர்கள்.

சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் செயல்படக்கூடியவர்கள்.

பலனை எதிர்பாராமல் மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

பெற்றோர்களின்மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

வைராக்கிய குணம் கொண்டவர்கள்.

## சதயம்

சதயம் நட்சத்திரத்தின் ராசி : கும்பம்

சதயம் நட்சத்திரத்தின் அதிபதி : ராகு

சதயம் நட்சத்திரத்தின் ராசி அதிபதி : சனி

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

மற்றவர்களை கவரக்கூடியவர்கள்.

புதிய தேடல்களை கொண்டவர்கள்.

தன்னுடைய விருப்பம் போல் செயல்படக்கூடியவர்கள்.

புத்தகங்களை படிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர்கள்.

வசீகரமான உடலமைப்பை கொண்டவர்கள்.

திட்டமிட்டு செயல்படுவதில் வல்லவர்கள்.

எல்லோரிடமும் உண்மையாக பழகுவார்கள்.

எந்த காரியத்திலும் சிந்தித்து செயல்படுவார்கள்.

மன்னிக்கும் குணம் கொண்டவர்கள்.

கல்வி வேள்விகளில் சிறந்து விளங்கக்கூடியவர்கள்.

கேளிக்கை சம்பந்தப்பட்ட செயல்பாடுகளில் விருப்பம் கொண்டவர்கள்.

உழைத்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

ஆன்மிக செயல்பாடுகளில் விருப்பம் உடையவர்கள்.

எப்போதும் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்க வேண்டும் என்று எண்ணக்கூடியவர்கள்.

## பூரட்டாதி

பூரட்டாதி நட்சத்திரத்தின் ராசி : கும்பம் மற்றும் மீனம்

பூரட்டாதி நட்சத்திரத்தின் அதிபதி : குரு

பூரட்டாதி நட்சத்திரம் ஒன்று, இரண்டு, மூன்றாம் பாத ராசி அதிபதி (கும்பம்) : சனி

பூரட்டாதி நட்சத்திரம் நான்காம் பாத ராசி அதிபதி (மீனம்) : குரு

### நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

மனதில் எதையாவது சிந்தித்து கொண்டே இருக்கக்கூடியவர்கள்.

முன்கோபம் கொண்டவர்கள்.

மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற மனநிலையை கொண்டவர்கள்.

பிரச்சனைகளுக்கு எளிதில் முடிவு அளிக்கக்கூடியவர்கள்.

எதையும் நிதானமாக சிந்தித்து முடிவெடுத்து செயல்படக்கூடியவர்கள்.

உணர்வு மற்றும் உணர்ச்சிகளை அடக்கி ஆளக்கூடியவர்கள்.

தனது வேலைகளில் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடியவர்கள்.

கருணை உள்ளம் கொண்டவர்கள்.

வாக்குச் சாதுர்யம் உடையவர்கள்.

நல்ல பழக்க வழக்கங்களை கொண்டிருக்கக்கூடியவர்கள்.

பெற்றோர்களின் மீது அதிக அன்பு உடையவர்கள்.

மற்றவர்கள் பேச்சுக்கு மதிப்பளிக்கக்கூடியவர்கள்.

பிரபலமானவர்களின் தொடர்புகளை கொண்டவர்கள்.

பல விஷயங்களை அறிந்தாலும் எதுவும் தெரியாதது போல் இருக்கக்கூடியவர்கள்.

தன்னை பற்றி யாரும் குறை சொல்வதை விரும்பாதவர்கள்.

மற்றவர்கள் மனம் கோணாத படி நடந்து கொள்ளக்கூடியவர்கள்.

தவறென்று அறியும் பட்சத்தில் அதை தைரியமாக எதிர்த்து பேசும் தன்மை கொண்டவர்கள்.

## உத்திரட்டாதி

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் ராசி : மீனம்

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் அதிபதி : சனி

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : குரு

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

எதிலும் விவேகத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

எந்த சூழ்நிலையையும் சமாளிக்கக்கூடிய மனவலிமை கொண்டவர்கள்.

வாழ்க்கையில் உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

கோபமான பேச்சுக்களை கொண்டவர்கள்.

பிடிவாத குணம் கொண்டவர்கள்.

மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல் உதவி செய்யக்கூடியவர்கள்.

நிலையில்லாத மனநிலையை உடையவர்கள்.

மற்றவர்களுக்கு உதவுவதில் முழு ஈடுபாடுடன் செயல்படக்கூடியவர்கள்.

வெளியூர் தொடர்பான பயணங்களில் ஆர்வம் கொண்டவர்கள்.

அமைதியாக காட்சி அளிக்கக்கூடியவர்கள்.

உடல் பலம் கொண்டவர்கள்.

துரிதமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

எந்தவொரு சூழ்நிலையிலும் நடுநிலை தவறாமல் செயல்படக்கூடியவர்கள்.

எந்தவொரு விஷயத்தையும் ஒன்றுக்கு பலமுறை சிந்தித்து முடிவு எடுக்கக்கூடியவர்கள்.

புதிது புதிதாக எதையாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

கொடுத்த வாக்கை எந்த நிலையிலும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

## ரேவதி

ரேவதி நட்சத்திரத்தின் ராசி : மீனம்

ரேவதி நட்சத்திரத்தின் அதிபதி : புதன்

ரேவதி நட்சத்திரத்தின் ராசி அதிபதி : குரு

நட்சத்திரத்தின் பொதுவான குணங்கள் :

பயணம் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் தங்களை மாற்றிக் கொள்வதில் வல்லவர்கள்.

மற்றவர்களை கவரும் உடல் அமைப்பு கொண்டவர்கள்.

அடிக்கடி மாறும் மனநிலையை கொண்டவர்கள்.

சாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

பேச்சாற்றல் கொண்டவர்களாக இருப்பார்கள்.

தர்ம வழியில் செயல்பட விரும்பக்கூடியவர்கள்.

சிக்கனமாக செயல்படும் குணம் கொண்டவர்கள்.

உடல் பலம் உடையவர்கள்.

எந்தவொரு செயலையும் சீர்தூக்கி முடிவு எடுக்கும் நீதிமான்களாக இருப்பார்கள்.

முன்கோபம் கொண்டவர்களாக இருக்கக்கூடியவர்கள்.

எதிலும் சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

எந்த துறையாக இருந்தாலும் அதில் நிபுணத்துவம் கொண்டவராக இருக்கக்கூடியவர்கள்.

மற்ற உயிரினங்களின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

உடனிருப்பவர்களை பற்றி புரிந்து கொண்டு செயல்படக்கூடியவர்கள்.

## எந்த நட்சத்திரத்தில் எதை செய்யலாம்?

நமது முன்னோர்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு நட்சத்திரங்களை வகுத்து வைத்துள்ளனர். அவை யாதெனில் எல்லா நட்சத்திரங்களிலும், எல்லா காரியங்களும் செய்வது

என்பது உசிதமானதல்ல. சில காரியங்களுக்கு இந்த நட்சத்திரங்கள் மட்டுமே உகந்தது என்று நம் முன்னோர்கள் பகுத்து அதை நமக்கு அளித்தும் சென்றுள்ளனர்.

எந்த ஒரு காரியமும் செய்வதற்கு முன்பாக அன்றைய தினத்தில் உள்ள நட்சத்திரங்களை பார்த்து, நாம் செய்யும் காரியத்திற்கு இந்த நட்சத்திரம் ஏதாவது ஒரு வகையில் ஆதரவாக இருக்கின்றதா? என்று ஆராய்ந்து செய்வது, செய்ய நினைத்த காரியங்களில் எதிர்பார்த்த பலன்களை நாம் அடைய உதவும்.

### அஸ்வினி நட்சத்திரம் :

புதுமனைக்கு குடிப்போக நல்ல நாள்.

உபநயனம் செய்ய ஏற்ற நாள்.

தானியம் வாங்க சிறப்பான நாள்.

குழந்தைக்கு பெயர் வைக்க சிறந்த நாள்.

குழந்தைக்கு சாதம் ஊட்ட மேன்மையான நாள்.

புதிய பயணம் மேற்கொள்ள நல்ல நாள்.

உயர் அதிகாரிகளை சந்திப்பதற்கு ஏற்ற நாள்.

ஆபரணம் அணிய சிறப்பான நாள்.

தொழில் தொடர்பான முயற்சிகளை ஆரம்பிக்க உகந்த நாள்.

மருந்து உண்ணுவதற்கு நல்ல நாள்.

கால்நடைகளை வாங்குவதற்கும், விற்பதற்கும் ஏற்ற நாள்.

விதை விதைப்பதற்கு நல்ல நாள்.

விவசாயம் தொடர்பான பணிகளை மேற்கொள்ள உகந்த நாள்.

திருமணம் மற்றும் மாங்கல்யம் போன்ற நற்காரியங்கள் செய்ய சிறந்த நாள்.

### பரணி நட்சத்திரம் :

தானியங்களை சேகரிக்க சிறந்த நாள்.

குளம் வெட்டுவதற்கு ஏற்ற நாள்.

உபகரணங்களை வாங்கவும், பயன்படுத்தவும் சிறப்பான நாள்.

வாகனம் வாங்குவதற்கு நல்ல நாள்.

யாகம் வளர்க்க உகந்த நாள்.

பகைமையை வெல்ல மேன்மையான நாள்.

புதிய அடுப்பு அமைக்க சிறந்த நாள்.

மூலிகைகளை பறிக்க நல்ல நாள்.

கதிர் அறுக்க ஏற்ற நாள்.

வேலி அமைக்க சிறப்பான நாள்.

கணக்கு வழக்குகளை பார்க்க நல்ல நாள்.

திருஷ்டி காரியங்களுக்கு பரிகாரம் செய்ய ஏற்ற நாள்.

கால்நடைகள் வாங்க சிறந்த நாள்.

### கிருத்திகை நட்சத்திரம் :

பூமியை தோண்டி சுரங்கம் அமைக்க உகந்த நாள்.

ஹோமம் வளர்க்க ஏற்ற நாள்.

புதிதாக சமையல் தொழில் தொடங்க நல்ல நாள்.

புதிய மருந்துகளை தயாரிக்க ஏற்ற நாள்.

மூலிகைகள் சேகரிக்க சிறப்பான நாள்.

அறுவை சிகிச்சை செய்துகொள்ள உகந்த நாள்.

கடன் கொடுக்கவும், அடைக்கவும் நல்ல நாள்.

சூளைக்கு நெருப்பு வைக்க ஏற்ற நாள்.

ஆயுதம் வாங்க அல்லது புதிதாக செய்ய சிறந்த நாள்.

ரோகிணி நட்சத்திரம் :

குழந்தைக்கு பெயர் வைக்க உகந்த நாள்.

குழந்தையை தொட்டிலில் போட சிறப்பான நாள்.

வளைகாப்பு (சீமந்தம்) நடத்த நல்ல நாள்.

விவாகம் செய்ய ஏற்ற நாள்.

புதிய பதவிகளை ஏற்க சிறந்த நாள்.

விருந்துண்ண உகந்த நாள்.

மிருகசீரிஷம் நட்சத்திரம் :

திருமணம் செய்ய நல்ல நாள்.

பெயர் சூட்டுவதற்கு உகந்த நாள்.

உபநயனம் அணிய ஏற்ற நாள்.

காது குத்த சிறந்த நாள்.

சீமந்தம் செய்ய நல்ல நாள்.

புதிய ஆபரணங்கள் செய்ய ஏற்ற நாள்.

தானியம் வாங்க சிறப்பான நாள்.

விதை விதைக்க உகந்த நாள்.

புதுமனை குடிப்புக ஏற்ற நாள்.

கிணறு வெட்ட உகந்த நாள்.

யாத்திரை செல்ல ஏற்ற நாள்.

கல்வி கற்க தொடங்குவதற்கு உகந்த நாள்.

கடற்பயணம் மேற்கொள்ள சிறப்பான நாள்.

கதிர் அறுக்க ஏற்ற நாள்.

நோயாளிகள் மருந்துண்ண உகந்த நாள்.

வாஸ்து பூஜை செய்ய நல்ல நாள்.

வாகனப் பயிற்சி மேற்கொள்ள ஏற்ற நாள்.

புதிய பொறுப்புகளை ஏற்று கொள்ள சிறந்த நாள்.

கால்நடைகள் வாங்க உகந்த நாள்.

### திருவாதிரை நட்சத்திரம் :

காது குத்த நல்ல நாள்.

குழந்தையை தொட்டிலில் இட சிறந்த நாள்.

தானியத்தை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த நாள்.

தெய்வ பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்ற நாள்.

மந்திரங்கள் ஜெபிப்பதற்கு நல்ல நாள்.

சூளைக்கு நெருப்பிட ஏற்ற நாள்.

நோயாளிகள் குளிக்க உகந்த நாள்.

மதிற்சுவர் கட்ட சிறந்த நாள்.

சாஸ்திரம் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ள ஏற்ற நாள்.

உபகரணங்களை வாங்கவும், பயன்படுத்தவும் உகந்த நாள்.

நீண்ட நாட்களாக பூட்டியுள்ள கதவுகளை திறப்பதற்கு உகந்த நாள்.

### புனர்பூசம் நட்சத்திரம் :

உபநயனம் அணிய உகந்த நாள்.

காது குத்த நல்ல நாள்.

புதுமனை குடி பெயர ஏற்ற நாள்.

புதிய ஆபரணம் வாங்குவதற்கு சிறந்த நாள்.

வியாபாரம் தொடங்க நல்ல நாள்.

பெயர் சூட்டுவதற்கு உகந்த நாள்.

விவாகம் செய்ய சிறப்பான நாள்.

சீமந்தம் செய்ய நல்ல நாள்.

கால்நடைகள் வாங்க ஏற்ற நாள்.

வேத சாஸ்திரங்களை கற்க உகந்த நாள்.

பந்தக்கால் நடுவதற்கு சிறந்த நாள்.

கிரகப்பிரவேசம் செய்ய உகந்த நாள்.

அதிகார பதவிகளை ஏற்று கொள்ள நல்ல நாள்.

தற்காப்பு கலைகளை கற்று கொள்ள ஏற்ற நாள்.

### பூசம் நட்சத்திரம் :

மஞ்சள் நீராட்ட ஏற்ற நாள்.

விருந்துண்ண நல்ல நாள்.

காது குத்த உகந்த நாள்.

சீமந்தம் செய்ய சிறந்த நாள்.

பெயர் வைக்க உகந்த நாள்.

விதை விதைக்க ஏற்ற நாள்.

குழந்தைகளுக்கு சாதம் ஊட்டுவதற்கு உகந்த நாள்.

மொட்டை அடிக்க ஏற்ற நாள்.

திருமணம் செய்ய நல்ல நாள்.

புதிய வீடு கட்டுவதற்கு உகந்த நாள்.

தாலி செய்ய நல்ல நாள்.

புதிய ஆடை, ஆபரணம் வாங்க சிறந்த நாள்.

உயர் பதவிகளை ஏற்க உகந்த நாள்.

புதிய வேலையில் சேர ஏற்ற நாள்.

வீடு, மனை வாங்க நல்ல நாள்.

வாகனம் வாங்க நல்ல நாள்.

வங்கியில் சேமிப்பு தொடங்க உகந்த நாள்.

விவசாயம் சார்ந்த வேலைகள் அனைத்தும் செய்ய நல்ல நாள்.

தற்காப்பு கலைகள் கற்க நல்ல நாள்.

போட்டிகளில் கலந்து கொள்ள சிறந்த நாள்.

### ஆயில்யம் நட்சத்திரம் :

நவகிரக சாந்தி செய்ய ஏற்ற நாள்.

கிணறு, குளம் வெட்டுவதற்கு உகந்த நாள்.

மந்திர பிரயோகம் செய்ய நல்ல நாள்.

எதிர்ப்புகளை வெல்வதற்கு ஏற்ற நாள்.

மருந்து தயாரிக்க சிறந்த நாள்.

மூலிகைகள் சேகரிக்க உகந்த நாள்.

மந்திரங்களை ஜெபிக்க நல்ல நாள்.

யோகாசன பயிற்சி செய்ய ஏற்ற நாள்.

விவசாயம் மேற்கொள்ள சிறந்த நாள்.

ஆயுத பயிற்சி மேற்கொள்ள உகந்த நாள்.

வேட்டைகளுக்கு செல்ல ஏற்ற நாள்.

குஸ்தி மற்றும் மல்யுத்த போட்டிகளில் கலந்து கொள்ள நல்ல நாள்.

### மகம் நட்சத்திரம் :

கதிரறுக்க சிறந்த நாள்.

திருமணம் செய்ய உகந்த நாள்.

வாகனம் வாங்க ஏற்ற நாள்.

கிணறு வெட்டுவதற்கு சிறப்பான நாள்.

மருந்து உண்ணுவதற்கு சிறந்த நாள்.

விதை விதைக்க உகந்த நாள்.

தானியம் வாங்க ஏற்ற நாள்.

கால்நடைகளை பழக்க சிறப்பான நாள்.

மகான்களை தரிசிக்க நல்ல நாள்.

ஆபரணங்கள் செய்ய சிறந்த நாள்.

தற்காப்பு கலைகளை பயில உகந்த நாள்.

வேத விரதங்களை பூர்த்தி செய்ய ஏற்ற நாள்.

வீடு கட்ட ஆரம்பிக்க சிறப்பான நாள்.

தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க நல்ல நாள்.

பூரம் நட்சத்திரம் :

மருந்து உண்ணுவதற்கு சிறந்த நாள்.

நவகிரக சாந்தி செய்ய ஏற்ற நாள்.

தற்காப்பு கலைகள் கற்க உகந்த நாள்.

விஷமருந்து தயாரிக்க நல்ல நாள்.

கால்நடைகள் வாங்க சிறப்பான நாள்.

ஓவியம் வரைய அல்லது எழுத தொடங்க ஏற்ற நாள்.

நோயாளிகள் மருந்து உண்பதற்கும், குளிப்பதற்கும் நல்ல நாள்.

வழக்குகளை வாதிட உகந்த நாள்.

உத்திர நட்சத்திரம் :

புதிய வாகனங்கள் வாங்க ஏற்ற நாள்.

விதை விதைக்க சிறப்பான நாள்.

வியாபாரம் தொடங்க நல்ல நாள்.

ஆயுத பயிற்சி மேற்கொள்ள சிறந்த நாள்.

தெய்வ பிரதிஷ்டை செய்ய உகந்த நாள்.

ஆபரணங்கள் செய்ய ஏற்ற நாள்.

நீர்நிலைகள் தோண்டுவதற்கு சிறப்பான நாள்.

புதுமனை குடி போக நல்ல நாள்.

குழந்தைக்கு பெயர் வைக்க சிறந்த நாள்.

வளைகாப்பு (சீமந்தம்) நடத்த உகந்த நாள்.

ஆடை, அணிகலன்களை வாங்க ஏற்ற நாள்.

விவாகம் போன்ற சுபகாரியங்கள் செய்ய சிறப்பான நாள்.

குழந்தையை தொட்டிலில் இட நல்ல நாள்.

வியாதிக்கு மருந்து உட்கொள்ள சிறந்த நாள்.

புதிய வேலையில் சேர்வதற்கு உகந்த நாள்.

அஸ்தம் நட்சத்திரம் :

உபநயனம் செய்ய ஏற்ற நாள்.

ஆபரணங்கள் செய்ய சிறந்த நாள்.

சீமந்தம் செய்ய சிறப்பான நாள்.

காதுகுத்த நல்ல நாள்.

கல்வி கற்க தொடங்குவதற்கு ஏற்ற நாள்.

யாத்திரை செல்ல சிறந்த நாள்.

ஆடை, ஆபரணங்கள் வாங்க உகந்த நாள்.

வண்டி, வாகனங்கள் வாங்க சிறப்பான நாள்.

புதுமனை புகுவதற்கு நல்ல நாள்.

கடற்பயணம் மேற்கொள்ள ஏற்ற நாள்.

விதை விதைக்க சிறந்த நாள்.

தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த நாள்.

தானியங்கள் விற்க சிறப்பான நாள்.

மந்திரங்கள் கற்க நல்ல நாள்.

உயர் அதிகாரிகளை பார்க்க ஏற்ற நாள்.

மருந்துண்ணுவதற்கு சிறந்த நாள்.

புதிய வேலைக்கு விண்ணப்பிக்க உகந்த நாள்.

வியாபாரம் தொடங்குவதற்கு சிறப்பான நாள்.

கிணறு வெட்டுவதற்கு நல்ல நாள்.

சங்கீதம் கற்க ஏற்ற நாள்.

### சித்திரை நட்சத்திரம் :

திருமணம் செய்ய நல்ல நாள்.

உழவு செய்வதற்கு ஏற்ற நாள்.

குழந்தைக்கு மொட்டையடிக்க சிறப்பான நாள்.

காதுகுத்த நல்ல நாள்.

குழந்தைக்கு பெயர் வைக்க சிறந்த நாள்.

புதுமனை புகுவதற்கு உகந்த நாள்.

அன்னதானம் செய்ய நல்ல நாள்.

விதை விதைக்க ஏற்ற நாள்.

வண்டி, வாகனங்கள் வாங்க சிறப்பான நாள்.

நாட்டிய அரங்கேற்றம் செய்ய நல்ல நாள்.

புத்தகம் வெளியிட சிறந்த நாள்.

குளம், கிணறு வெட்டுவதற்கு உகந்த நாள்.

குழந்தைக்கு சாதம் ஊட்டுவதற்கு நல்ல நாள்.

தானியத்தை களஞ்சியத்தில் சேர்க்க சிறந்த நாள்.

சுவாதி நட்சத்திரம் :

மொட்டை அடிக்க நல்ல நாள்.

குழந்தைக்கு பெயர் சூட்டுவதற்கு ஏற்ற நாள்.

விதை விதைக்க சிறந்த நாள்.

தானியம் வாங்க உகந்த நாள்.

திருமணம் செய்ய சிறப்பான நாள்.

புதியதாக சமையல் தொழில் தொடங்க நல்ல நாள்.

மாங்கல்யம் செய்ய ஏற்ற நாள்.

வீடு, வாகனம் வாங்க சிறந்த நாள்.

ஆயுத பயிற்சி மேற்கொள்ள உகந்த நாள்.

நோயாளிகளை குளிக்க வைக்க சிறப்பான நாள்.

சிகிக்சை மேற்கொள்ள நல்ல நாள்.

அன்னதானம் செய்ய ஏற்ற நாள்.

கடல் மார்க்க பயணங்களை மேற்கொள்ள சிறந்த நாள்.

புதிய ஆடை, ஆபரணம் அணிய உகந்த நாள்.

கல்வி, ஜோதிடம் மற்றும் மருத்துவம் கற்க சிறப்பான நாள்.

மல்யுத்தம் போட்டிகளில் பங்கேற்க நல்ல நாள்.

### விசாகம் நட்சத்திரம் :

சிற்ப கலை கற்க உகந்த நாள்.

நாட்டியம் பயில நல்ல நாள்.

அக்னி தொடர்பான காரியங்கள் செய்ய ஏற்ற நாள்.

மந்திரம் கற்க சிறந்த நாள்.

தேவ புத்ரு பூஜை செய்ய உகந்த நாள்.

விதை விதைக்க ஏற்ற நாள்.

கிணறு, குளத்தை சீர்படுத்த சிறந்த நாள்.

புதிய ஆடை, ஆபரணங்கள் அணிய நல்ல நாள்.

போட்டிகளில் பங்குபெற ஏற்ற நாள்.

மருந்துண்ணுவதற்கு சிறந்த நாள்.

### அனுஷம் நட்சத்திரம் :

திருமண செய்ய உகந்த நாள்.

சீமந்த செய்ய நல்ல நாள்.

மஞ்சள் நீராடுவதற்கு சிறந்த நாள்.

குழந்தைக்கு பெயர் சூட்டுவதற்கு ஏற்ற நாள்.

உயர் பதவி ஏற்க நல்ல நாள்.

வாகனம் வாங்க உகந்த நாள்.

உபநயனம் செய்ய நல்ல நாள்.

புதுமனை குடிபெயர சிறப்பான நாள்.

தானியம் சேர்க்க ஏற்ற நாள்.

தானியம் வாங்க நல்ல நாள்.

விதை விதைக்க உகந்த நாள்.

கல்வி கற்க தொடங்குவதற்கு சிறப்பான நாள்.

வாஸ்துபடி வீடு கட்ட தொடங்க சிறந்த நாள்.

புது ஆடை, ஆபரணம் அணிய ஏற்ற நாள்.

தெய்வத்தை பிரதிஷ்டை செய்ய உகந்த நாள்.

கடற்பயணம் மேற்கொள்ள நல்ல நாள்.

வாசற்கால் வைக்க சிறந்த நாள்.

கேட்டை நட்சத்திரம் :

வழக்குகளை பேசி தீர்க்க உகந்த நாள்.

குளம், கிணறு வெட்டுவதற்கு சிறந்த நாள்.

இயந்திரங்கள் செய்வதற்கு ஏற்ற நாள்.

சுரங்கம் தோண்டுவதற்கு நல்ல நாள்.

வாகனங்கள் வாங்க சிறப்பான நாள்.

சூளைக்கு நெருப்பிடுவதற்கு உகந்த நாள்.

கால்நடைகள் வாங்குவதற்கும், விற்பதற்கும் சிறந்த நாள்.

பழைய ஆபரணங்களை மாற்றுவதற்கு ஏற்ற நாள்.

கடன் வாங்க நல்ல நாள்.

மூலம் நட்சத்திரம் :

திருமணம் செய்ய நல்ல நாள்.

கிரகப்பிரவேசம் செய்ய உகந்த நாள்.

வண்டி, வாகனங்கள் வாங்க ஏற்ற நாள்.

பயணங்கள் மேற்கொள்ள சிறந்த நாள்.

விதை விதைக்க சிறப்பான நாள்.

மருந்து சாப்பிடுவதற்கு நல்ல நாள்.

தானியம் வாங்க ஏற்ற நாள்.

குழந்தைக்கு பெயர் வைக்க உகந்த நாள்.

பரிகார பூஜை மேற்கொள்ள நல்ல நாள்.

பூராடம் நட்சத்திரம் :

கால்நடைகள் வாங்க ஏற்ற நாள்.

வண்டி, வாகனங்கள் வாங்க சிறந்த நாள்.

ஆடை, ஆபரணங்கள் வாங்க நல்ல நாள்.

கடன்களை அடைக்க சிறப்பான நாள்.

மருந்து சாப்பிடுவதற்கு ஏற்ற நாள்.

கிணறு, குளம் வெட்ட உகந்த நாள்.

நோயாளிகளை குளிக்கவைக்க நல்ல நாள்.

உபகரணங்களை பிரயோகம் செய்ய சிறப்பான நாள்.

### உத்திராடம் நட்சத்திரம் :

நிச்சயதார்த்தம் செய்ய நல்ல நாள்.

திருமணம் செய்ய உகந்த நாள்.

வளைகாப்பு (சீமந்தம்) நடத்த சிறந்த நாள்.

பெயர் சூட்டுவதற்கு ஏற்ற நாள்.

குழந்தைக்கு சாதம் ஊட்டுவதற்கு சிறப்பான நாள்.

காது குத்துவதற்கு நல்ல நாள்.

மொட்டை அடிக்க உகந்த நாள்.

தானியங்கள் அறுவடை செய்ய சிறந்த நாள்.

விதை விதைக்க ஏற்ற நாள்.

தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க சிறப்பான நாள்.

உயர் பதவிகளை ஏற்க நல்ல நாள்.

நந்தவனம் அமைக்க உகந்த நாள்.

முத்து, சங்கு சேகரிக்க சிறந்த நாள்.

குழந்தையை தொட்டிலில் போட ஏற்ற நாள்.

குழந்தைகளை பள்ளியில் சேர்க்க சிறப்பான நாள்.

புதுமனை புகுவதற்கு நல்ல நாள்.

வீடு, வாகனங்கள் வாங்க உகந்த நாள்.

சாஸ்திரம் கற்பதற்கு சிறந்த நாள்.

புதியதாக சமையல் தொழில் தொடங்க ஏற்ற நாள்.

மல்யுத்தம் செய்ய சிறப்பான நாள்.

மாயவித்தைகள் பயிலுவதற்கு நல்ல நாள்.

பயணங்கள் மேற்கொள்ள உகந்த நாள்.

வங்கி கணக்கு தொடங்க சிறந்த நாள்.

வியாபாரம் தொடங்குவதற்கு ஏற்ற நாள்.

புதிய வேலையில் சேர்வதற்கு சிறப்பான நாள்.

நடன அரங்கேற்றம் செய்ய நல்ல நாள்.

பத்திரங்கள் பதிவு செய்ய உகந்த நாள்.

உயில் எழுதுவதற்கு சிறந்த நாள்.

### திருவோணம் நட்சத்திரம் :

பெண் பார்க்க செல்ல நல்ல நாள்.

ஆபரணங்கள் செய்ய ஏற்ற நாள்.

விவாகம் செய்ய சிறந்த நாள்.

வளைகாப்பு (சீமந்தம்) நடத்த உகந்த நாள்.

குழந்தைக்கு பெயர் சூட்ட சிறப்பான நாள்.

புதிய ஆடை, ஆபரணங்கள் அணிய நல்ல நாள்.

காதுகுத்த ஏற்ற நாள்.

கால்நடைகள் வாங்க சிறந்த நாள்.

கிணறு வெட்டுவதற்கு உகந்த நாள்.

படிப்பை துவங்குவதற்கு சிறப்பான நாள்.

நவகிரக சாந்தி செய்ய நல்ல நாள்.

புதிய வீட்டிற்கு குடிப்பெயர ஏற்ற நாள்.

விதை விதைக்க சிறந்த நாள்.

விருந்து படைக்க உகந்த நாள்.

உபநயனம் மேற்கொள்ள நல்ல நாள்.

வங்கி கணக்கு தொடங்க சிறப்பான நாள்.

கடற்பயணம் மேற்கொள்ள ஏற்ற நாள்.

### அவிட்டம் நட்சத்திரம் :

ஆபரணங்கள் செய்ய உகந்த நாள்.

குழந்தைக்கு பெயர் வைக்க சிறப்பான நாள்.

திருமணம் செய்ய ஏற்ற நாள்.

சீமந்தம் செய்ய சிறந்த நாள்.

உபநயனம் மேற்கொள்ள நல்ல நாள்.

குழந்தைக்கு மொட்டையடிக்க உகந்த நாள்.

எழுத்தறிவிக்க சிறப்பான நாள்.

மருந்து சாப்பிடுவதற்கு ஏற்ற நாள்.

வாஸ்து சாந்தி செய்ய சிறந்த நாள்.

குழந்தையை பள்ளியில் சேர்க்க நல்ல நாள்.

வாகனம் கற்றுக்கொள்ள உகந்த நாள்.

பதவி பொறுப்பேற்க சிறப்பான நாள்.

புதிய ஆடைகள் வாங்க ஏற்ற நாள்.

கடற்பயணம் மேற்கொள்ள உகந்த நாள்.

அதிகாரிகளை சந்திக்க சிறந்த நாள்.

நோயாளிகளை குளிக்க வைக்க நல்ல நாள்.

பிரயாணம் மேற்கொள்ள உகந்த நாள்.

### சதயம் நட்சத்திரம் :

புதுமனை குடி போக நல்ல நாள்.

மாடு வாங்குவதற்கு உகந்த நாள்.

சிற்பங்கள் செதுக்க ஏற்ற நாள்.

திருமணம் செய்ய சிறந்த நாள்.

குழந்தைக்கு பெயர் வைக்க சிறப்பான நாள்.

கல்வி கற்க தொடங்குவதற்கு நல்ல நாள்.

கிரகப்பிரவேசம் செய்ய உகந்த நாள்.

வீடு கட்டுவதற்கு ஏற்ற நாள்.

விதைகள் விதைக்க சிறந்த நாள்.

தானியம் வாங்க சிறப்பான நாள்.

குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு நல்ல நாள்.

யாத்திரை மேற்கொள்ள உகந்த நாள்.

### பூரட்டாதி நட்சத்திரம் :

வயல்வெளிகளை மேடுபடுத்த (ஏற்றம்) உகந்த நாள்.

மாடு வாங்க நல்ல நாள்.

வாகனங்கள் வாங்க சிறப்பான நாள்.

கடன்களை தீர்க்க ஏற்ற நாள்.

தேவதைகளை பிரதிஷ்டை செய்ய சிறந்த நாள்.

மந்திரம் ஜெபிக்க உகந்த நாள்.

மந்திரம் உபதேசம் செய்ய நல்ல நாள்.

கிணறு வெட்டுவதற்கு சிறப்பான நாள்.

மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்ற நாள்.

விவகாரம் முடிக்க சிறந்த நாள்.

செங்கல் சூளையில் நெருப்பிடுவதற்கு உகந்த நாள்.

வேலையாட்களை நியமிக்க நல்ல நாள்.

### உத்திரட்டாதி நட்சத்திரம் :

வளைகாப்பு (சீமந்தம்) நடத்த நல்ல நாள்.

பெயர் சூட்ட உகந்த நாள்.

உபநயனம் மேற்கொள்ள சிறந்த நாள்.

விவாகம் செய்ய ஏற்ற நாள்.

மோட்ச காரியம் மேற்கொள்ள சிறப்பான நாள்.

தாலிக்கு பொன் உருக்க நல்ல நாள்.

தேவதைகளை பிரதிஷ்டை செய்ய சிறந்த நாள்.

குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு ஏற்ற நாள்.

மொட்டையடித்து காது குத்த சிறப்பான நாள்.

குழந்தைக்கு சாதம் ஊட்டுவதற்கு நல்ல நாள்.

கல்வியை தொடங்க உகந்த நாள்.

ஆயுதப்பயிற்சி மேற்கொள்ள சிறந்த நாள்.

ஆடை அணிகலன்கள் அணிய ஏற்ற நாள்.

வாகனங்கள் வாங்க சிறப்பான நாள்.

மருந்து சாப்பிடுவதற்கு நல்ல நாள்.

நாட்டியம் பயிலுவதற்கு உகந்த நாள்.

புது வேலைக்கு விண்ணப்பிக்க சிறந்த நாள்.

கும்பாபிஷேகம் செய்ய ஏற்ற நாள்.

அக்னி தொடர்பான காரியங்களை மேற்கொள்ள சிறப்பான நாள்.

குளம், கிணறு வெட்ட நல்ல நாள்.

### ரேவதி நட்சத்திரம் :

குழந்தைக்கு பெயர் சூட்டுவதற்கு ஏற்ற நாள்.

குழந்தைக்கு காதுகுத்த சிறப்பான நாள்.

பெண் அழைக்க உகந்த நாள்.

உபநயனம் மேற்கொள்ள சிறப்பான நாள்.

மஞ்சள் நீராட்டுவதற்கு நல்ல நாள்.

புதுமனை புகுவதற்கு ஏற்ற நாள்.

வளைகாப்பு (சீமந்தம்) நடத்த நல்ல நாள்.

மாங்கல்யம் செய்ய சிறப்பான நாள்.

திருமணம் செய்ய உகந்த நாள்.

குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு சிறப்பான நாள்.

புது வீடு கட்டுவதற்கு நல்ல நாள்.

பொது சபை கூட்டுவதற்கு ஏற்ற நாள்.

புதிய வேலைக்கு சேருவதற்கு சிறப்பான நாள்.

ஆழ்குழாய் கிணறு அமைக்க நல்ல நாள்.

வாகனங்கள் வாங்க ஏற்ற நாள்.

நோயாளிகள் மருந்து சாப்பிடுவதற்கு சிறப்பான நாள்.

சங்கீதம், நாட்டியம் மற்றும் கல்வி கற்க தொடங்குவதற்கு உகந்த நாள்.

ஆடை, ஆபரணங்கள் வாங்க சிறந்த நாள்.

விவசாய தொழில் செய்ய நல்ல நாள்.

## மேல்நோக்கு நாளில் செய்ய வேண்டியவை

மேல்நோக்கு நாட்கள், கீழ்நோக்கு நாட்கள், சமநோக்கு நாட்கள் என்றால் என்ன? அந்த நாட்களில் என்னென்ன வேலைகள் செய்யலாம்? என்பதை பற்றி பார்க்கலாம்.

இந்த நாட்கள் அனைத்தும் எதன் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன என்பதைக் பார்த்தோமானால் இவைகள் அனைத்தும் நட்சத்திரத்தின் அடிப்படையிலேயே பிரித்து வகுக்கப்பட்டுள்ளன.

அப்படியானால் இந்நாட்களுக்கு என்று தனித்தனி நட்சத்திரங்கள் உள்ளன. அவைகள் பின்வருமாறு

மேல்நோக்கு நாளுக்குரிய நட்சத்திரங்கள் :

ரோகிணி

திருவாதிரை

பூசம்

உத்திரம்

உத்திராடம்

திருவோணம்

அவிட்டம்

சதயம்

உத்திரட்டாதி போன்ற 9 நட்சத்திரங்களும் மேல்நோக்கு நட்சத்திரங்கள் ஆகும்.

இந்த மேல்நோக்கு நட்சத்திரங்கள் ஊர்த்துவமுத நட்சத்திரங்கள் என்றழைக்கப்படும். மேல்நோக்கு நட்சத்திரம் உள்ள நாளில் மேல் எழும்பக்கூடிய செயல்களை செய்வது நன்மை அளிக்கும்.

மேல்நோக்கு நாளில் செய்ய வேண்டிய செயல்கள் :

மரம் நடுவதற்கு நல்ல நாள்.

மதில் சுவர் எழுப்ப உகந்த நாள்.

வீடு கட்டுவதற்கு சிறப்பான நாள்.

வாசற்படி அமைப்பதற்கு சிறந்த நாள்.

கொட்டகை அமைக்க நல்ல நாள்.

உயர் பதவி பெறுவதற்கு உகந்த நாள்.

வியாபாரம் தொடங்குவதற்கு சிறப்பான நாள்.

வீடு வாங்குவதற்கு ஏற்ற நாள்.

மேல்நோக்கி வளரக்கூடிய விதைகளை விதைப்பதற்கு சிறந்த நாள்.

## கீழ்நோக்கு நாளில் செய்ய வேண்டியவை

கீழ்நோக்கு நாள் என்றால் என்ன? இந்நாளில் என்னென்ன வேலைகளை செய்யலாம்? என்பதை பற்றி பார்ப்போம்.

கீழ்நோக்கி செய்யக்கூடிய செயல்களை கீழ்நோக்கு தினத்தில் செய்வது நன்மை அளிக்கும்.

பூமிக்கு கீழ்நோக்கி செய்யக்கூடிய செயல்களை செய்ய உகந்த நட்சத்திரங்களாக ஒரு சில நட்சத்திரங்களை நமது முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

இந்த கீழ்நோக்கு நட்சத்திரங்கள் அதோமுக நட்சத்திரங்கள் என்றழைக்கப்படும்.

கீழ்நோக்கு நாளுக்குரிய நட்சத்திரங்கள் :

பரணி

கிருத்திகை

ஆயில்யம்

மகம்

பூரம்

விசாகம்

மூலம்

பூராடம்

பூரட்டாதி போன்ற ஒன்பது நட்சத்திரங்களும் கீழ்நோக்கு நட்சத்திரங்கள் ஆகும்.

கீழ்நோக்கு நாளில் செய்ய வேண்டிய செயல்கள் :

குளம், கிணறு வெட்டுவதற்கு உகந்த நாள்.

போர்வெல் தோண்டுவதற்கு நல்ல நாள்.

சுரங்கம் தோண்டுவதற்கு சிறப்பான நாள்.

மண்ணிற்கு கீழ் வளரும் காய்கறிகள் மற்றும் கிழங்குகளை பயிரிடுவதற்கு ஏற்ற நாளாகும்.

## சமநோக்கு நாளில் செய்ய வேண்டியவை

சமநோக்கு நாள் என்றால் என்ன? இந்நாளில் என்னென்ன வேலைகளை செய்யலாம்? என்பதை பற்றி பார்ப்போம்.

சமமான வேலைகளை சமநோக்கு தினத்தில் செய்தால் நன்மை அளிக்கும்.

பூமிக்கு மேல்நோக்கி, கீழ்நோக்கி செய்யப்படும் செயல்கள் இல்லாமல் செய்யக்கூடிய செயல்களை செய்ய உகந்த நட்சத்திரங்களாக ஒரு சில நட்சத்திரங்களை நமது முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

இந்த சமநோக்கு நட்சத்திரங்கள் த்ரியக்முக் நட்சத்திரங்கள் என்றழைக்கப்படும்.

சமநோக்கு நாளுக்குரிய நட்சத்திரங்கள் :

அஸ்வினி

மிருகசீரிஷம்

புனர்பூசம்

அஸ்தம்

சித்திரை

சுவாதி

அனுஷம்

கேட்டை

ரேவதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்கள் சமநோக்கு நட்சத்திரங்கள் ஆகும்.

சமநோக்கு நாளில் செய்ய வேண்டிய செயல்கள் :

வாகனங்கள் வாங்குவதற்கு ஏற்ற நாள்.

வீட்டுக்கு தளம் அமைக்க நல்ல நாள்.

கால்நடைகள் வாங்குவதற்கு உகந்த நாள்.

நிலம் வாங்குவதற்கு சிறப்பான நாள்.

சாலை அமைப்பதற்கு சிறந்த நாள்.

கிரையம் செய்ய ஏற்ற நாள்.

கால்வாய் சீர்செய்வதற்கு நல்ல நாள்.

நிலத்தைப் பதப்படுத்துவதற்கு சிறப்பான நாள்.

வயல்களை உழுவதற்கு சிறந்த நாள்.

வாசற்கால் மற்றும் தூண் அமைக்க ஏற்ற நாள்.

## எந்தெந்த நட்சத்திரங்களில் ஒரு செயலை செய்யக்கூடாது?

ஒரு செயலை செய்வதற்கு எவ்விதம் நட்சத்திரங்கள் ஆதரவாக இருக்கின்றதோ, சில செயல்களை செய்வதற்கு சில நட்சத்திரங்கள் பாதகமாகவும் இருக்கின்றன.

இந்த நட்சத்திரங்கள் வரும் நாட்களில் ஒரு குறிப்பிட்ட செயல்களை செய்யாமல் இருப்பது உத்தமம் ஆகும்.

மேற்கொண்டு நாம் செய்யும் பட்சத்தில் நாம் எதிர்பார்த்த சாதகமான முடிவுகள் சற்று காலதாமதமாக அல்லது நாம் எதிர்பார்த்ததற்கு எதிராகவோ நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஒரு செயலை செய்யவதற்கு ஆகாத நட்சத்திரகள் :

பரணி

கிருத்திகை

திருவாதிரை

ஆயில்யம்

மகம்

பூரம்

சித்திரை

சுவாதி

விசாகம்

கேட்டை

பூராடம்

பூரட்டாதி

ஆகிய 12 நட்சத்திரங்களும் சில குறிப்பிட்ட செயல்களை தவிர்ப்பது நன்மையளிக்கும். இந்த நட்சத்திரங்களில் சில காரியங்களை தவிர்த்தல் வேண்டும்.

அதாவது,

கடன் கொடுப்பதை தவிர்த்தல் வேண்டும்.

பிரயாணம் மேற்கொள்வது தவிர்த்தல் வேண்டும்.

நோயாளிகள் மருந்து சாப்பிடுவதை தவிர்த்தல் வேண்டும்.

திருமணம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

கிரகப்பிரவேசம் செய்வதை தவிர்க்க வேண்டும்.

## எந்தெந்த நட்சத்திரத்தில் என்னென்ன செய்யலாம்?

நமது முன்னோர்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு நட்சத்திரங்களை வகுத்து வைத்துள்ளனர். அவை யாதெனில் எல்லா நட்சத்திரங்களிலும், எல்லா காரியங்களையும் செய்வது என்பது உசிதமானதல்ல. சில காரியங்களுக்கு இந்த நட்சத்திரங்கள் மட்டுமே உகந்தது என்று நம் முன்னோர்கள் பகுத்து அதை நமக்கு அளித்தும் சென்றுள்ளனர்.

எந்த ஒரு காரியமும் செய்வதற்கு முன்பாக அன்றைய தினத்தில் உள்ள நட்சத்திரங்களை பார்த்து, நாம் செய்யும் காரியத்திற்கு இந்த நட்சத்திரம் ஏதாவது ஒரு வகையில் ஆதரவாக இருக்கின்றதா? என்று ஆராய்ந்து செய்வது, செய்ய நினைத்த காரியங்களில் எதிர்பார்த்த பலன்களை நாம் அடைய உதவும்.

அந்த வகையில் நாம் எந்தெந்த நட்சத்திரத்தன்று என்னென்ன காரியங்களை செய்யலாம்? என்பதை பற்றி தெரிந்து கொள்வோம்.

### மாங்கல்யம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் :

மாங்கல்யம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் என்று சில நட்சத்திரங்களை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அசுவினி, ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி, சித்திரை ஆகிய நட்சத்திரங்கள் மாங்கல்யம் செய்ய உகந்த நட்சத்திரங்களாகும்.

### திருமணம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் :

திருமணம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் என்று சில நட்சத்திரங்களை நம் முன்னோர்கள் வகுத்து உள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

ரோகிணி, மிருகசீரிஷம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் திருமணம் செய்ய உகந்த நட்சத்திரங்களாகும்.

### சாந்தி முகூர்த்தம் வைக்க உகந்த நட்சத்திரங்கள் :

திருமணமான தம்பதிகளுக்கு சாந்தி முகூர்த்தம் வைக்க உகந்த நட்சத்திரங்களை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

ரோகிணி, உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி, அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்கள் சாந்தி முகூர்த்தம் வைக்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### சீமந்தம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் :

கர்ப்பமான பெண்களுக்கு செய்யப்படும் சடங்குகளில் ஒன்றான சீமந்தம் செய்ய உகந்த நட்சத்திரங்களை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், அஸ்தம், உத்திரட்டாதி, திருவோணம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் சீமந்தம் செய்ய உகந்த நட்சத்திரங்களாகும்.

### குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு உகந்த நட்சத்திரங்கள் :

குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு உகந்த நட்சத்திரங்களை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு உகந்த நட்சத்திரங்களாகும்.

### காதுகுத்து வைக்க உகந்த நட்சத்திரங்கள் :

குழந்தைகளுக்கு காதுகுத்து வைக்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் குழந்தைகளுக்கு காதுகுத்து வைக்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### கல்வி கற்க உகந்த நட்சத்திரங்கள் :

குழந்தைகள் கல்வி கற்கும் வயதினை அடைந்தவுடன் முதன் முதலில் கல்வி கற்க பள்ளிகளில் சேர்க்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் கல்வி கற்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### பூணூல் அணிவிப்பதற்கு உகந்த நட்சத்திரங்கள் :

ஆண் குழந்தைகளுக்கு பூணூல் அணிவிப்பதற்கு உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் பூணூல் அணிவிப்பதற்கு உகந்த நட்சத்திரங்களாகும்.

### புதிய வாகனம் வாங்க உகந்த நட்சத்திரங்கள் :

புதிய வாகனம் வாங்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திரட்டாதி, திருவோணம், உத்திராடம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் புதிய வாகனம் வாங்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### விவசாயம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் :

விவசாயம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

ரோகிணி, புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், மூலம், உத்திரட்டாதி, உத்திராடம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் விவசாயம் செய்ய உகந்த நட்சத்திரங்களாகும்.

### விதை விதைக்க உகந்த நட்சத்திரங்கள் :

விதை விதைக்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, மிருகசீரிஷம், பூசம், புனர்பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் விதை விதைக்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### கதிரறுக்க உகந்த நட்சத்திரங்கள் :

கதிரறுக்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

பரணி, ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், விசாகம், அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் கதிரறுக்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### கிரக ஆரம்பம் (பூமி பூஜை) செய்ய உகந்த நட்சத்திரங்கள் :

கிரக ஆரம்பம் (பூமி பூஜை) செய்ய உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், சுவாதி, அனுஷம், உத்திராடம், சுவாதி, திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் கிரக ஆரம்பம் (பூமி பூஜை) செய்ய உகந்த நட்சத்திரங்களாகும்.

### தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த நட்சத்திரங்கள் :

தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

பரணி, ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, மகம், உத்திரம், அஸ்தம், அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### தானியம் செலவிட உகந்த நட்சத்திரங்கள் :

தானியம் செலவிட உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் தானியம் செலவிட உகந்த நட்சத்திரங்களாகும்.

### கால்நடைகள் வாங்க உகந்த நட்சத்திரங்கள் :

கால்நடைகள் வாங்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், மகம், பூரம், விசாகம், அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் கால்நடைகள் வாங்க உகந்த நட்சத்திரங்களாகும்.

### பொன் நகைகள் அணிவதற்கு உகந்த நட்சத்திரங்கள் :

பொன் நகைகள் அணிவதற்கு உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, மிருகசீரிஷம், பூசம், அஸ்தம், சித்திரை, அனுஷம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் பொன் நகைகள் அணிவதற்கு உகந்த நட்சத்திரங்களாகும்.

### புதிய உடைகள் அணிய உகந்த நட்சத்திரங்கள் :

புதிய உடைகள் அணிய உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், உத்திராடம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் புதிய உடைகள் அணிய உகந்த நட்சத்திரங்களாகும்.

### கிரகப்பிரவேசம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் :

கிரகப்பிரவேசம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், அனுஷம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் கிரகப்பிரவேசம் செய்ய உகந்த நட்சத்திரங்களாகும்.

### நோயாளிகளை குளிக்க வைக்க உகந்த நட்சத்திரங்கள் :

நோயாளிகளை குளிக்க வைக்க உகந்த நட்சத்திரங்கள் என்று நம் முன்னோர்கள் ஒரு சில நட்சத்திரங்களை வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

அஸ்வினி, ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், திருவாதிரை, பூசம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் நோயாளிகளை குளிக்க வைக்க உகந்த நட்சத்திரங்களாகும்.

## திதி

ஜோதிடத்தின் அடிப்படை அங்கங்களில் ஒன்றாக கருதப்படுவது திதி ஆகும். வடமொழியில் திதி என்ற சொல்லுக்கு தொலைவு என்பது பொருள் ஆகும். அதேபோல் திதி என்பது சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம்.

சந்திரன் வளர்வதும், தேய்வதுமாக இருப்பதால் இருவகையான திதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாதமும் 30 திதிகள் கடைபிடிக்கப்படுகின்றன. இதில் இரண்டு பட்சங்கள் உள்ளன. அவை கிருஷ்ண பட்சம் அல்லது தேய்பிறை மற்றும் சுக்கில பட்சம் அல்லது வளர்பிறை ஆகும்.

| **தேய்பிறை திதிகள் (கிருஷ்ண பட்சம்)** | **வளர்பிறை திதிகள் (சுக்கில பட்சம்)** | **நாட்கள்** |
|---|---|---|
| பிரதமை | பிரதமை | முதல் நாள் |
| துவிதியை | துவிதியை | இரண்டாம் நாள் |
| திருதியை | திருதியை | மூன்றாம் நாள் |
| சதுர்த்தி | சதுர்த்தி | நான்காம் நாள் |
| பஞ்சமி | பஞ்சமி | ஐந்தாம் நாள் |
| சஷ்டி | சஷ்டி | ஆறாம் நாள் |
| சப்தமி | சப்தமி | ஏழாம் நாள் |
| அஷ்டமி | அஷ்டமி | எட்டாம் நாள் |
| நவமி | நவமி | ஒன்பதாம் நாள் |
| தசமி | தசமி | பத்தாம் நாள் |
| ஏகாதசி | ஏகாதசி | பதினொன்றாம் நாள் |
| துவாதசி | துவாதசி | பனிரெண்டாம் நாள் |
| திரயோதசி | திரயோதசி | பதின்மூன்றாம் நாள் |
| சதுர்த்தசி | சதுர்த்தசி | பதினான்காம் நாள் |
| அமாவாசை | பௌர்ணமி | - |

## திதிகளும், சுபச் செயல்களும்

திதி எனப்படுவது பஞ்சாங்கத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். மொத்தம் முப்பது திதிகள் உள்ளன. அமாவாசையை அடுத்து சதுர்த்தசி வரையிலான 15 திதிகள் வளர்பிறை (சுக்லபட்சம்) காலமாகும். பௌர்ணமியை அடுத்து சதுர்த்தசி வரையிலான 15 திதிகள் தேய்பிறை (கிருஷ்ண பட்சம்) காலமாகும். இதில் சில திதிகளைப் பற்றி இப்பொழுது பார்ப்போம்.

நம் முன்னோர்கள் எந்தவொரு செயலையும் செய்வதற்கு முன்னர் அதை எந்த திதியில் செய்தால் சிறப்பான பலன்களைப் பெற முடியும் என்பதை அறிந்து அதற்கேற்ப செய்தார்கள். இப்பொழுது எந்த திதியில் எந்த செயல்களை செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

### பிரதமை :

பிரதமை திதிக்கு அதிதேவதை அக்னி. வாஸ்து காரியங்கள் செய்வதற்கும், திருமணம் செய்வதற்கும், வளர்பிறை மற்றும் தேய்பிறை பிரதமை தினம் உகந்ததாகும்.

பிரதமை நாளன்று அக்னி சம்பந்தமான காரியங்களிலும் ஈடுபடலாம் மற்றும் மதச் சடங்குகளை மேற்கொள்ளலாம்.

### துவிதியை :

துவிதியை திதிக்கு அதிதேவதை பிரம்மன். துவிதியை திதியில் அரசு காரியங்களை ஆரம்பிக்கலாம். கட்டிடம் கட்டுவதற்கான அஸ்திவாரம் போடலாம்.

மேலும், திருமணம் செய்யலாம். ஆடை, அணிகலன்களை அணியலாம். விரதம் இருக்கலாம்.

### திருதியை :

திருதியை திதிக்கு அதிதேவதை கௌரி (பராசக்தி). இந்த திதியில் சங்கீதம் கற்க ஆரம்பிக்கலாம். குழந்தைக்கு முதன்முதலாக அன்னம் ஊட்டலாம்.

அழகு கலையில் ஈடுபடலாம். சீமந்தம் செய்யலாம். சிற்ப காரியங்களில் ஈடுபடலாம். சகல சுப காரியங்களுக்கும் உகந்த திதி இது.

### சதுர்த்தி :

சதுர்த்தி திதிக்கு அதிதேவதை எமன் மற்றும் விநாயகர். இந்த சதுர்த்தி திதியை முற்கால மன்னர்கள் படையெடுப்புக்கு உகந்த நாளாக தேர்ந்தெடுப்பார்கள். எதிரிகளை வெல்ல, விஷ சாஸ்திரம், அக்னிப் பயன்பாடு (நெருப்பு சம்பந்தமான காரியங்களை) செய்ய உகந்த திதி இது.

மேலும், ஜாதகத்தில் கேது தோஷம் உள்ளவர்கள், இந்த திதி நாளில் (சங்கடஹர சதுர்த்தி) விநாயகரை வழிபடுவதன் மூலம் கேது தோஷம் விலகும்.

### பஞ்சமி :

நாக தேவதைகள் பஞ்சமி திதிக்கு அதிதேவதை ஆவார்கள். பஞ்சமி திதியில் எல்லா சுப காரியங்களையும் செய்யலாம். குறிப்பாக சீமந்தம் செய்ய உகந்த திதியாக கருதப்படுகிறது.

இந்த திதியில் மருந்து உட்கொள்ளலாம். ஆப்ரேஷன் செய்து கொள்ளலாம். மேலும், நாகர் வழிபாட்டுக்கு உகந்த திதி இது. எனவே, நாக தோஷம் உள்ளவர்கள் இந்த திதியில் நாகத்தை பிரதிஷ்டை செய்து வழிபட நாக தோஷம் விலகும். பஞ்சமியில் நாக பஞ்சமி விசேஷமானது.

### சஷ்டி :

சஷ்டி திதிக்கு அதிதேவதை முருகப்பெருமான். எனவே ஆறுமுகம் கொண்ட முருகனை வழிபடுவதன் மூலம் நன்மைகள் பெருகும்.

சஷ்டி திதியில் புதிய பதவிகளை ஏற்றுக் கொள்ளலாம். சிற்ப, வாஸ்து காரியங்களில் ஈடுபடலாம். ஆபரணம் தயாரிக்கலாம். வாகனம் வாங்கலாம்.

மேலும், புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளலாம். கேளிக்கைகளில் ஈடுபடலாம். அதுமட்டுமின்றி முருகனை சஷ்டி விரதம் இருந்து வேண்டி கொள்பவர்களுக்கு சகல நலன்களும் உண்டாகும்.

### சப்தமி :

சப்தமி திதியின் அதிதேவதை சூரியன். சப்தமி திதியில் சங்கீத வாத்தியங்கள் வாங்கலாம். ஆடை, அணிகலன்களை தயாரிக்கலாம். இது பயணம் மேற்கொள்ள உகந்த திதியாகும்.

மேலும், இந்த திதியில் வாகனம் வாங்கலாம். வீடு, தொழிலில் இடமாற்றம் செய்து கொள்ளலாம். திருமணம் செய்யலாம். இந்த தினத்தில், ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்துடன் உள்ள சூரியனை வழிபடுவது சிறப்பான பலன்களைத் தரும்.

### அஷ்டமி :

அஷ்டமி திதிக்கு அதிதேவதை சிவபெருமான். அஷ்டமி திதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தளவாடம் வாங்கலாம். நடனம் பயிலலாம்.

### நவமி :

நவமி திதிக்கு அதிதேவதை அம்பிகை ஆவார். இந்நாளில் கெட்ட விஷயங்களை அழிப்பதற்கான செயல்களை துவங்கலாம்.

### தசமி :

தசமி திதியில் எல்லா சுப காரியங்களிலும் ஈடுபடலாம். இந்த திதிக்கு அதிதேவதை எமதர்மன். ஆன்மிக பணிகளுக்கு உகந்தநாள் இது.
மேலும், மதச் சடங்குகளைச் செய்யலாம். கிரகப்பிரவேசம் செய்யலாம். அரசு காரியங்களில் ஈடுபடலாம். பயணம் மேற்கொள்ளலாம்.

### ஏகாதசி :

ஏகாதசி திதிக்கு அதிதேவதை ருத்ரன். ஏகாதசி திதியில் விரதம் இருக்கலாம். திருமணம் செய்யலாம். நோய்க்கு சிகிச்சை செய்து கொள்ளலாம். சிற்ப காரியம் மற்றும் தெய்வ காரியங்களில் ஈடுபடலாம்.

### துவாதசி :

துவாதசி திதிக்கு அதிதேவதை விஷ்ணு ஆவார். துவாதசி திதியில் மதச்சடங்குகளில் ஈடுபடலாம்.

### திரயோதசி :

திரயோதசி திதிக்கு மன்மதன் அதிதேவதை ஆவார். திரயோதசி திதியில் சிவ வழிபாடு செய்வது விசேஷமாகும். மேலும், தெய்வ காரியங்களில் ஈடுபடலாம். பயணம் மேற்கொள்ளலாம். புத்தாடை அணியலாம்.

மேலும், புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளலாம். கேளிக்கைகளில் ஈடுபடலாம்.

### சதுர்த்தசி :

சதுர்த்தசி திதிக்கு அதிதேவதை காளி ஆவார். ஆயுதங்கள் உருவாக்கவும், மந்திரம் பயில்வதற்கும் சதுர்த்தசி திதி உகந்த நாள்.

### பௌர்ணமி :

பௌர்ணமி திதியில் விரதம் மேற்கொள்ளலாம். ஹோம, சிற்ப, மங்கல காரியங்களில் ஈடுபடலாம்.

அமாவாசை :

அமாவாசை திதியில் பித்ருக்களுக்கு ஆற்றவேண்டிய கடன்களை, வழிபாடுகளை செய்யலாம். இயந்திரப்பணிகளை மேற்கொள்ளலாம். இந்த திதி தான, தர்ம காரியங்களுக்கு உகந்தது.

## எந்தெந்த திதிகளில் என்னென்ன செய்யலாம்?

திதி என்பது சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தொலைவு ஆகும். திதி பஞ்சாங்கத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்.

சந்திரன் வளர்வதும், தேய்வதுமாக இருப்பதால் இருவகையான திதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாதமும் 30 திதிகள் கடைபிடிக்கப்படுகின்றன. இதில் இரண்டு பட்சங்கள் உள்ளன. அவை கிருஷ்ண பட்சம் அல்லது தேய்பிறை மற்றும் சுக்கில பட்சம் அல்லது வளர்பிறை ஆகும்.

அந்த வகையில் நாம் எந்தெந்த திதியன்று என்னென்ன காரியங்களை செய்யலாம்? என்பதை பற்றி தெரிந்து கொள்வோம்.

மாங்கல்யம் செய்ய உகந்த திதிகள் :

மாங்கல்யம் செய்ய உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்து உள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் மாங்கல்யம் செய்ய உகந்த திதிகளாகும்.

திருமணம் செய்ய உகந்த திதிகள் :

திருமணம் செய்ய உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்து உள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திரிதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் திருமணம் செய்ய உகந்த திதிகள் ஆகும்.

### சாந்தி முகூர்த்தம் வைக்க உகந்த திதிகள் :

திருமணமான தம்பதிகளுக்கு சாந்தி முகூர்த்தம் வைக்க உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்து உள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திரிதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் சாந்தி முகூர்த்தம் வைக்க உகந்த திதிகள் ஆகும்.

### சீமந்தம் செய்ய உகந்த திதிகள் :

கர்ப்பமான பெண்களுக்கு சீமந்தம் செய்ய உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்து உள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

திரிதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகள் சீமந்தம் செய்ய உகந்த திதிகள் ஆகும்.

### குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு உகந்த திதிகள் :

குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு உகந்த திதிகள் என்று ஒரு சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் குழந்தையை தொட்டிலில் இடுவதற்கு உகந்த திதிகள் ஆகும்.

### குழந்தைகளுக்கு காது குத்த உகந்த திதிகள் :

குழந்தைகளுக்கு காது குத்த உகந்த திதிகள் என்று ஒரு சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திரிதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் குழந்தைகளுக்கு காது குத்த உகந்த திதிகள் ஆகும்.

### கல்வி கற்க உகந்த திதிகள் :

குழந்தைகள் கல்வி கற்கும் வயதினை அடைந்தவுடன் முதன் முதலில் கல்வி கற்க பள்ளிகளில் சேர்க்க உகந்த திதிகள் என்று ஒரு சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திரிதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி ஆகிய திதிகள் கல்வி கற்க உகந்த திதிகள் ஆகும்.

### பூணூல் அணிவிப்பதற்கு உகந்த திதிகள் :

ஆண் குழந்தைகளுக்கு பூணூல் அணிவிப்பதற்கு உகந்த திதிகள் என்று ஒரு சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திரிதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் ஆண் குழந்தைகளுக்கு பூணூல் அணிவிப்பதற்கு உகந்த திதிகள் ஆகும்.

### புதிய வாகனம் வாங்க உகந்த திதிகள் :

புதிய வாகனம் வாங்க உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

சஷ்டி, ஏகாதசி, பௌர்ணமி ஆகிய திதிகள் புதிய வாகனம் வாங்க உகந்த திதிகள் ஆகும்.

### விவசாயம் செய்ய உகந்த திதிகள் :

விவசாயம் செய்ய உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகள் விவசாயம் செய்ய உகந்த திதிகள் ஆகும்.

### விதை விதைக்க உகந்த திதிகள் :

விதை விதைக்க உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

திருதியை, துவிதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, பௌர்ணமி ஆகிய திதிகள் விவசாயம் செய்ய உகந்த திதிகள் ஆகும்.

### கதிரறுக்க உகந்த திதிகள் :

கதிரறுக்க உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, பௌர்ணமி ஆகிய திதிகள் கதிரறுக்க உகந்த திதிகள் ஆகும்.

### கிரக ஆரம்பம் (பூமி பூஜை) செய்ய உகந்த திதிகள் :

கிரக ஆரம்பம் செய்ய உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் கிரக ஆரம்பம் (பூமி பூஜை) செய்ய உகந்த திதிகள் ஆகும்.

### தானியங்களை செலவிட உகந்த திதிகள் :

தானியங்களை செலவிட உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, பௌர்ணமி ஆகிய திதிகள் தானியங்களை செலவிட உகந்த திதிகள் ஆகும்.

### கால்நடைகள் வாங்க உகந்த திதிகள் :

கால்நடைகள் வாங்க உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் கால்நடைகள் வாங்க உகந்த திதிகள் ஆகும்.

### பொன் நகைகள் அணிவதற்கு உகந்த திதிகள் :

பொன் நகைகள் அணிவதற்கு உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

பஞ்சமி, சஷ்டி, தசமி, ஏகாதசி, பௌர்ணமி ஆகிய திதிகள் பொன் நகைகள் அணிவதற்கு உகந்த திதிகள் ஆகும்.

### புதிய ஆடைகள் உடுத்துவதற்கு உகந்த திதிகள் :

புதிய ஆடைகள் உடுத்துவதற்கு உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் புதிய ஆடைகள் உடுத்துவதற்கு உகந்த திதிகள் ஆகும்.

### தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த திதிகள் :

தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, பௌர்ணமி ஆகிய திதிகள் தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த திதிகள் ஆகும்.

### கிரகப்பிரவேசம் செய்ய உகந்த திதிகள் :

கிரகப்பிரவேசம் செய்ய உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் கிரகப்பிரவேசம் செய்ய உகந்த திதிகள் ஆகும்.

### நோயாளிகளை குளிக்க வைக்க உகந்த திதிகள் :

நோயாளிகளை குளிக்க வைக்க உகந்த திதிகள் என்று சில திதிகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

அவைகள் பின்வருமாறு,

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் நோயாளிகள் குளிக்க வைக்க உகந்த திதிகள் ஆகும்.

## திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள்

திதி என்பது சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தொலைவு ஆகும். திதி பஞ்சாங்கத்தில் ஒரு முக்கிய பகுதியாகும்.

அமாவாசை தினத்தில் சூரியனும், சந்திரனும் ஒரே தீர்க்கரேகையில் இருக்கும். இந்த இரண்டிற்கும் இடையே உள்ள தீர்க்கரேகை வித்தியாசத்தின் அடிப்படையில்தான் திதிகள் தோன்றுகின்றன.

நாம் பிறந்த திதிகளுக்கு ஏற்ப அவரவர்களின் குணநலன்கள் எப்படி இருக்கும்? என்பதை பற்றி தெரிந்து கொள்வோம்.

### பிரதமை

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் முதலாவது திதி பிரதமை ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் பிரதமையை சுக்கில பட்ச பிரதமை என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்த பிரதமையை கிருஷ்ண பட்ச பிரதமை என்றும் அழைக்கின்றனர்.

பிரதமை திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

நன்றி மறவாதவர்கள்.

இரக்க குணம் கொண்டவர்கள்.

அறிவுக்கூர்மை உடையவர்கள்.

பொருள் ஈட்டும் திறமை கொண்டவர்கள்.

பொறுமை உடையவர்கள்.

சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

கீர்த்தி உடையவர்கள்.

சுக வாழ்க்கையை வாழக்கூடியவர்கள்.

அமைதியான குணநலன்கள் கொண்டவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது ஈர்ப்பு கொண்டவர்கள்.

எப்போதும் நேர்மறை எண்ணங்களுடன் இருக்கக்கூடியவர்கள்.

## துவிதியை

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் இரண்டாவது திதி துவிதியை ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் துவிதியை சுக்கில பட்ச துவிதியை என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்த துவிதியை கிருஷ்ண பட்ச துவிதியை என்றும் அழைக்கின்றனர்.

துவிதியை திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

எதிலும் நேர்மையுடன் இருக்கக்கூடியவர்கள்.

புகழ் உடையவர்கள்.

உண்மையை பேசக்கூடியவர்கள்.

சொன்ன சொல்லைத் தவறாதவர்கள்.

முயற்சிகளால் முன்னேறக்கூடியவர்கள்.

பொருள் தேடும் திறமை உடையவர்கள்.

பொய்யை விரும்பாதவர்கள்.

புதிய உபகரணங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் கொண்டவர்கள்.

## திருதியை

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் மூன்றாவது திதி திருதியை ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் திருதியை சுக்கில பட்ச திருதியை என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் திருதியை கிருஷ்ண பட்ச திருதியை என்றும் அழைக்கின்றனர்.

திருதியை திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

நல்ல குணநலன்களை உடையவர்கள்.

தூய்மையானவர்கள்.

கீர்த்தி உடையவர்கள்.

உடல் பலம் கொண்டவர்கள்.

அறச்செயல்களில் ஈடுபடக்கூடியவர்கள்.

முரட்டுக்குணம் கொண்டவர்கள்.

எதையும் சிந்தித்து முடிவெடுக்கும் வல்லமை கொண்டவர்கள்.

## சதுர்த்தி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் நான்காவது திதி சதுர்த்தி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தியை சுக்கில பட்ச சதுர்த்தி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் சதுர்த்தியை கிருஷ்ண பட்ச சதுர்த்தி என்றும் அழைக்கின்றனர்.

சதுர்த்தி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

கீர்த்தியுடன் வாழக்கூடியவர்கள்.

பலரின் நட்புகளை கொண்டவர்கள்.

திட்டமிட்ட காரியத்தை செய்து முடிக்கக்கூடியவர்கள்.

பல நாடுகளுக்கு பயணம் செய்து புகழ் பெறக்கூடியவர்கள்.

## பஞ்சமி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் ஐந்தாவது திதி பஞ்சமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் பஞ்சமியை சுக்கில பட்ச பஞ்சமி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்த பஞ்சமியை கிருஷ்ண பட்ச பஞ்சமி என்றும் அழைக்கின்றனர்.

பஞ்சமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

வேதாகமங்களை ஆராய்ச்சி செய்யக்கூடியவர்கள்.

வாழ்க்கையில் பல போராட்டங்களை சந்திக்கக்கூடியவர்கள்.

மனை வசதி கொண்டவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

## சஷ்டி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் ஆறாவது திதி சஷ்டி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சஷ்டியை சுக்கில பட்ச சஷ்டி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் சஷ்டியை கிருஷ்ண பட்ச சஷ்டி என்றும் அழைக்கின்றனர்.

சஷ்டி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

மெலிந்த தேகத்தை உடையவர்கள்.

புகழ் உடையவர்கள்.

முன்கோபம் கொண்டவர்கள்.

பிரபலமானவர்களின் நட்புகளை உடையவர்கள்.

## சப்தமி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் ஏழாவது திதி சப்தமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சப்தமியை சுக்கில பட்ச சப்தமி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் சப்தமியை கிருஷ்ண பட்ச சப்தமி என்றும் அழைக்கின்றனர்.

சப்தமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

உடல் வலிமை உடையவர்கள்.

செல்வ வளம் உடையவர்கள்.

பெரியோர்களிடம் மதிப்பு கொண்டவர்கள்.

இரக்க குணம் உடையவர்கள்.

மற்றவர்களுக்கு நன்மை செய்யும் குணம் கொண்டவர்கள்.

எதிலும் கண்டிப்பு குணம் உடையவர்கள்.

## அஷ்டமி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் எட்டாவது திதி அஷ்டமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் அஷ்டமியை சுக்கில பட்ச அஷ்டமி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் அஷ்டமியை கிருஷ்ண பட்ச அஷ்டமி என்றும் அழைக்கின்றனர்.

அஷ்டமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

வாக்குவன்மை உடையவர்கள்.

புத்திர பாக்கியம் உடையவர்கள்.

செல்வ வளமும், செல்வாக்கும் கொண்டவர்கள்.

மனைவிக்கு கட்டுப்படக்கூடியவர்கள்.

ஆசைகள் அதிகம் உடையவர்கள்.

## நவமி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் ஒன்பதாவது திதி நவமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் நவமியை சுக்கில பட்ச நவமி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் நவமியை கிருஷ்ண பட்ச நவமி என்றும் அழைக்கின்றனர்.

நவமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

மற்றவர்கள் போற்றும் படி வாழக்கூடியவர்கள்.

திடமான உடலமைப்பை உடையவர்கள்.

மனதில் தைரியம் கொண்டவர்கள்.

எதிர்ப்புகளுக்கு அச்சம் கொள்ளாதவர்கள்.

கலைகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

தனது விருப்பம் போல் வாழக்கூடியவர்கள்.

## தசமி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பத்தாவது திதி தசமி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் தசமியை சுக்கில பட்ச தசமி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் தசமியை கிருஷ்ண பட்ச தசமி என்றும் அழைக்கின்றனர்.

### தசமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

வியாபாரத்தில் ஆர்வம் கொண்டவர்கள்.

அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உடையவர்கள்.

அறிவாற்றல் உடையவர்கள்.

ஆசாரம் உடையவர்கள்.

குறைகளை விரும்பாதவர்கள்.

பெரியவர்களிடத்தில் அன்பு கொண்டவர்கள்.

நண்பர்களின் மீது பிரியம் உடையவர்கள்.

உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்.

குடும்ப உறுப்பினர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.

தர்ம காரியங்கள் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.

## ஏகாதசி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பதினொன்றாவது திதி ஏகாதசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் ஏகாதசியை சுக்கில பட்ச ஏகாதசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் ஏகாதசியை கிருஷ்ண பட்ச ஏகாதசி என்றும் அழைக்கின்றனர்.

ஏகாதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

போட்டி போடும் குணம் கொண்டவர்கள்.

கல்வி வேள்விகளில் ஆர்வம் உடையவர்கள்.

குருமார்களின் மீது பற்று கொண்டவர்கள்.

மற்றவர்கள் மதிக்கும் பொறுப்புகளில் இருக்கக்கூடியவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது ஈர்ப்பு உடையவர்கள்.

வித்தியாசமான செயல்களை செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.

நீதியுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றி கொள்ளக்கூடியவர்கள்.

## துவாதசி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பனிரெண்டாவது திதி துவாதசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் துவாதசியை சுக்கில பட்ச துவாதசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் துவாதசியை கிருஷ்ண பட்ச துவாதசி என்றும் அழைக்கின்றனர்.

துவாதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

சொத்துச்சேர்க்கை உடையவர்கள்.

நல்ல குணம் மற்றும் பண்புகளை கொண்டவர்கள்.

எதிர்ப்புகளை உடையவர்கள்.

வசீகரிக்கும் தோற்றம் கொண்டவர்கள்.

புதிரான அணுகுமுறைகளை உடையவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது கீர்த்தி கொண்டவர்கள்.

## திரயோதசி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பதிமூன்றாவது திதி திரயோதசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் திரயோதசியை சுக்கில பட்ச திரயோதசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் திரயோதசியை கிருஷ்ண பட்ச திரயோதசி என்றும் அழைக்கின்றனர்.

திரயோதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

வெள்ளை மனம் கொண்டவர்கள்.

நண்பர்கள் அதிகம் உடையவர்கள்.

உறவினர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.

கற்பனை வளம் கொண்டவர்கள்.

தற்பெருமை உடையவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை வடிவமைத்து கொள்ளக்கூடியவர்கள்.

## சதுர்த்தசி

அமாவாசை நாளையும், பூரணை(பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பதினான்காவது திதி சதுர்த்தசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தசியை சுக்கில பட்ச சதுர்த்தசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் சதுர்த்தசியை கிருஷ்ண பட்ச சதுர்த்தசி என்றும் அழைக்கின்றனர்.

சதுர்த்தசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

எழில்மிகு தோற்றம் கொண்டவர்கள்.

முன்கோபம் கொள்ளும் குணம் உடையவர்கள்.

உடல் மற்றும் மனோபலம் கொண்டவர்கள்.

சண்டையிடுவதில் வல்லவர்கள்.

நினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

குரோத மனமுடையவர்கள்.

தனிக்கொள்கை பிடிப்பு கொண்டவர்கள்.

## பௌர்ணமி

பௌர்ணமி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

எண்ணிய காரியங்களில் வெற்றி பெறக்கூடியவர்கள்.

ஆயுள் பலம் உடையவர்கள்.

வாக்குவன்மை கொண்டவர்கள்.

அழகிய தோற்றம் உடையவர்கள்.

மற்றவர்களுக்கு உதவி செய்யும் எண்ணம் கொண்டவர்கள்.

எதிலும் நேர்மையான செயல்முறைகளை உடையவர்கள்.

திடமான மனநிலையை கொண்டவர்கள்.

## அமாவாசை

அமாவாசை திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

அதிக திறமை கொண்டவர்கள்.

சுயநலமாக செயல்படாதவர்கள்.

திறமைக்கான அங்கீகாரம் காலதாமதமாக கிடைக்கும்.

எப்போதும் தன்னையே முதன்மைப்படுத்திக் கொள்ளக்கூடியவர்கள்.

தனக்கு வேண்டியதை தானே தேடிக்கொள்ளக்கூடியவர்கள்.

எதையாவது சிந்தித்துக்கொண்டே இருக்கக்கூடியவர்கள்.

மனதில் தேடல் இருந்து கொண்டே இருக்கும்.

எளிதில் திருப்தி அடையமாட்டார்கள்.

மனஉளைச்சலுடன் இருக்கக்கூடியவர்கள்.

நுட்பமான விஷயங்களில் ஆர்வம் உடையவர்கள்.

பெற்றோர்களை நேசிக்கக்கூடியவர்கள்.

## திதி சூன்யம்

திதி சூன்யம் என்பது ஒவ்வொரு திதியிலும் ஒரு குறிப்பிட்ட ராசி இல்லம் மற்றும் அதில் இருக்கும் கிரகம் தன் சுப பலன்களை இழப்பதாகும்.

ஒருவருடைய ஜெனன ஜாதகத்தில் உள்ள திதியின்படி ஒரு குறிப்பிட்ட ராசி இல்லம் மற்றும் அதில் இருக்கும் கிரகம் திதி சூன்யம் பெற்றுவிட்டால் அக்கிரகம் அந்த ஜாதகருக்கு சுப ஆதிபத்தியமுள்ள கிரகமாக இருந்தாலும் அதனுடைய தசாபுத்தி அந்தர காலங்களில் அது சுப பலனை விடுத்து சூன்ய பலனைத்தான் அளிக்கும் என்பது விதியாகும்.

இந்த பூர்வ மற்றும் அமர பட்ச திதிகளான 15 திதிகளில் அமாவாசை-பௌர்ணமி திதி நாட்களில் பிறந்தவர்களுக்கு எவ்விதமான திதி சூன்ய தோஷமும் இல்லை. மற்ற 14 திதிகளில் பிறந்தவர்களுக்கு திதி சூன்ய தோஷம் உள்ளது.

| திதி | திதி சூன்ய ராசி | திதி சூன்ய ராசி கிரகங்கள் |
|---|---|---|
| பிரதமை திதி | துலாம்-மகரம் | சுக்கிரன்-சனி |
| துவிதியை திதி | தனுசு-மீனம் | குரு |
| திருதியை திதி | மகரம்-சிம்மம் | சனி-சூரியன் |
| சதுர்த்தி திதி | கும்பம்-ரிஷபம் | சனி-சுக்கிரன் |
| பஞ்சமி திதி | மிதுனம்-கன்னி | புதன் |
| சஷ்டி திதி | மேஷம்-சிம்மம் | செவ்வாய்-சூரியன் |
| சப்தமி திதி | தனுசு-கடகம் | குரு-சந்திரன் |
| அஷ்டமி திதி | மிதுனம்-கன்னி | புதன் |
| நவமி திதி | சிம்மம்-விருச்சகம் | சூரியன்-செவ்வாய் |
| தசமி திதி | சிம்மம்-விருச்சகம் | சூரியன்-செவ்வாய் |
| ஏகாதசி திதி | தனுசு-மீனம் | குரு |
| துவாதசி திதி | துலாம்-மகரம் | சுக்கிரன்-சனி |
| திரயோதசி திதி | ரிஷபம்-சிம்மம் | சுக்கிரன்-சூரியன் |
| சதுர்த்தசி திதி | மிதுனம்-கன்னி, தனுசு-மீனம் | புதன்-குரு |

திதி சூன்யம் பெறும் கிரகங்கள் காரக பலத்தை இழந்துவிடுவார்கள்.

சூரியன், திதி சூன்யம் பெற்றால் தந்தைவழி உறவுகளின் ஆதரவுகள் கிடைக்காமல் போகலாம்.

சந்திரன், திதி சூன்யம் பெற்றால் தாய்வழி உறவுகளின் ஆதரவுகள் கிடைக்காமல் போகலாம்.

செவ்வாய், திதி சூன்யம் பெற்றால் உடன் பிறப்புகளால் நன்மையின்மை ஏற்படும்.

புதன், திதி சூன்யம் பெற்றால் கல்வியில் தடை உண்டாகலாம்.

சுக்கிரன், திதி சூன்யம் பெற்றால் திருமணத்தில் தாமதம் ஏற்படலாம்.

குரு, திதி சூன்யம் பெற்றால் புதல்வர்களால் நன்மையின்மை ஏற்படும்.

சனி, திதி சூன்யம் பெற்றால் தொழிலாளர்களால் நன்மையின்மை ஏற்படும்.

## ஓரை என்றால் என்ன?

ஓரை என்பதற்கு ஆதிக்கம் எனப் பொருள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு கிரகத்தின் ஆதிக்கம் மிகுந்து காணப்படும். ஓரையை அறிந்து சுபகாரியங்களுக்கு பயன்படுத்தினால் எண்ணிய செயல்கள் சிறப்பாக நடைபெறும். மொத்தம் ஏழு விதமான ஓரைகள் உள்ளன. மேலும் ஓரைகள் சுப ஓரைகள், அசுப ஓரைகள் என பிரிக்கப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு :

### சுப ஓரைகள் :

சுக்கிரன், குரு, புதன், வளர்பிறை சந்திரன் ஆகிய ஓரைகள் சுப ஓரைகள் ஆகும்.

### அசுப ஓரைகள் :

சூரியன், செவ்வாய், சனி ஆகிய ஓரைகள் அசுப ஓரைகள் ஆகும்.

### ஒவ்வொரு ஓரையிலும் செய்ய வேண்டிய செயல்கள் பின்வருமாறு :

### சூரிய ஓரை :

உயர் அதிகாரிகளை சந்திக்க, அரசு சம்பந்தப்பட்ட காரியங்களை செய்வதற்கும், சிகை அலங்காரம் மேற்கொள்ளவும், நதிகளில் நீராடவும், திருத்தலங்களுக்கு செல்லவும், தர்ம காரியம் மேற்கொள்வதற்கும், முன்னோர்களுக்கு தர்ப்பண காரியம் மேற்கொள்வதற்கும், வழக்கு தொடர்பான விஷயங்கள் மேற்கொள்ளவும் சூரிய ஓரை சிறப்பானதாக இருக்கும்.

### சந்திர ஓரை :

பிரயாணங்கள் மேற்கொள்ளவும், திருமணம், சீமந்தம், குழந்தைகளுக்கு மொட்டையடித்து காது குத்துதல், பெண் பார்ப்பது, பதவியேற்பது, வேலைக்கு விண்ணப்பிப்பது, வங்கி கணக்கு துவங்குதலுக்கு உகந்தது. பெண்கள் தொடர்பான காரியங்களை மேற்கொள்ள சந்திர ஓரை சிறந்த ஓரையாகும்.

### செவ்வாய் ஓரை :

நிலம் வாங்குவது-விற்பது, அக்ரிமெண்ட் போடுவது, சகோதர மற்றும் பங்காளி பிரச்சனைகள், சொத்துக்களை பாகம் பிரிப்பது, உயில் எழுதுவது, ரத்த மற்றும் உறுப்பு தானம் செய்தல், மருத்துவ உதவிகள் செய்வது, நெருப்பு சம்பந்தமான வேலைகள் இவற்றையெல்லாம் செவ்வாய் ஓரையில் மேற்கொள்ளலாம்.

### புதன் ஓரை :

கல்வி தொடர்பான வேலை தொடங்குவதற்கும், மற்றவர்களிடம் ஆலோசிப்பதற்கும், அலுவலகங்கள் சார்ந்த பணிகள், பயணங்கள் மேற்கொள்ளவும், வித்தைகள் பயிலவும் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் புதன் ஓரை உகந்தது.

### குரு ஓரை :

தொடங்கும் நற்காரியத்தின் மூலம் எதிர்பார்த்த முன்னேற்றமும், லாபமும் கிடைக்கும். ஆன்மீக பெரியோர்களை சந்திக்கவும், குழந்தைகள் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்ளவும், வியாபாரம், விவசாயம் மேற்கொள்ளவும், ஆடை ஆபரணப் பொருட்கள் வாங்கவும், வீடு, மனை வாங்கவும்-விற்கவும் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் குரு ஓரை உகந்தது.

### சுக்கிர ஓரை :

திருமணம் தொடர்பாக பேசவும், பிறருடைய உதவிகளைப் பெறவும், விருந்து உண்பதற்கும், பழைய கடன்களை வசூலிக்கவும், மருந்து சாப்பிடவும், புதிய வாகனங்களை வாங்கவும், மனைவியின் சுற்றத்தாரோடு சுபகாரியம் பேசவும் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் சுக்கிர ஓரை உகந்தது.

### சனி ஓரை :

வீட்டை சுத்தம் செய்தல், மனைகள் சோதனை இடுதல், எண்ணெய் தொடர்பான காரியம், கனரக இயந்திரங்கள் இயக்குதல், நடைபயணம் மேற்கொள்வது, மரக்கன்று நடுதல், விருட்சங்கள் அமைத்தல் மற்றும் அழிவு செயல்கள் அனைத்திற்கும் சனி ஓரை உகந்தது.

## கரணமும், குணாதிசயமும்

கரணம் என்பது திதியில் பாதியாகும். அதாவது, 6-டிகிரி கொண்டது ஒரு கரணம் ஆகும்.

கரணங்கள் மொத்தம் 11 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 'கரணம் தப்பினால் மரணம்' என்று கூறுவார்கள்.

திதியை இரண்டாக பிரித்து முற்காலத்துக்கு ஒரு கரணமும், பிற்காலத்துக்கு ஒரு கரணமும் இருக்கும். அதாவது, 30 திதிகளுக்கும் மொத்தமாக 60 கரணங்கள் உண்டு.

கரணத்தினை கொண்டு சில செயல்பாடுகளில் அவர்களின் குணாதிசயங்களை பற்றி அறிந்து கொள்ள இயலும்.

அந்த குணாதிசயங்கள் அனைத்தும் ஒவ்வொரு கரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்குகளின் தன்மைக்கு ஏற்ப அமைகிறது.

### கரணத்தின் வகைகள் :

1. பவம்
2. பாலவம்
3. கௌலவம்
4. தைதிலம்
5. கரம்
6. வணிஜை
7. பத்ரம்
8. சகுனி
9. சதுஷ்பாதம்
10. நாகவம்
11. கிமுஸ்துக்னம்

இவையாவும் கரணத்தின் வகைகள் ஆகும். அந்த வகையில் நாம் கரணத்தை பற்றியும், அக்கரணத்திற்கான விலங்கு மற்றும் குணாதிசயங்களை பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

## பவ கரணம்

பவ கரணத்தின் விலங்கு சிங்கம்.

### பவ கரணத்தின் குணாதிசயங்கள்:

நல்ல பழக்க வழக்கம் கொண்டவர்கள்.

தைரியத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

மென்மையான தலைமுடி உடையவர்கள்.

பெருந்தன்மையான குணங்களை கொண்டவர்கள்.

எதையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் குணம் கொண்டவர்கள்.

சுகபோக வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

## பாலவ கரணம்

பாலவ கரணத்தின் விலங்கு புலி.

### பாலவ கரணத்தின் குணாதிசயங்கள் :

சிற்றின்ப பிரியர்கள்.

நிரந்தர செல்வம் உடையவர்கள்.

அனைவராலும் விரும்பக்கூடியவர்கள்.

அழகான தோற்றம் கொண்டவர்கள்.

விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்கள்.

உறவினர்களை நேசிக்கும் குணம் உடையவர்கள்.

எல்லோருக்கும் உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்.

எதிலும் தன்னம்பிக்கையுடன் செயல்படக்கூடியவர்கள்.

## கௌலவ கரணம்

கௌலவ கரணத்தின் விலங்கு பன்றி.

### கௌலவ கரணத்தின் குணாதிசயங்கள் :

அரசு சம்பந்தமான தொடர்புகளை கொண்டவர்கள்.

ஆச்சாரம் உடையவர்கள்.

சுயநலமான சிந்தனை உடையவர்கள்.

புத்திக்கூர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

உடல் வலிமை கொண்டவர்கள்.

மனை வசதிகளை உடையவர்கள்.

பெற்றோர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.

வாகன வசதி உடையவர்கள்.

## தைதுலை கரணம்

தைதுலை கரணத்தின் விலங்கு கழுதை.

### தைதுலை கரணத்தின் குணாதிசயங்கள் :

எதிலும் சிக்கனமாக இருப்பார்கள்.

எதிர்ப்புகளை எதிர்கொண்டு வெற்றி கொள்ளும் தன்மை கொண்டவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது ஆர்வம் உடையவர்கள்.

இளகிய மனம் கொண்டவர்கள்.

மனஉறுதி உடையவர்கள்.

எதிலும் சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

அரசாங்கத்தின் மூலம் பொருள் ஆதாயம் அடையக்கூடியவர்கள்.

## கரசை கரணம்

கரசை கரணத்தின் விலங்கு யானை.

### கரசை கரணத்தின் குணாதிசயங்கள் :

கற்பனை வளம் நிறைந்தவர்கள்.

அலைபாயும் மனநிலை கொண்டவர்கள்.

வாக்கு சாதுர்யம் உடையவர்கள்.

அரசாங்க தொடர்பு கொண்டவர்கள்.

எதிர்ப்புகளை வெல்லக்கூடியவர்கள்.

திட்டமிட்டு செயல்படக்கூடியவர்கள்.

அனைவருக்கும் உதவும் மனப்பான்மை கொண்டவர்கள்.

## வணிசை கரணம்

வணிசை கரணத்தின் விலங்கு எருது.

### வணிசை கரணத்தின் குணாதிசயங்கள் :

கற்பனை வளம் உடையவர்கள்.

பேசியே காரியங்களை சாதிக்கும் வல்லமை கொண்டவர்கள்.

நிர்வாகத்திறன் உடையவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

தனித்து செயல்பட விரும்பக்கூடியவர்கள்.

எதிலும் திட்டமிட்டு செயல்படக்கூடியவர்கள்.

எதிலும் ஆதாயம் இருந்தால் மட்டும் செயல்படக்கூடியவர்கள்.

## பத்திரை கரணம்

பத்திரை கரணத்தின் விலங்கு கோழி.

### பத்திரை கரணத்தின் குணாதிசயங்கள் :

சஞ்சலமான மனநிலையை உடையவர்கள்.

மந்த குணம் உடையவர்கள்.

புதிய விஷயங்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

மனிதாபிமான குணம் உடையவர்கள்.

எதிலும் முழு ஈடுபாட்டுடன் செயல்படாதவர்கள்.

சிக்கனமான மனப்பான்மை உடையவர்கள்.

ஊக்கப்படுத்திக் கொண்டே இருந்தால் முன்னேற்றம் அடையக்கூடியவர்கள்.

## சகுனி கரணம்

சகுனி கரணத்தின் விலங்கு காகம்.

### சகுனி கரணத்தின் குணாதிசயங்கள் :

அழகான தோற்றம் உடையவர்கள்.

மனோதைரியம் கொண்டவர்கள்.

அமைதியான தோற்றம் உடையவர்கள்.

உள்ளுணர்வு அதிகம் கொண்டவர்கள்.

செல்வச்சேர்க்கை உடையவர்கள்.

நல்ல அறிவு, உள்ளம் கொண்டவர்கள்.

நடுநிலை தன்மையுடன் எதிலும் செயலாற்றக்கூடியவர்கள்.

## சதுஷ்பாத கரணம்

சதுஷ்பாத கரணத்தின் விலங்கு நாய்.

### சதுஷ்பாத கரணத்தின் குணாதிசயங்கள் :

தன்னுடைய விருப்பம் போல் செயல்படக்கூடியவர்கள்.

முன்கோபம் உடையவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

தத்துவத்தில் ஈடுபாடு உடையவர்கள்.

உழைத்து முன்னேறக்கூடியவர்கள்.

எதிலும் நேர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

நெருக்கடியான சூழ்நிலைகளில் இருக்கக்கூடியவர்கள்.

உறுதிமொழிகளை காப்பாற்ற முடியாதவர்கள்.

முரணான பழக்க வழக்கங்களை கொண்டவர்கள்.

### நாகவ கரணம்

நாகவ கரணத்தின் விலங்கு பாம்பு.

நாகவ கரணத்தின் குணாதிசயங்கள் :

நல்ல பழக்க வழக்கங்களை உடையவர்கள்.

மனோதைரியம் கொண்டவர்கள்.

இவர்கள் ஆன்மிகம் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபட்டால் முன்னேற்றம் உண்டாகும்.

அறுசுவை உணவுகளை விரும்பி உண்ணக்கூடியவர்கள்.

சிலர் வஞ்சனை எண்ணங்களை கொண்டவர்களாக இருப்பார்கள்.

### கிம்ஸ்துக்கினம் கரணம்

கிம்ஸ்துக்கின கரணத்தின் விலங்கு புழு.

கிம்ஸ்துக்கின கரணத்தின் குணாதிசயங்கள் :

பெற்றோர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.

புத்திக்கூர்மை உடையவர்கள்.

அனைவரிடமும் பழகும் குணம் கொண்டவர்கள்.

சகோதரர்களிடம் பாசம் உடையவர்கள்.

சில இடங்களில் சுயநலமான எண்ணம் கொண்டவர்கள்.

சாஸ்திர அறிவு உடையவர்கள்.

உலக அனுபவம் கொண்டவர்கள்.

## ராசிகளின் வகைகளும், அதன் குணங்களும்

நீரும், நெருப்பும் ஒன்றாக இணையாது. நிலத்தோடு காற்றும் இணையாது. ஆனால் நெருப்போடும் காற்றும், நிலத்தோடு நீரும் இணையும். அதுபோலத்தான் இணையாக உள்ள ராசிக்காரர்களை இணைத்தால் மட்டுமே இல்லறம் நல்லதாக அமையும்.

ஜோதிட ரீதியாக 12 ராசிகளில் சில ராசிகளை நெருப்பு ராசி என்றும், சில ராசிகளை நீர் ராசி என்றும், சில ராசிகளை நில ராசி என்றும், சில ராசிகளை காற்று ராசி என்றும் அழைப்பதுண்டு. அந்த வகையில் உங்கள் ராசி எந்த வகையை சேர்ந்தது. அதற்கான குணம் என்ன? என்பதைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

### நெருப்பு ராசிகள்

மேஷம், சிம்மம், தனுசு ஆகிய மூன்று ராசிகளையும் 'நெருப்பு ராசிகள்' என்று அழைப்பார்கள்.

குணங்கள் :

இந்த ராசியை சேர்ந்தவர்கள் அளவுக்கு அதிகமாக கோபப்படுவார்கள்.

நெருப்பு ராசியாக இருப்பவர்கள் கோபமாகவும், முரட்டுத்தனமாகவும், தைரியமாகவும், தலைமைப் பதவிகளை வகிப்பவராகவும் இருப்பார்கள்.

### நில ராசிகள்

ரிஷபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று ராசிகளையும் 'நில ராசிகள்' என்று அழைப்பார்கள்.

குணங்கள் :

இந்த ராசியை சேர்ந்தவர்கள் பெரும்பாலான நேரங்களில் பொறுமையின் சிகரமாக இருப்பார்கள்.

நில ராசியாக இருப்பவர்கள் சாந்தமாக விட்டுக்கொடுக்கும் குணத்துடனும், அன்பு நிறைந்த மனதுடனும், ஒழுக்கத்துடனும், பாசத்துடனும் நல்வழியில் செல்பவர்களாகவும் இருப்பார்கள்.

### காற்று ராசிகள்

மிதுனம், துலாம், கும்பம் ஆகிய மூன்று ராசிகளையும் 'காற்று ராசிகள்' என்று அழைப்பார்கள்.

குணங்கள் :

இந்த ராசியை சேர்ந்தவர்களின் மனம் எப்போதும் அலைபாய்ந்துக்கொண்டே இருக்கும் என்று கூறப்படுகிறது.

காற்று ராசியாக இருப்பவர்கள் தற்பெருமையுடன், உயர்ந்த ஆராய்ச்சியுடன் அறிவாளிகள் புடைசூழ சந்தோஷமாகவும், புத்துணர்ச்சியுடனும், எந்த நேரமும் ஆலோசனை செய்து கொண்டும் இருப்பார்கள்.

### நீர் ராசிகள்

கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய மூன்று ராசிகளையும் 'நீர் ராசிகள்' என்று அழைக்கிறார்கள்.

குணங்கள் :

இந்த ராசியை சேர்ந்தவர்கள் இளகிய மனம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

நீர் ராசியாக இருப்பவர்கள் அமைதியாகவும், ஞானத்துடன் சூழலுக்கு தகுந்தவாறு தன்னை மாற்றிக்கொண்டு சந்தோஷத்துடன் பிறருக்கு உதவும் குணம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

## ராசியும், பொதுவான குணமும்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு ராசி, லக்னத்தில் பிறந்திருப்பார்கள். அதன்படி ஒவ்வொரு ராசியினருக்கும், ஒவ்வொரு விதமான பழக்கம், யோகம் போன்றவை அவரவர் ராசியை பொறுத்து அமையும்.

## மேஷ ராசி

மேஷ ராசியின் அதிபதி செவ்வாயாகும்.

மேஷ ராசியில் அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் ஆகியவை இடம்பெறுகின்றன.

பொதுவாக இவர்கள் செவ்வாயை ராசி நாதானகக் கொண்டு இருப்பதால் கோப குணத்தையும், பிடிவாதத்தையும், முரட்டு சுபாவங்களையும் உடையவராக இருப்பார்கள்.

### மேஷ ராசியின் வேறு பெயர்கள் :

வருடை, மை, ஆடு, தகர், மதி, கொச்சை, கொண்டல்.

### பொதுவான குணங்கள் :

எதிலும் நேர்மையாக செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்கள்.

உடன் இருப்பவர்களை பற்றி நன்கு அறிந்து கொள்ளக்கூடியவர்கள்.

நடுத்தர உயரமும், கம்பீரமான தோற்றமும் கொண்டவர்கள்.

நிமிர்ந்த நடையும், கனிந்த பார்வையும் உடையவர்கள்.

மற்றவர்களின் பார்வைக்கு வெகுளி போல் காட்சி அளிக்கக்கூடியவர்கள்.

தீர்க்கமான ஆயுளை உடையவர்கள்.

தெய்வ பக்தி கொண்டவர்கள்.

நிதானம் என்பது குறைவு.

எதையும் உடனே சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

வீரம், கோபம் நிறைந்தவர்களாக இருக்கக்கூடியவர்கள்.

மற்றவர்களை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்.

நிர்வாகத்திறமை உடையவர்கள்.

ஒளிவு மறைவின்றி செயல்படக்கூடியவர்கள்.

வாக்கு சாதுர்யம் கொண்டவர்கள்.

நகைச்சுவை உணர்வு அதிகம் கொண்டவர்கள்.

கலைகளில் அதிக நாட்டம் இருக்கும்.

எதையும் சமாளிக்கும் ஆற்றல் கொண்டவர்கள்.

கௌரவத்தை விட்டு கொடுக்காதவர்கள்.

தங்கள் எண்ணங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கக்கூடியவர்கள்.

கோபத்தில் மன அமைதியை இழந்து விடுவார்கள்.

காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயல்படக்கூடியவர்கள்.

எதிலும் தைரியமாக செயல்படும் தன்மை கொண்டவர்கள்.

எதிர்காலம் சார்ந்த சிந்தனைகளை அதிகம் கொண்டவர்கள்.

குடும்பத்தின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

## ரிஷப ராசி

ரிஷப ராசியின் அதிபதி சுக்கிர பகவானாவார்.

ரிஷப ராசியில் கிருத்திகை முதல் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 ம் பாதங்கள் ஆகியவை அடங்கும்.

### ரிஷப இராசியின் வேறு பெயர்கள் :

மால், விடை, பாறல், புல்லம், நந்தி, மா, பசு, பாண்பில், ஏறு, மாடு.

பொதுவான குணங்கள் :

எழில் மிகு தோற்றம் உடையவர்கள்.

கம்பீரமான தோற்றம் கொண்டவர்கள்.

நடுத்தரமான உயரமும் கொண்டவர்கள்.

சாதுவான குணத்தை கொண்டிருப்பார்கள்.

பொதுநலம் சார்ந்த சிந்தனைகளை கொண்டவர்கள்.

சாமர்த்தியமான செயல்பாடுகளை செய்யக்கூடியவர்கள்.

வேடிக்கையாக பேசி அனைவரையும் கவரக்கூடியவர்கள்.

நகைச்சுவை உணர்வு அதிகம் கொண்டவர்கள்.

அதிக நினைவு திறன் உடையவர்கள்.

அனைத்து மக்களிடம் அனுசரித்து செல்லக்கூடியவர்கள்.

எந்தவொரு செயலையும் திட்டமிட்டு செயல்படுத்தக்கூடியவர்கள்.

தாயின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

கடினமாக உழைக்கக்கூடியவர்கள்.

கலைத்துறையில் ஆர்வம் உடையவர்கள்.

புகழ்ச்சிக்கு செவி சாய்க்காதவர்கள்.

எதிலும் சிக்கனமாக செயல்படக்கூடியவர்கள்.

பல மொழிகளை அறிந்தவர்கள்.

சகோதரர்களிடம் அதிக அன்பு கொண்டவர்கள்.

பார்த்தவுடன் மற்றவர்களை கணிக்கக்கூடியவர்கள்.

அதீத கற்பனை திறன் உடையவர்கள்.

நுண்கலைகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

ரகசியங்களை காக்கும் குணம் உடையவர்கள்.

மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

சிறுவயதிலேயே குடும்ப பொறுப்பை ஏற்று திறம்பட செயலாற்றக்கூடியவர்கள்.

எந்த சூழ்நிலையினாலும், அதை சமாளிக்கும் திறமை கொண்டவர்கள்.

எதிரிகளை வீழ்த்தும் சாதுர்த்தியமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

## மிதுன ராசி

மிதுன ராசியின் அதிபதி புதன் பகவானாவார்.

மிதுன ராசியில் மிருகசீரிஷம் 3, 4ம் பாதங்களும், திருவாதிரை, புனர்பூசம் நட்சத்திரத்தின் 1,2,3ம் பாதங்கள் ஆகியவை அடங்கும்.

### மிதுன ராசியின் வேறு பெயர்கள் :

வாழ்வு, இரட்டை, பாட்வன், பாடவை, வீணை, யாழ் மற்றும் புதுமகளிர்.

### பொதுவான குணங்கள் :

மற்றவர்களின் உதவிகளை எதிர்பார்க்காமல் தமது காரியத்தை செய்யக்கூடியவர்கள்.

பேச்சாற்றல் உடையவர்கள்.

எந்தவொரு பிரச்சனையிலும் நன்கு சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

சுகபோகமாக வாழ்வதில் ஈடுபாடு உடையவர்கள்.

புதிய செயல்பாடுகளில் ஆர்வத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

மற்றவர்களை எளிதில் நம்பாதவர்கள்.

சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

எளிதில் அனைவரிடத்திலும் நட்பு வைத்து கொள்ளக்கூடியவர்கள்.

தனது மனம் கவர்ந்தவர்களுக்கு இன்னல் ஏற்படாத வண்ணம் காக்கக்கூடியவர்கள்.

குழப்பவாதியாக இருப்பினும் எடுத்த பணியை தகுந்த நேரத்தில் செய்து முடிக்கக்கூடியவர்கள்.

ஒரே நேரத்தில் இருவேறு பணிகளை மேற்கொள்ளும் திறமை உடையவர்கள்.

புறத்தோற்றத்தை கொண்டு இவர்களின் திறமையை அறிய இயலாது.

எதையும் உடனே புரிந்துக்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்கள்.

எந்தவொரு காரியத்திலும் பொறுப்புடன் செயல்படக்கூடியவர்கள்.

இவர்களுடன் நெருங்கி பழகினால் மட்டுமே இவர்களை பற்றி புரிந்துக்கொள்ள முடியும்.

புது புது மாற்றத்தை உருவாக்கக்கூடியவர்கள்.

தன் விருப்பம் போல் செலவு செய்யக்கூடியவர்கள்.

தங்களின் மீது அதிக நம்பிக்கை கொண்டவர்கள்.

சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் தங்கள் குணத்தை மாற்றி கொள்வார்கள்.

கடின உழைப்பை காட்டிலும் புத்திசாலியான செயல்பாடுகளை செய்ய விரும்பக்கூடியவர்கள்.

## கடக ராசி

கடக ராசியின் அதிபதி சந்திர பகவான் ஆவார்.

கடக ராசியில் புனர்பூசம் நட்சத்திரத்தின் 4ம் பாதம், பூசம், ஆயில்யம் நட்சத்திரத்தின் அனைத்து பாதங்களும் இதில் அடங்கும்.

### கடக ராசியின் வேறு பெயர்கள் :

மதி, நள்ளி, குளிர், கள்வன், சேக்கை, அலவன், நண்டு, கொண்டல் மற்றும் பாறப்பன்.

பொதுவான குணங்கள் :

பெரியோர்களிடத்தில் மிகுந்த மரியாதை கொண்டிருப்பார்கள்.

கடவுள் பக்தி அதிகமாக இருக்கும்.

நல்ல அழகான மற்றும் வசீகரமான தோற்றத்தை கொண்டிருப்பார்கள்.

ஆளுமைத்தன்மை உடையவர்கள்.

ஞாபக சக்தியும், அறிவாற்றலும் கொண்டிருப்பார்கள்.

மற்றவர்களை கவரும் ஆற்றல் கொண்டவர்கள்.

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

திட்டமிட்ட காரியத்தை செய்து முடிக்கும் வரை ஓய மாட்டார்கள்.

இவர்களின் மூலம் உடன் பிறந்தவர்கள் ஆதாயம் அடைவார்கள்.

எதிலும் சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

இரக்க குணம் உடையவர்கள்.

எளிதில் உணர்ச்சி வசபடக்கூடியவர்கள்.

எதையும் வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவர்கள்.

குடும்பத்தின் மீது அதிக அக்கறை கொண்டவர்கள்.

சுகபோகமான வாழ்க்கை வாழ ஆசைப்படுவார்கள்.

சேமிக்கும் பழக்கம் குறைவாக இருக்கும்.

பொது காரியங்களுக்கு உதவும் மனப்பக்குவம் கொண்டவர்கள்.

வெளியூர், வெளிநாடுகளில் சென்று பணம் ஈட்டும் திறமை கொண்டவர்கள்.

தனக்கு விரும்பியவர்களுக்காக எதையும் விட்டுக்கொடுக்கும் குணம் கொண்டவர்கள்.

கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் இவர்கள் கவனமுடன் இருப்பது நல்லது.

எதையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளும் தன்மை கொண்டவர்கள்.

## சிம்ம ராசி

சிம்ம ராசியின் அதிபதி சூரிய பகவானாவார்.

சிம்ம ராசியில் மகம், பூரம், உத்திரம் நட்சத்திரத்தின் 1ம் பாதம், ஆகியவை இதில் அடங்கும்.

### சிம்ம ராசியின் வேறு பெயர்கள் :

அரி, ஆளி, அரிமா, புவி, புதன், குரு.

### பொதுவான குணங்கள் :

அழகான உடல் தோற்றம் உடையவர்கள்.

இவர்கள் எடுத்த முடிவை மாற்றுவது கடினம்.

முன்கோபம் உடையவர்கள்.

உறுதியான மனநிலையைக் கொண்டவர்கள்.

எதற்கும் பயம் கொள்ளாமல் முன்னின்று போராடக்கூடியவர்கள்.

எதிலும் துரிதமாக செயல்படும் குணம் உடையவர்கள்.

மற்றவர்களிடம் கடன் வாங்குவது இவர்களுக்கு பிடிக்காது.

கம்பீரமான பேச்சுக்களும், நடவடிக்கைகளும் கொண்டவர்கள்.

புகழ்ச்சிக்கு மயங்கக்கூடியவர்கள்.

விடாமுயற்சி அதிகம் கொண்டவர்கள்.

நீதி, நேர்மைக்கு கட்டுப்பட்டவர்கள்.

சந்தேக குணம் கொண்டவர்கள்.

பெரும்பாலானோர்க்கு தனம் சார்ந்த பிரச்சனைகள் குறைவு.

செலவை பற்றி கவலை கொள்ள மாட்டார்கள்.

மற்றவர்கள் பாராட்டும்படி நடந்து கொள்ளக்கூடியவர்கள்.

இவர்கள் மற்றவர்களுடன் அனுசரித்து செல்வது கடினம்.

கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றக்கூடியவர்கள்.

தெளிவான பேச்சுக்களை கொண்டவர்கள்.

சம்பந்தம் இல்லாத துறைகளில் பணிபுரியக்கூடியவர்கள்.

அன்பு, பணிவு மற்றும் மரியாதைக்கு அடிபணியும் தன்மை கொண்டவர்கள்.

## கன்னி ராசி

கன்னி ராசியின் அதிபதி புதன் பகவானாவார்.

கன்னி ராசியில் உத்திரம் 2, 3, 4ம் பாதங்களும், அஸ்தம், சித்திரை நட்சத்திரத்தின் 1,2 பாதங்கள் ஆகியவை அடங்கும்.

### கன்னி ராசியின் வேறு பெயர்கள் :

பெண், மாதை.

### பொதுவான குணங்கள் :

வாதத்திறமை உடையவர்கள்.

தன்மானம் அதிகம் கொண்டவர்கள்.

சகிப்புத்தன்மை உடையவர்கள்.

கலைகளின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் உடையவர்கள்.

சுறுசுறுப்புடன் செயல்படக்கூடியவர்கள்.

மற்றவர்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள்.

எதிலும் நிதானமாக செயல்படக்கூடியவர்கள்.

தன் நிலையை அறிந்து செயல்படக்கூடியவர்கள்.

மற்றவர்களை கவரும் தோற்றம் கொண்டவர்கள்.

தேவைகளை அறிந்து செலவு செய்யக்கூடியவர்கள்.

எதிலும் புத்திக்கூர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

என்றும் இளமையான தோற்றத்துடன் இருக்கக்கூடியவர்கள்.

மற்றவர்களின் மனம் அறிந்து செயல்படக்கூடியவர்கள்.

மனதில் இருக்கும் கவலைகளை வெளிப்படுத்தாதவர்கள்.

சொந்த தொழில் செய்வதை அதிகம் விரும்பக்கூடியவர்கள்.

மற்றவர்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்கக்கூடியவர்கள்.

தன்னுடைய மனவிருப்பத்திற்கு ஏற்ப செயல்படக்கூடியவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றி கொள்ளக்கூடியவர்கள்.

தன்னிடம் இருப்பதைக் கொண்டு மனம் மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள்.

எந்த வேலையும் மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்று விரும்பக்கூடியவர்கள்.

எந்தவொரு முடிவையும் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யக்கூடியவர்கள்.

## துலாம் ராசி

துலாம் ராசியின் அதிபதி சுக்கிர பகவானாவார்.

துலாம் ராசியில் சித்திரை நட்சத்திரத்தின் 3, 4ம் பாதமும், சுவாதி, விசாகம் நட்சத்திரத்தின் 1,2,3 பாதங்களும் இதில் அடங்கும்.

### துலாம் ராசியின் வேறுபெயர்கள் :

நிறைக்கோல், துலாக்கோல், துலை, கோல், தராசு.

### பொதுவான குணங்கள் :

பல விஷயங்களை அறிந்து வைத்திருப்பார்கள்.

சிகை அலங்காரத்தில் அதிக ஆர்வம் கொண்டவர்கள்.

மனதில் லட்சியம் உடையவர்கள்.

மற்றவர்களை எடை போடுவதில் வல்லவர்கள்.

சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் தன்னை மாற்றிக் கொள்ளக்கூடியவர்கள்.

ரகசியம் பலவற்றை கொண்டவர்கள்.

சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

மற்றவர்களை கவரும் தோற்றம் கொண்டவர்கள்.

எந்த சூழ்நிலையாக இருந்தாலும் நிதானமாக செயல்படக்கூடியவர்கள்.

அனைத்து மக்களிடமும் பழகும் குணம் கொண்டவர்கள்.

எதிலும் நேர்மையாக செயல்படக்கூடியவர்கள்.

தனித்து செயல்படக்கூடியவர்கள்.

வாக்கு சாதுர்யம் உடையவர்கள்.

வைராக்கிய குணம் கொண்டவர்கள்.

பொறுப்புகள் அதிகம் கொண்டவர்கள்.

பயணம் செய்வதில் ஆர்வம் உடையவர்கள்.

பொதுநலம் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபாடு உடையவர்கள்.

செல்வாக்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடியவர்கள்.

## விருச்சிக ராசி

விருச்சிக ராசியின் அதிபதி செவ்வாய் பகவானாவார்.

விருச்சிக ராசியில் விசாகம் நட்சத்திரத்தின் 4ம் பாதம், அனுஷம், கேட்டை நட்சத்திரங்கள் இதில் அடங்கும்.

### விருச்சிக ராசியின் வேறு பெயர்கள் :

பறப்பன், தேள், பெருக்கால்.

### பொதுவான குணங்கள் :

கம்பீரமான தோற்றம் உடையவர்கள்.

எதையும் பெரிதாக எண்ணாதவர்கள்.

விளையாட்டுத்தனம் அதிகம் கொண்டவர்கள்.

யாருக்காகவும் எதையும் விட்டு கொடுக்காதவர்கள்.

பிடிவாத குணம் அதிகம் கொண்டவர்கள்.

வாக்குவன்மை கொண்டவர்கள்.

எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாக இருப்பார்கள்.

சேமிப்பில் அதிக அக்கறை கொண்டவர்கள்.

சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு இருக்கும்.

தனக்கு வேண்டியதை விடாப்பிடியாக நின்று சாதிப்பார்கள்.

அப்பாவித்தனமான முகத்தை கொண்டவர்களாக இருப்பார்கள்.

கோபம் வந்தால் என்ன செய்கிறோம் என்று தெரியாதவர்கள்.

தான, தர்மங்கள் செய்வதிலும் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு.

நடுத்தர வயதில் சுகபோகமான வாழ்கை வாழ்வார்கள்.

எந்தவொரு முடிவையும் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யக்கூடியவர்கள்.

சந்தேக எண்ணமும், சலனமும் உடையவர்கள்.

வஞ்சனையான எண்ணங்களை கொண்டவர்கள்.

ஆராய்ச்சித்துறைகளில் ஈடுபாடு உடையவர்கள்.

எந்த நிலையிலும் விழிப்புணர்வுடன் செயல்படக்கூடியவர்கள்.

மனதில் உள்ள எண்ணங்களை வெளிப்படுத்த தெரியாதவர்கள்.

## தனுசு ராசி

தனுசு ராசியின் அதிபதி குருபகவான் ஆவார்.

தனுசு ராசியில் மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் ஆகியவை இடம்பெறுகின்றன.

### தனுசு ராசியின் வேறு பெயர்கள் :

கொடுமரம், சாபம், வில், சிலை, துரோணம், காண்டிபம்.

### பொதுவான குணங்கள் :

போராடி வெல்லும் மனநிலையை உடையவர்கள்.

புகழ்ச்சிக்கு மயங்கும் குணம் கொண்டவர்கள்.

இறை நம்பிக்கை உடையவர்கள்.

சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் தன்னை மாற்றி கொள்ளக்கூடியவர்கள்.

வஞ்சனை இல்லாமல் அனைவரிடமும் பழகும் குணம் உடையவர்கள்.

அதிக நண்பர்களை பெற்றிருப்பார்கள்.

கவர்ச்சிகரமான உடலமைப்பை கொண்டவர்கள்.

சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.

மற்றவர்களின் ஆலோசனைகளை விரும்பாதவர்கள்.

ரகசிய நடவடிக்கைகளை உடையவர்கள்.

சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

எந்தவொரு விஷயத்திலும் சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

எதிர்காலம் சார்ந்த சிந்தனைகள் நிரம்ப பெற்றவர்கள்.

மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை உடையவர்கள்.

சுயநலமின்றி பொதுநலத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

பேசியே காரியத்தை சாதித்து கொள்ளும் திறமை கொண்டவர்கள்.

மற்றவர்களின் எண்ணங்களை அறிந்து செயல்படக்கூடியவர்கள்.

## மகர ராசி

மகர ராசியின் அதிபதி சனிபகவான் ஆவார்.

மகர ராசியில் உத்திராடம் 1, 2, 3 பாதங்களும், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதங்களும் அடங்கும்.

### மகர ராசியின் வேறு பெயர்கள் :

கலை, சுறா, கை, மான்.

### பொதுவான குணங்கள் :

எதிலும் விடாமுயற்சி உடையவர்கள்.

எதையாவது யோசித்து கொண்டே இருக்கக்கூடியவர்கள்.

எதிலும் சோர்வு அடையமாட்டார்கள்.

கடுமையான உழைப்பாளிகள்.

எளிதில் யாருக்கும் வாக்கு கொடுக்கமாட்டார்கள்.

ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்.

செய்யும் தொழிலை தெய்வமாக எண்ணக்கூடியவர்கள்.

எந்தத்துறையில் ஈடுபட்டாலும் அதில் முன்னேற்றமும், வெற்றியும் பெறுவார்கள்.

வாழ்வின் முற்பகுதியை விட பிற்பகுதி தான் மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும்.

கொடுத்த வாக்கை எந்த நிலையிலும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

இரக்க சுபாவம் உடையவர்களாக இருப்பார்கள்.

பிடிவாத குணம் அதிகம் கொண்டவர்கள்.

குடும்பத்தின் மேல் அதிக பாசம் இருக்கும்.

மற்றவர்கள் மனம் கோணாத அளவுக்கு நடந்து கொள்வார்கள்.

எதிலும் ஆதாயம் இருக்க வேண்டும் என்று ஆராய்ந்து செயல்படக்கூடியவார்கள்.

வெகுளித்தனமான மனநிலையை உடையவர்கள்.

நகைச்சுவையாக பேசி சூழ்நிலையை தனக்கான இடமாக மாற்றிக்கொள்ள கூடியவர்கள்.

பொருளாதார நிலை சற்று ஏற்ற, இறக்கமாகவே இருக்கும்.

அனைவருக்கும் உதவும் குணம் கொண்டவர்கள்.

அனைத்து விஷயங்களிலும் நிதானத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

## கும்ப ராசி

கும்ப ராசியின் அதிபதி சனிபகவான் ஆவார்.

அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்கள் போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் கும்ப ராசியில் பிறந்தவர்கள் ஆவர்.

### கும்ப ராசியின் வேறு பெயர்கள் :

குடம், சால், சாடி.

### பொதுவான குணங்கள் :

அமைதியான தோற்றம் கொண்டவர்கள்.

எவருக்கும் பயம் கொள்ளாதவர்கள்.

பிடிவாத குணம் கொண்டவர்கள்.

மனதை ஒரே நிலையில் கட்டுப்படுத்தும் திறன் படைத்தவர்கள்.

தனக்கு பிடித்தவர்களிடம் நெருங்கி பழகும் குணம் கொண்டவர்கள்.

பிடிக்காதவர்களை பற்றி கவலை கொள்ளாதவர்கள்.

உண்மையை பேசக்கூடியவர்கள்.

மற்றவர்களை எடை போடுவதில் வல்லவர்கள்.

தானம் செய்வதில் சிறந்தவர்கள்.

மற்றவர்களின் பிரச்சனைகளில் தலையிடுவதை விரும்பாதவர்கள்.

எந்த காரியத்தையும் எளிதில் செய்து முடிக்கக்கூடியவர்கள்.

சொந்த தொழில் புரிவதையே அதிகம் விரும்புவார்கள்.

இவர்களின் கையில் பணம் இருந்து கொண்டே இருக்கும்.

ஆடம்பரமாக வாழ ஆசைப்படுவார்கள்.

குடும்பத்தின் மீது அதிக பாசம் கொண்டிருப்பார்கள்.

எந்தவொரு செயலையும் திட்டமிட்டபடி செய்து முடிப்பார்கள்.

தங்களின் இனிமையான பேச்சால் அனைவரையும் கவர்ந்துவிடும் ஆற்றல் கொண்டவர்கள்.

## மீன ராசி

மீன ராசியின் அதிபதி குருபகவான் ஆவார்.

மீன ராசியில் பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களும் இதில் அடங்கும்.

### மீன ராசியின் வேறு பெயர்கள் :

சலசம், சலசரம், அயிரை, கயல்.

### பொதுவான குணங்கள் :

கம்பீரமான தோற்றத்தை கொண்டவர்களாக இருப்பார்கள்.

எப்போதும் இன்முகத்துடன் காணப்படுவார்கள்.

எதிலும் திட்டமிட்டு செயல்படக்கூடியவர்கள்.

வாக்கு சாதுர்யம் கொண்டவர்கள்.

சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் நடந்து கொள்ளக்கூடியவர்கள்.

எதையும் பேசியே சாதித்து கொள்வார்கள்.

பெரியோர்களுக்கு மரியாதை கொடுப்பவர்களாக இருப்பார்கள்.

ரகசியங்களை காப்பாற்ற முடியாதவர்கள்.

தற்புகழ்ச்சி அதிகம் கொண்டவர்கள்.

இறை நம்பிக்கை கொண்டவர்கள்.

உழைத்து வாழ்க்கையில் முன்னேறக்கூடியவர்கள்.

சொந்தமாக தொழில் செய்து முன்னேற வேண்டும் என விரும்பக்கூடியவர்கள்.

ஆன்மிகம் தொடர்பான காரியங்களில் ஈடுபாடு உடையவர்கள்.

இன்பமும், துன்பமும் சமம் என்று கருதும் குணம் கொண்டவர்கள்.

சுகபோகமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

மற்றவர்களின் செயல்பாடுகளில் உள்ள குறைகளை கண்டுபிடிப்பதில் வல்லவர்கள்.

எதிலும் பொறுமையாகவும், திறமையானவர்களாகவும் இருக்கக்கூடியவர்கள்.

## ராசிக்கற்கள்

ராசிக்கற்களை ராசியை சார்ந்து அணிவதைக் காட்டிலும், லக்னத்தை அடிப்படையாக கொண்டு அணிவது சுபிட்சத்தை அளிக்கும். ராசிக்கற்கள் அனைத்தும் நன்மை அளிக்கக்கூடியதாக இருந்தாலும், நமக்கு பிடித்த மற்றும் நம் விருப்பப்படி ராசிக்கற்களை அணிதல் கூடாது.

ஒவ்வொரு லக்னத்திற்கும் பொருத்தமான ராசிக்கல்லைதான் அணிய வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு விதமான கற்களுக்கும், ஒவ்வொரு விதமான கதிர்களை ஈர்க்கும் தன்மை இருக்கும்.

எந்த லக்னக்காரர்கள் எந்த ராசிக்கல் அணிய வேண்டும் என்பதைப் பற்றி பார்ப்போம்.

### மேஷம் :

மேஷ லக்னக்காரர்கள் அணிய வேண்டிய ராசிக்கல் பவளம்.

இதை அணிந்தால் மனதில் தன்னம்பிக்கையும், சுயதொழில் சார்ந்த சிந்தனைகளில் எண்ணிய வெற்றியும் கிடைக்கும்.

ரிஷபம் :

ரிஷப லக்னக்காரர்கள் அணிய வேண்டியது வைரம்.

இதை அணிந்தால் மனதில் மகிழ்ச்சியும், உடல் வசீகரமும் ஏற்படும். நிம்மதியான நித்திரையை அளிக்கும்.

மிதுனம் :

மிதுன லக்னக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம்.

இதை அணிந்தால் தொழில் விருத்தியைக் கொடுக்கும். கற்பனை வளத்தை மேம்படுத்தும்.

கடகம் :

கடக லக்னக்காரர்கள் அணிய வேண்டியது முத்து.

இதை அணிந்தால் உடல் ஆரோக்கியம் சார்ந்த குறைகள் நீங்கும். தம்பதிகளுக்கிடையே உறவுகளை வலுப்படுத்தும்.

சிம்மம் :

சிம்ம லக்னக்காரர்கள் அணிய வேண்டியது மாணிக்கம்.

இதை அணிந்தால் அதிர்ஷ்டத்தைத் தரும். மன தைரியத்தையும், உங்களின் மீதான நம்பிக்கையையும் அதிகப்படுத்தும்.

கன்னி :

கன்னி லக்னக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம்.

இதை அணிந்தால் புத்துணர்ச்சியும், எதிர்மறை எண்ணங்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

துலாம் :

துலாம் லக்னக்காரர்கள் அணிய வேண்டியது வைரம்.

இதை அணிந்தால் நெருக்கமானவர்களிடம் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். புதிய இடங்களுக்கான பயணங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

விருச்சிகம் :

விருச்சிக லக்னக்காரர்கள் அணிய வேண்டியது பவளம்.

இதை அணிந்தால் செய்யும் செயல்களால் மேன்மையான சூழல் உண்டாகும். தொழிலில் புதிய வாய்ப்புகள் உருவாகும்.

தனுசு :

தனுசு லக்னக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்பராகம்.

இதை அணிந்தால் பொருளாதார சிக்கலும், மனதில் இருந்துவந்த குழப்பமும் நீங்கும்.

மகரம் :

மகர லக்னக்காரர்கள் அணிய வேண்டியது நீலக்கல்.

இதை அணிந்தால் வெளிவட்டாரங்களில் செல்வாக்கு மேம்படும். எதிர்ப்புகளை வெற்றி கொள்வார்கள்.

கும்பம் :

கும்ப லக்னக்காரர்கள் அணிய வேண்டியது நீலக்கல்.

இதை அணிந்தால் பெரும்போக்கான எண்ணங்களை அதிகரிக்கும். பிரச்சனைகளில் இருந்து காக்கும்.

மீனம் :

மீன லக்னக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்பராகம்.

இதை அணிந்தால் நல்ல நபர்களின் அறிமுகத்தை உருவாக்கும். தோற்றத்தில் மாற்றத்தை உண்டாக்கும்.

## தாராபலன்கள்

ஜோதிடத்தில் சந்திரன் ஒரு ராசியை கடக்க 2.25 நாட்கள் ஆகும். ஒவ்வொரு ராசியிலும் ஒன்பது பாதங்கள் வீதம் சந்திரன் ஒரு பாதத்தை கடந்து கொண்டே இருக்கின்றார்.

சந்திரன், கோச்சார ரீதியாக தனது பலன்களைதான் அன்று செல்லும் தாரை மூலமாக வழங்கி கொண்டு இருக்கின்றார். சமஸ்கிருத மொழியில் தாரா அல்லது தாரை என்றால் நட்சத்திரம் என்று பொருள்படும்.

நமது வாழ்நாளில் முக்கியமான செயல்களை மேற்கொள்ளும்போது அந்த நாளில் அவரவர்களின் ஜென்ம நட்சத்திரத்திற்கு ஏற்ப சந்திரனின் நிலை சாதகமாக உள்ளதா? அல்லது பாதகமாக உள்ளதா? என்பதை தாராபலன் மூலமாக தெரிந்துக்கொள்ள முடியும்.

ஒருவரின் ஜென்ம நட்சத்திரத்தில் இருந்து அன்றைய தினத்தின் நட்சத்திரம் வரை எண்ணும் பொழுது வருகின்ற 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 உள்ள எண்களுக்கு பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 9க்கு மேல் வந்தால் 9ஆல் வகுக்க வரும் மீதியை கொண்டு பலன்களை காண வேண்டும்.

தாரைகளின் பெயர்களும், பலன்களும் :

| | | |
|---|---|---|
| 1. | ஜென்மதாரை | மனக்குழப்பத்தை தரும். |
| 2. | சம்பத்து தாரை | தனவரவு, நற்காரியங்கள் தொடர்பான செயல்களை மேற்கொள்ளலாம். |
| 3. | விபத்து தாரை | தவிர்க்க வேண்டிய நாள். |
| 4. | சேமத்தாரை | நன்மை தரும். |
| 5. | பிரத்தயக்கு தாரை | சிக்கல்கள் தரும். மனக்குழப்பம், வீண் அலைச்சல்கள் உண்டாகும். |
| 6. | சாதகதாரை | புதிய முயற்சி மற்றும் செயல்களுக்கு சாதகமாக அமையும். |
| 7. | வதைதாரை | துன்பங்களை தரும். |
| 8. | மைத்திரதாரை | தெய்வகாரியம் செய்தல், புதிய முயற்சி, புதிய செயல்கள் செய்யலாம். |
| 9. | பரம மைத்திரதாரை | அனைத்து சுபச்செயல்களுக்கும் உகந்த நாட்கள் ஆகும். |

## கிரகச் சேர்க்கை

நவகிரகம் என்பது ஒன்பது ஆளுகைக்காரர்கள் எனப் பொருள்படும். பூமியிலுள்ள உயிர்க்கூறுகளை ஆளுகைக்கு உட்படுத்துகின்ற அண்டவெளிக்கூறுகளாக இவை கருதப்படுகின்றன.

நவகிரங்களில் மொத்தம் 9 கிரகங்கள் உள்ளன.

அவையாவன,

சூரியன்

சந்திரன்

செவ்வாய்

புதன்

குரு

சுக்கிரன்

சனி

ராகு

கேது

இக்கிரகங்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பல்வேறு பலன்களை நமக்கு அளிக்கின்றன.

## இரண்டு கிரகச் சேர்க்கையும், அதன் பலன்களும்

ஜாதகக்கட்டத்தில் இரண்டு கிரகங்கள் ஒன்றாக சேர்ந்து இருந்தால் அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? இரண்டு கிரகங்கள் ஒன்று சேர்ந்து இருந்தால் உண்டாகும் பலன்களை பற்றி பார்க்கலாம்.

### குரு + சுக்கிரன் :

பிடிவாத குணம் கொண்டவர்கள்.

தன்னை பற்றி மட்டும் சிந்திக்கக்கூடியவர்கள்.

மற்றவர்களுக்கு உபதேசிப்பதில் வல்லவர்கள்.

அனுபவ அறிவு உடையவர்கள்.

ஆடம்பர பொருட்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

குரு + சனி :

பிடித்த உணவுகளை ரசித்து உண்ணக்கூடியவர்கள்.

தைரியமானவர்கள் மற்றும் மெத்தன போக்கு உடையவர்கள்.

மாற்றத்தை விரும்பக்கூடியவர்கள்.

பயணங்களில் அலாதி நாட்டம் கொண்டவர்கள்.

ரகசியத்தை காப்பாற்றக்கூடியவர்கள்.

எதிர்பாராத அதிர்ஷ்டம் கொண்டவர்கள்.

குரு + ராகு :

கல்வியில் ஆர்வம் கொண்டவர்கள்.

பொருட்சேர்க்கைக்கான யுக்திகளை அறிந்தவர்கள்.

சாஸ்திரங்களில் நம்பிக்கை கொண்டவர்கள்.

கலைத்துறையில் ஆர்வம் கொண்டவர்கள்.

பேச்சுவன்மை உடையவர்கள்.

குணமறிந்து பழகும் தன்மை கொண்டவர்கள்.

குரு + கேது :

எதையும் முன்னின்று செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

சாஸ்திரங்களில் ஈடுபாடு உடையவர்கள்.

ஆராய்ச்சி பணிகளில் விருப்பம் கொண்டவர்கள்.

உதவும் மனப்பான்மை உடையவர்கள்.

பலவிதமான திறமைகளை கொண்டவர்கள்.

கால்நடைகளை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டவர்கள்.

சந்திரன் + செவ்வாய் :

தைரியமான செயல்பாடுகளை உடையவர்கள்.

மருத்துவ ஞானம் கொண்டவர்கள்.

அழகிய தேகம் உடையவர்கள்.

பயணங்களின் மூலம் லாபம் அடையக்கூடியவர்கள்.

சந்திரன் + புதன் :

சிறந்த ஞானம் உடையவர்கள்.

நுட்பமான செயல்களில் விருப்பம் கொண்டவர்கள்.

ஆராய்ச்சி மற்றும் கணிதத்தில் ஆர்வம் கொண்டவர்கள்.

புதுமையான எண்ணங்களை உடையவர்கள்.

மகிழ்ச்சியாக வாழக்கூடியவர்கள்.

பிறரையும் மகிழ்விக்கக்கூடியவர்கள்.

சந்திரன் + குரு :

எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் கிடைக்கும்.

சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவர்கள்.

எதிர்ப்புகளை கலையக்கூடியவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

சந்திரன் + சுக்கிரன் :

அழகிய தேகம் கொண்டவர்கள்.

சாதுர்யமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

கல்வி செல்வம் உடையவர்கள்.

இளகிய மனம் கொண்டவர்கள்.

சந்திரன் + சனி :

வேலைகளில் ஆர்வம் உடையவர்கள்.

உயர்ந்த லட்சியங்களை உடையவர்கள்.

குடும்பத்தின் மீது பற்று கொண்டவர்கள்.

பிறருக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

சந்திரன் + ராகு :

நன்கு சிந்திக்கக்கூடியவர்கள்.

மாற்றத்தை விரும்பக்கூடியவர்கள்.

புதியதை தேடக்கூடியவர்கள்.

சந்திரன் + கேது :

பல விஷயங்களை அறிந்தவர்கள்.

சோம்பல் குணம் கொண்டவர்கள்.

மறைமுக சக்திகள் பற்றிய ஞானம் கொண்டவர்கள்.

இவர்களின் செயல்பாடுகளை புரிந்து கொள்வது கடினம்.

சுக்கிரன் + சனி :

கம்பீரமான தோற்றம் கொண்டவர்கள்.

உழைத்து முன்னேறக்கூடியவர்கள்.

உணர்ச்சிமிக்கவர்கள்.

விவசாயம் தொடர்பான செயல்களில் விருப்பம் கொண்டவர்கள்.

எதையும் ஆராயாமல் செய்யக்கூடியவர்கள்.

சுக்கிரன் + ராகு :

மனைவியிடம் அதிக அன்பு கொண்டவர்கள்.

நினைத்த காரியத்தை செய்து முடிக்கக்கூடியவர்கள்.

செல்வாக்கு உடையவர்கள்.

வெளியூர் பயணங்களில் விருப்பம் கொண்டவர்கள்.

அதிக ஆசைகளை கொண்டவர்கள்.

தன்னை பற்றி தாழ்வாக எண்ணக்கூடியவர்கள்.

சுக்கிரன் + கேது :

ஆன்மிக ஈடுபாடு உடையவர்கள்.

கற்பனை வளம் கொண்டவர்கள்.

ஆடம்பர பொருட்களின் மீது விருப்பம் இல்லாதவர்கள்.

மறைமுக செயல்பாடுகளை கொண்டவர்கள்.

நெருக்கமானவர்களிடம் அடிக்கடி மனஸ்தாபங்கள் உண்டாகும்.

### சனி + ராகு :

கல்வியில் விருப்பம் கொண்டவர்கள்.

கனரக வாகனங்களால் ஆதாயம் அடையக்கூடியவர்கள்.

பணியாளர்களிடம் அனுசரித்து பழகக்கூடியவர்கள்.

எதிலும் நேர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

எதிரிகளை வெல்லக்கூடியவர்கள்.

சில ரகசிய செயல்பாடுகளில் விருப்பம் கொண்டவர்கள்.

### சனி + கேது :

தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள்.

கோபமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

உணர்ச்சிமிக்கவர்கள்.

எளிமையை விரும்பக்கூடியவர்கள்.

தைரியமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

சுயநலம் கலந்த பொதுநல எண்ணங்கள் கொண்டவர்கள்.

உணவு விஷயத்தில் விருப்பம் கொண்டவர்கள்.

### சூரியன் + சந்திரன் :

பயணங்கள் மேற்கொள்வதில் விருப்பம் கொண்டவர்கள்.

சிந்தனையாளர்களாகவும், பேச்சாளர்களாகவும் விளங்கக்கூடியவர்கள்.

எதிலும் சிறந்து விளங்கக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள்.

சஞ்சலமான எண்ணங்களை கொண்டவர்கள்.

சூரியன் + செவ்வாய் :

முன்கோபம் கொண்டவர்கள்.

எவருக்கும் தலை வணங்கும் குணம் உடையவர்கள்.

அச்சம் இல்லாதவர்கள்.

சகோதரர்களின் மூலம் ஆதாயம் அடையக்கூடியவர்கள்.

சூரியன் + புதன் :

கல்வியில் நாட்டம் கொண்டவர்கள்.

விகடகவியான பேச்சுக்களால் அனைவரையும் கவரக்கூடியவர்கள்.

வாக்குத்திறமை உடையவர்கள்.

தாய்மாமன் உறவுகளின் மூலம் ஆதாயம் அடையக்கூடியவர்கள்.

சூரியன் + குரு :

நேர்மையான செயல்பாடுகளை உடையவர்கள்.

பரந்த மனப்பான்மை கொண்டவர்கள்.

உயர் பதவிகளை வகிக்கக்கூடியவர்கள்.

அனைவரையும் ஒன்றாக கருதக்கூடியவர்கள்.

சூரியன் + சுக்கிரன் :

அலங்கார பொருட்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

வாகன யோகம் உடையவர்கள்.

பாசன வசதி உடையவர்கள்.

கண் சம்பந்தப்பட்ட குறைபாடுகள் இருக்கும்.

சூரியன் + சனி :

தந்தையிடம் கருத்து வேறுபாடு உண்டாகும்.

தொழிலில் ஏற்ற, இறக்கமான சூழல் உண்டாகும்.

கடினமான உழைப்பாளிகள்.

சூரியன் + ராகு :

அரசு தொடர்பான துறைகளில் நுணுக்கங்களை அறிந்தவர்கள்.

புதுவிதமான சிந்தனைகளை உடையவர்கள்.

அந்நிய பொருட்களின் மூலம் லாபம் அடையக்கூடியவர்கள்.

கண் சம்பந்தப்பட்ட குறைபாடுகள் இருக்கும்.

சூரியன் + கேது :

ஆன்மிகத்தில் நாட்டம் கொண்டவர்கள்.

மரங்கள் தொடர்பான செயல்களில் விருப்பம் கொண்டவர்கள்.

தனிமையை விரும்பக்கூடியவர்கள்.

கண் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படும்.

செவ்வாய் + புதன் :

தாய்மாமன் வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

மனைகளால் லாபம் அடையக்கூடியவர்கள்.

அதிகாரம் கொண்ட உயர் பதவிகளை வகிக்கக்கூடியவர்கள்.

மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் கொண்டவர்கள்.

செவ்வாய் + குரு :

குருமார்களிடம் மிகுந்த பக்தி கொண்டவர்கள்.

எளிமையை விரும்பக்கூடியவர்கள்.

சமூக பணிகளில் ஆர்வம் உடையவர்கள்.

அறிவுக்கு மிஞ்சிய திறமை கொண்டவர்கள்.

எதிர்ப்புகளை சாதுர்யமாக வெல்லக்கூடியவர்கள்.

செவ்வாய் + சுக்கிரன் :

வெளியூர் பயணங்களில் ஆர்வம் கொண்டவர்கள்.

எழில்மிகு தோற்றம் கொண்டவர்கள்.

எதையும் சாமர்த்தியமாக செய்யும் திறமை உடையவர்கள்.

புதுவிதமான எண்ணங்களை கொண்டவர்கள்.

செவ்வாய் + சனி :

மனோதைரியம் உடையவர்கள்.

எதையும் சமாளிக்கக்கூடியவர்கள்.

தன் மனம் விரும்பும்படி வாழக்கூடியவர்கள்.

கற்பனை வளம் உடையவர்கள்.

சாதுர்யமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

செவ்வாய் + ராகு :

திட்டம் தீட்டுவதில் வல்லவர்கள்.

சண்டை விவகாரங்களில் ஆர்வம் கொண்டவர்கள்.

அனைவருடனும் பழகக்கூடியவர்கள்.

விருப்பம் போல் வாழக்கூடியவர்கள்.

முற்போக்கு சிந்தனை கொண்டவர்கள்.

செவ்வாய் + கேது :

நினைத்த செயலை செய்து முடிக்கக்கூடியவர்கள்.

உடன் பிறந்தவர்களிடம் அன்பு கொண்டவர்கள்.

மறைமுக சக்திகள் பற்றிய ஞானம் கொண்டவர்கள்.

உடல் வலிமை கொண்டவர்கள்.

உயர் பதவிகளை வகிக்கக்கூடியவர்கள்.

புதன் + குரு :

எதிர்பாலின மக்களிடம் அதிக ஆர்வம் கொண்டவர்கள்.

பயணங்களின் மீது அதிக விருப்பம் கொண்டவர்கள்.

வாதத்திறமை உடையவர்கள்.

ஆன்மிக குருக்களின் மீது பற்று கொண்டவர்கள்.

மற்றவர்களை கவருவதில் அலாதி பிரியம் கொண்டவர்கள்.

இவர்களின் எண்ணங்களை அறிந்து கொள்வது கடினம்.

புதன் + சுக்கிரன் :

மற்றவர்களுக்கு தகுந்தாற்போல் நடந்து கொள்ளக்கூடியவர்கள்.

இறைவழிபாடுகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

நினைத்த பணியை செய்து முடிக்கக்கூடியவர்கள்.

எதிலும் நேர்மையை விரும்பக்கூடியவர்கள்.

தன்னால் முடிந்த அளவு மற்றவர்களுக்கு உதவக்கூடியவர்கள்.

அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டவர்கள்.

புதன் + சனி :

பெரிய நட்பு வட்டம் கொண்டவர்கள்.

பொருள் சேர்ப்பதிலும், காப்பதிலும் வல்லவர்கள்.

எதிலும் சமநிலையுடன் இருக்கக்கூடியவர்கள்.

கோபம் கொண்டவர்கள்.

அறிவுரைகளை விரும்பாதவர்கள்.

தனது முடிவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடியவர்கள்.

புதன் + ராகு :

புத்திக்கூர்மை உடையவர்கள்.

சூழலுக்கு தகுந்தாற்போல் தனது முடிவுகளை மாற்றக்கூடியவர்கள்.

அலைபாயும் மனநிலையை உடையவர்கள்.

மற்றவர்களின் எண்ணங்களை அறிவதில் வல்லவர்கள்.

பேச்சுக்கலையில் மன்னர்கள்.

ஆரோக்கிய குறைபாடுகள் தோன்றி மறையும்.

புதன் + கேது :

அறிவுக்கூர்மையுடன் செயல்படக்கூடியவர்கள்.

இறை ஞானம் உடையவர்கள்.

அனைவரிடமும் பழகக்கூடியவர்கள்.

துரிதமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

சுக போகங்களை ரசித்து வாழக்கூடியவர்கள்.

## மூன்று கிரகச்சேர்க்கையும், அதன் பலன்களும்

ஜாதகக்கட்டத்தில் மூன்று கிரகங்கள் ஒன்றாக சேர்ந்து இருந்தால் அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? மூன்று கிரகங்கள் ஒன்று சேர்ந்து இருந்தால் உண்டாகும் பலன்களை பற்றி பார்க்கலாம்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் :

தைரியம் கொண்டவர்கள்.

எதற்கும் தயக்கம் கொள்ளாதவர்கள்.

அமைதியான குணநலன்களை கொண்டவர்கள்.

எதையும் செய்து முடிக்கும் சக்தி கொண்டவர்கள்.

கால்நடைகளை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டவர்கள்.

சூரியன் + சந்திரன் + புதன் :

அரசு பணிகளில் ஈடுபாடு உடையவர்கள்.

கீர்த்தி உடையவர்கள்.

அழகான தோற்றம் கொண்டவர்கள்.

மற்றவர்களை அடக்கி ஆளும் திறமை கொண்டவர்கள்.

சூரியன் + சந்திரன் + குரு :

சமூக பணிகளில் ஈடுபாடு உடையவர்கள்.

பயணங்கள் மேற்கொள்வதில் ஆர்வம் உடையவர்கள்.

மற்றவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கக்கூடியவர்கள்.

செல்வாக்கு உடையவர்கள்.

சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றி கொள்ளக்கூடியவர்கள்.

சூரியன் + சந்திரன் + சுக்கிரன் :

உடன்பிறந்தவர்களிடம் போட்டி போடும் குணம் கொண்டவர்கள்.

அலைபாயும் மனநிலையை கொண்டவர்கள்.

புரிந்துக்கொள்ளும் தன்மை குறைவு.

மற்றவர்கள் பொருட்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

தனது விருப்பத்தை நிறைவேற்ற எதையும் செய்யக்கூடியவர்கள்.

சூரியன் + சந்திரன் + சனி :

மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயல்படக்கூடியவர்கள்.

உலோகத்துறையில் புகழ் பெறக்கூடியவர்கள்.

செய்யும் முயற்சிகளில் சாதகமான முடிவுகள் காலதாமதமாக கிடைக்கும்.

எதிலும் நிதானமான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

சிறிய விஷயங்களுக்குக்கூட கவலை கொள்ளக்கூடியவர்கள்.

சூரியன் + செவ்வாய் + புதன் :

அனைவராலும் மதிக்கப்படக்கூடியவர்கள்.

அழகான தோற்றம் கொண்டவர்கள்.

மனோபலம் கொண்டவர்கள்.

பல நுணுக்கமான விஷயங்களை அறிந்தவர்கள்.

மந்திரங்கள் கூறுவதில் திறமை உடையவர்கள்.

சூரியன் + செவ்வாய் + குரு :

பேச்சுத்திறமை உடையவர்கள்.

செல்வ வளம் கொண்டவர்கள்.

நல்ல இல்லறம் அமையப்பெற்றவர்கள்.

உயர்பதவி வகிக்கும் திறமை உடையவர்கள்.

எதிலும் நேர்மையான செயல்பாடுகளை கொண்டவர்கள்.

சூரியன் + செவ்வாய் + சுக்கிரன் :

அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள்.

கண்களில் சிறு குறைபாடுகள் இருக்கலாம்.

சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படக்கூடியவர்கள்.

ஆசைகள் அதிகம் கொண்டவர்கள்.

தனது நிலை அறிந்து செயல்படக்கூடியவர்கள்.

சூரியன் + செவ்வாய் + சனி :

செல்வம் பெறுவதில் தடைகள் உண்டாகும்.

விதிமுறைகளை மீறி செயல்படக்கூடியவர்கள்.

சண்டையிடுவதில் விருப்பம் கொண்டவர்கள்.

சூரியன் + புதன் + குரு :

கல்வி வேள்விகளில் சிறந்து விளங்கக்கூடியவர்கள்.

சாஸ்திரங்களில் நம்பிக்கை கொண்டவர்கள்.

நற்குணங்கள் அமையப்பெற்றவர்கள்.

தன்னுடைய முயற்சியால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையக்கூடியவர்கள்.

சூரியன் + புதன் + சனி :

மற்றவர்களிடம் இருக்கும் தவறுகளை சுட்டிக்காட்டக்கூடியவர்கள்.

பலதரப்பட்ட மக்கள் தொடர்பு கொண்டவர்கள்.

இரும்பு சார்ந்த துறைகளில் வல்லுனர்களாக இருக்கக்கூடியவர்கள்.

சூரியன் + குரு + சுக்கிரன் :

அரசு தொடர்பான காரியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள்.

மற்றவர்களுக்கு உதவி செய்யும் குணம் கொண்டவர்கள்.

வெளிநாட்டு மக்களுடன் தொடர்பு கொண்டவர்கள்.

விருப்பம் போல் செலவு செய்யக்கூடியவர்கள்.

சூரியன் + குரு + சனி :

உயர்பதவி வகிக்கக்கூடியவர்கள்.

அழகிய தோற்றம் கொண்டவர்கள்.

எதிலும் திறமையுடன் செயல்படக்கூடியவர்கள்.

செல்வாக்கு உடையவர்கள்.

தொழில்நுட்ப துறையில் மற்றவர்களை வழிநடத்தும் திறமை கொண்டவர்கள்.

சூரியன் + சுக்கிரன் + சனி :

பயந்த சுபாவம் கொண்டவர்கள்.

கலைகளில் விருப்பம் இல்லாதவர்கள்.

அலர்ஜி தொடர்பான பிரச்சனைகளை கொண்டவர்கள்.

சந்திரன் + செவ்வாய் + புதன் :

உறவினர்களிடம் இருந்து விலகி இருக்கக்கூடியவர்கள்.

பூர்வீகச் சொத்துக்களை அடைவதில் தடைகள் ஏற்படும்.

சந்திரன் + செவ்வாய் + குரு :

பிறருடைய பொருட்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

வாழ்க்கைத்துணையிடம் அதிக அன்பு கொண்டவர்கள்.

வெளியூரில் வாழக்கூடியவர்கள்.

பலவகைப்பட்ட திறமைகள் உடையவர்கள்.

சந்திரன் + செவ்வாய் + சுக்கிரன் :

பலதரப்பட்ட மக்களின் தொடர்பு கொண்டவர்கள்.

மனதில் ஏதாவது கவலையுடன் இருக்கக்கூடியவர்கள்.

எந்த வகையானாலும் பொருள் ஈட்டும் திறமை கொண்டவர்கள்.

சந்திரன் + செவ்வாய் + சனி :

தாயிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

பிறர் செய்யும் செயல்களில் இருக்கும் குறைகளை காணக்கூடியவர்கள்.

விவசாயம் சார்ந்த பணிகளின் மூலம் லாபம் அடையக்கூடியவர்கள்.

சந்திரன் + புதன் + குரு :

அனைவராலும் விரும்பப்படக்கூடியவர்கள்.

அறிவுக்கூர்மை கொண்டவர்கள்.

கலைகளில் ஆர்வம் உடையவர்கள்.

சந்திரன் + புதன் + சுக்கிரன் :

கல்வி வேள்விகளில் சிறந்து விளங்கக்கூடியவர்கள்.

கீர்த்தி உடையவர்கள்.

சிறிது கர்வ குணம் கொண்டவராக விளங்கக்கூடியவர்கள்.

சந்திரன் + புதன் + சனி :

தெளிவான சிந்தனைகளை உடையவர்கள்.

நற்குணம் கொண்டவர்கள்.

உயர் அதிகாரிகளுடன் நட்புடன் பழகக்கூடியவர்கள்.

சந்திரன் + குரு + சுக்கிரன் :

அதிர்ஷ்டம் உடையவர்கள்.

புகழ் பெறக்கூடியவர்கள்.

இலக்கியம் சார்ந்த கலைகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

சந்திரன் + குரு + சனி :

கல்வி வேள்விகளில் சிறந்து விளங்கக்கூடியவர்கள்.

மந்திர கலைகளில் ஆர்வம் கொண்டவர்கள்.

அழகான தோற்றம் கொண்டவர்கள்.

சந்திரன் + சுக்கிரன் + சனி :

வேதங்களில் அறிவு பெற்றவர்கள்.

புத்தகம் இயற்றும் தன்மை கொண்டவர்கள்.

அலங்காரப் பொருட்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

செவ்வாய் + புதன் + குரு :

கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டவர்கள்.

மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

செவ்வாய் + புதன் + சுக்கிரன் :

செல்வம் அதிகம் கொண்டவர்கள்.

வாக்குவன்மை உடையவர்கள்.

தம்பதிகளுக்குள் சிறு விவாதங்கள் தோன்றி மறையும்.

செவ்வாய் + புதன் + சனி :

மெலிந்த தேகம் கொண்டவர்கள்.

வெளியூரில் வாழக்கூடியவர்கள்.

நிதானம் இல்லாதவர்கள்.

செவ்வாய் + குரு + சுக்கிரன் :

நற்பண்புகள் உடையவர்கள்.

சபைகளில் மதிப்பு உடையவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது ஈடுபாடு கொண்டவர்கள்.

செவ்வாய் + குரு + சனி :

வியாபாரத்தில் லாபம் அடையக்கூடியவர்கள்.

பெரிய நபர்களுடன் நட்பு கொண்டவர்கள்.

அரசு தொடர்பான செயல்பாடுகளில் லாபம் உடையவர்கள்.

செவ்வாய் + சுக்கிரன் + சனி :

வெளிநாடுகளில் வாழக்கூடியவர்கள்.

ஆசைகள் அதிகம் கொண்டவர்கள்.

தங்கள் விருப்பம் நிறைவேற எந்த எல்லைக்கும் செல்லக்கூடியவர்கள்.

புதன் + குரு + சுக்கிரன் :

அரசு தொடர்பான காரியங்களில் ஆதரவு கொண்டவர்கள்.

எப்போதும் மகிழ்ச்சியுடன் கூடிய முகத்தினை உடையவர்கள்.

அமைதியான குணநலன்களை கொண்டவர்கள்.

புதன் + குரு + சனி :

உயர் பதவி வகிக்கக்கூடியவர்கள்.

செல்வச்சேர்க்கை உடையவர்கள்.

பொறுமையுடன் இருக்கக்கூடியவர்கள்.

புதன் + சுக்கிரன் + சனி :

மற்றவர்களை திசை திருப்புவதில் வல்லவர்கள்.

பயணங்களின் மீது விருப்பம் கொண்டவர்கள்.

கலைகளில் நுட்பங்களை அறிந்தவர்கள்.

குரு + சுக்கிரன் + சனி :

ஆராய்ச்சி சார்ந்த துறைகளில் விருப்பம் கொண்டவர்கள்.

எதையும் சிந்தித்து செயல்படக்கூடியவர்கள்.

திட்டமிட்ட காரியத்தை எண்ணிய விதத்தில் செய்து முடிக்கக்கூடியவர்கள்.

## நான்கு கிரகச்சேர்க்கையும், அதன் பலன்களும்

ஜாதகக்கட்டத்தில் நான்கு கிரகங்கள் ஒன்றாக சேர்ந்து இருந்தால் அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? நான்கு கிரகங்கள் ஒன்று சேர்ந்து இருந்தால் உண்டாகும் பலன்களை பற்றி பார்க்கலாம்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + புதன் :

மாயக்கலைகளை நன்கு அறிந்தவர்கள்.

சாதுர்யமாக செயல்படக்கூடியவர்கள்.

உடல் பலவீனம் உடையவராக இருப்பார்கள்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + குரு :

செல்வ வளம் கொண்டவர்கள்.

கடவுள் பக்தி உடையவராக இருப்பார்கள்.

கீர்த்தி உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + சுக்கிரன் :

இரு தார அமைப்பு உடையவர்கள்.

கலைகளின் மீது ஆர்வம் உடையவராக இருப்பார்கள்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + சனி :

தனது விருப்பம் போல் செலவு செய்யக்கூடியவர்கள்.

விகாரமான விழிகளை கொண்டவர்கள்.

சஞ்சலமான மனநிலையை உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + புதன் + சுக்கிரன் :

பெற்றோர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.

ஆன்மிகத்தில் சிந்தனை உடையவராக இருப்பார்கள்.

வாக்கு பலிதம் கொண்டவர்கள்.

சூரியன் + சந்திரன் + புதன் + சனி :

மற்றவர்களுக்கு கீழ் பணிபுரியக்கூடியவர்கள்.

நிலையற்ற மனநிலையை கொண்டவராக இருப்பார்கள்.

சூரியன் + சந்திரன் + குரு + சுக்கிரன் :

யோகம் கொண்டவர்கள்.

பாசன வசதி உள்ள இடத்தில் வசிக்கக்கூடியவர்கள்.

சூரியன் + சந்திரன் + குரு + சனி :

புத்திர பாக்கியம் உடையவர்கள்.

விகாரமான விழிகளை கொண்டவர்கள்.

விசுவாசமான வேலையாட்களை கொண்டவர்கள்.

சூரியன் + சந்திரன் + சுக்கிரன் + சனி :

பயந்த சுபாவம் கொண்டவர்கள்.

பொருட்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

சமவயதினர்களை அனுசரித்து செல்லக்கூடியவர்கள்.

சூரியன் + செவ்வாய் + புதன் + குரு :

நிலையற்ற தன்மையுடையவர்கள்.

பார்வைக்கோளாறு உடையவர்கள்.

அலைச்சல் கொண்டவர்கள்.

சூரியன் + செவ்வாய் + புதன் + சுக்கிரன் :

எதிர்பாலின மக்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

பொறாமை குணம் உடையவர்கள்.

பிறர் பொருட்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

சூரியன் + செவ்வாய் + புதன் + சனி :

அரசு சம்பந்தமான பணிகளில் தொடர்பு உடையவர்கள்.

சூரியன் + செவ்வாய் + குரு + சுக்கிரன் :

தலைமை பதவி வகிக்கக்கூடியவர்கள்.

பிரபலமானவர்கள்.

தனச்சேர்க்கை உடையவர்கள்.

சூரியன் + செவ்வாய் + குரு + சனி :

எதிலும் அச்சம் உடையவர்கள்.

உறவு மற்றும் நண்பர்கள் அதிகம் கொண்டவர்கள்.

சூரியன் + செவ்வாய் + சுக்கிரன் + சனி :

நேர்மையான குணம் கொண்டவர்கள்.

பழிச்சொற்களுக்கு ஆளாகக்கூடியவர்கள்.

சூரியன் + புதன் + குரு + சுக்கிரன் :

தனலாபம் கொண்டவர்கள்.

கல்வியில் சிறந்து விளங்கக்கூடியவர்கள்.

சாதுர்யமாக செயல்படக்கூடியவர்கள்.

சூரியன் + புதன் + குரு + சனி :

சண்டையிடுவதில் ஆர்வம் கொண்டவர்கள்.

விளையாட்டுத்தனம் உடையவர்கள்.

உறவுகளிடத்தில் ஆதரவு இல்லாதவர்கள்.

சூரியன் + புதன் + சுக்கிரன் + சனி :

ஆச்சாரம் உடையவர்கள்.

வித்தைகள் பல கற்றவர்கள்.

சந்திரன் + செவ்வாய் + புதன் + குரு :

கவிபாடும் திறமை கொண்டவர்கள்.

விருப்பத்தை நிறைவேற்றக்கூடியவர்கள்.

சந்திரன் + செவ்வாய் + புதன் + சுக்கிரன் :

அழகிய தோற்றம் உடையவர்கள்.

மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை கொண்டவர்கள்.

சந்திரன் + செவ்வாய் + புதன் + சனி :

உடல் பலம் கொண்டவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

சந்திரன் + செவ்வாய் + குரு + சனி :

ஸ்திரபுத்தி உடையவர்கள்.

எதிலும் நிபுணத்துவம் (வல்லமை) கொண்டவர்கள்.

சந்திரன் + புதன் + குரு + சனி :

உறவினர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.

மற்றவர்களின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடியவர்கள்.

சந்திரன் + புதன் + சுக்கிரன் + சனி :

ஆசைகள் அதிகம் உடையவர்கள்.

எதிர்பாலின மக்களின் மீது ஆர்வம் கொண்டவர்கள்.

சந்திரன் + குரு + சுக்கிரன் + சனி :

கவலைகள் கொண்டவர்கள்.

விரக்தி மனப்பான்மை உடையவர்கள்.

செவ்வாய் + புதன் + குரு + சுக்கிரன் :

தனம் கொண்டவர்கள்.

பகுத்தறியும் தன்மை உடையவர்கள்.

செவ்வாய் + புதன் + குரு + சனி :

நல்ல குணம் கொண்டவர்கள்.

பலதொழில் செய்யக்கூடியவர்கள்.

## ஐந்து கிரகச்சேர்க்கையும், அதன் பலன்களும்

ஜாதகக்கட்டத்தில் ஐந்து கிரகங்கள் ஒன்றாக சேர்ந்து இருந்தால் அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? மேலும், ஐந்து கிரகங்கள் ஒன்று சேர்ந்து இருந்தால் உண்டாகும் பலன்களை பற்றி பார்க்கலாம்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + புதன் + குரு :

சண்டையிடுவதில் ஆர்வம் உடையவர்கள்.

மற்றவர்களை பற்றி குறை சொல்வதில் வல்லவர்கள்.

சூரியன் + செவ்வாய் + புதன் + சுக்கிரன் + சனி :

மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

உறவுகளை விட்டு விலகி இருக்கக்கூடியவர்கள்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + குரு + சனி :

மனை வசதி உடையவர்கள்.

கவலையான மனநிலையை உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + புதன் + சனி :

குழம்பிய மனம் கொண்டவர்கள்.

பொருள் சேர்க்கும் திறமை உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + குரு + சுக்கிரன் :

அவசர குணம் கொண்டவர்கள்.

பார்வைக்கோளாறு உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + செவ்வாய் + சுக்கிரன் + சனி :

பயம் இல்லாதவர்கள்.

ஆசைகள் அதிகம் உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + புதன் + குரு + சுக்கிரன் :

பலம் கொண்டவர்கள்.

கீர்த்தி உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + புதன் + குரு + சனி :

பயந்த சுபாவம் கொண்டவர்கள்.

நிபுணத்துவம்(வல்லமை) உடையவர்கள்.

சூரியன் + சந்திரன் + புதன் + சுக்கிரன் + சனி :

பெருத்த உடல்வாகு உடையவர்கள்.

உடல் பலவீனம் கொண்டவர்கள்.

மேற்கூறிய அனைத்தும் பொதுவான பலன்களே ஆகும். அவரவர் லக்னங்களின் கிரக நிலைகளுக்கு ஏற்ப பலன்கள் மாறுபடும்.

## கோச்சாரம்

பரந்து விரிந்த வான் மண்டலத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அங்கு உள்ள கிரகங்களின் நிலைகளை பற்றி அறிந்துகொள்ள உதவுவது கோச்சாரம்.

ஒரு குழந்தை பிறக்கின்ற நேரத்தில் வான் மண்டலத்தில் உள்ள கிரகங்களின் நிலைகளை வைத்தே அந்த குழந்தையின் விதி அமைகிறது.

ஒவ்வொருவரது ஜாதகத்திலும் இந்த விதிப்படி ஒரு சில கிரகங்கள் பாதகமாகவும் (தீமை பயக்கும் கிரகங்களாகவும்), மற்ற கிரகங்கள் சாதகமாகவும் (நன்மை பயக்கும் கிரகங்களாகவும்) அமைகின்றது.

அதாவது, ஒருவர் பிறந்த நேரப்படி பாதகமான நிலையில் உள்ள கிரகங்கள் தீமையான பலன்களையும், சாதகமான நிலையில் உள்ள மற்ற கிரகங்கள் நன்மையான பலன்களையும் அளிக்கும்.

வேகமாக சுற்றும் கிரகம் :

வேகமாக சுற்றும் (நகரும்) கிரகங்களான சந்திரன், சூரியன், புதன், சுக்கிரன் மற்றும் செவ்வாய் கோச்சாரத்தில் எப்படி இருந்தாலும் இயற்கை சுப கிரகங்களின் நட்சத்திரத்தில் செல்லும்பொழுது அதற்கு வகுக்கப்பட்ட காரக விஷயங்களில் பாதிப்பினை உண்டாக்காது.

இது போன்ற கிரகங்களுக்கு வகுக்கப்பட்ட காரகங்களின் பலன்களை காண ஒருவரின் விதியை மட்டும் ஆய்வு செய்தால் போதும்.

### மெதுவாக சுற்றும் கிரகம் :

அதேசமயம் மெதுவாக சுற்றும் (நகரும்) கிரகங்களான குரு, ராகு, கேது மற்றும் சனி கோச்சாரத்தில் தீமை செய்யக்கூடிய கிரகங்களின் நட்சத்திரத்தில் செல்லும்பொழுது அதற்கு வகுக்கப்பட்ட காரக விஷயங்களில் நிச்சயம் சிறிதளவாவது தடையினை ஏற்படுத்தும்.

ஆனால், இந்த கோச்சாரத்தால் ஏற்படும் தடை என்பது சிறிதளவாகத்தான் இருக்குமே தவிர பெரிய பாதிப்பினை ஏற்படுத்தாது.

## நவாம்சம்

நவாம்சம் என்பது ஒரு ராசியை ஒன்பது சமபாகங்களாகப் பிரித்து, ராசியில் உள்ள கிரகம், அதன் எந்த பகுதியில் உள்ளது? என்பதைக் காட்டுவது ஆகும்.

உண்மையில் ராசி சக்கரம் என்பது கிரகங்களின் நிஜமான தோற்றம் ஆகும். நவாம்சம் என்பது அதனுடைய நிழல்தான் என்று கூறலாம். ஒரு கிரகத்திற்கு கிடைத்திருக்கும் சுப, அசுப வர்க்கங்களை கணிக்க மட்டுமே நவாம்சம் சொல்லப்பட்டது. அதில் கிரகங்களுக்கு பார்வை இல்லை. மறைவு ஸ்தானங்களும் இல்லை. ஆனால் சேர்க்கை வர்க்கோத்தமம் போன்றவைகள் உண்டு.

ராசி சக்கரம் எனும் உண்மை நிலையில் மட்டுமே கிரகங்களுக்கு பார்வை உண்டு. நவாம்சம் என்பது ராசி சக்கரத்தை ஒன்பதின் மடங்கில் பிரித்து எந்த கிரகம், எங்கே? எந்த துல்லிய நிலையில் சுபத்துவ, பாபத்துவ அமைப்பில் இருக்கிறது? என்று பார்க்க உதவுகிறது.

மேலும் நவாம்சத்தை வைத்து திருமண வாழ்க்கையை பற்றி துல்லியமான பலன்களையும் கூறமுடியும்.

## ஜோதிடத்தில் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டியவை

ஜோதிடம் என்பது 9 கிரகங்களையும், 27 நட்சத்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. சரியான காலத்தை அறியவும், எதிர்கால நிகழ்வுகளை எடுத்துக் கூறவும், ஏற்படப் போகும் துன்பங்களில் இருந்து தப்புவதற்கான பரிகாரங்களை கண்டறியவும் உபயோகப்படும் ஒரு கணிப்பு முறையாகும்.

ஜோதிடத்தில் நாம் அடிப்படையாக சிலவற்றை தெரிந்து கொள்ள வேண்டும். அவை

சூரியன் ஒரு இராசியைக் கடக்க ஒரு மாதம் ஆகிறது.

சந்திரன் ஒரு இராசியைக் கடக்க இரண்டேகால் நாள் ஆகிறது.

செவ்வாய் ஒரு இராசியைக் கடக்க ஒன்றரை மாதம் ஆகிறது.

புதன் ஒரு இராசியைக் கடக்க ஒரு மாதம் ஆகிறது.

குரு ஒரு இராசியைக் கடக்க ஒரு வருடம் ஆகிறது.

சுக்கிரன் ஒரு இராசியைக் கடக்க ஒரு மாதம் ஆகிறது.

சனி ஒரு இராசியைக் கடக்க இரண்டரை வருடம் ஆகிறது.

இராகு ஒரு இராசியைக் கடக்க ஒன்றரை வருடம் ஆகிறது.

கேது ஒரு இராசியைக் கடக்க ஒன்றரை வருடம் ஆகிறது.

லக்னம் என்பது நமது உயிரைக் குறிக்கும்.

சந்திர இராசி என்பது நமது உடலைக் குறிக்கும்.

பாப கிரகங்கள் நீசம் பெறுவது நல்ல பலனைத் தரும்.

சுப கிரகங்கள் நீசம் பெறுவது நல்ல பலனைத் தராது.

பாக்கிய ஸ்தானத்தை நன்கு ஆராய வேண்டும்.

நவாம்ச கட்டத்தின் பலாப்பலனே அதிகம் நடக்கும்.

சூரியன் நீசமானால் தந்தைக்கு பலன் குறைவு.

சந்திரன் நீசமானால் தாயாருக்கு பலன் குறைவு.

புதன் நீசமானால் கல்விக்கு பலன் குறைவு.

குரு நீசமானால் ஆயுள் பலன் குறைவு.

சுக்கிரன் நீசமானால் மணவாழ்க்கை பலன் குறைவு.

சனி நீசமானால் ஆயுள் பலன் குறைவு.

இராகு நீசமானால் தாத்தாவுக்கு பலன் குறைவு.

சூரிய திசை ஆறு வருடங்கள் நடக்கும்.

சந்திர திசை பத்து வருடங்கள் நடக்கும்.

செவ்வாய் திசை ஏழு வருடங்கள் நடக்கும்.

இராகு திசை பதினெட்டு வருடங்கள் நடக்கும்.

சனி திசை பத்தொன்பது வருடங்கள் நடக்கும்.

புதன் திசை பதினேழு வருடங்கள் நடக்கும்.

கேது திசை ஏழு வருடங்கள் நடக்கும்.

சுக்கிர திசை இருபது வருடங்கள் நடக்கும்.

நவகிரகங்கள் பலாப்பலனாக கொள்ள வேண்டும்.

சகுனங்களை அவசியம் பார்க்க வேண்டும்.

ஹோரையால் ஒருவரை கட்டுப்படுத்த முடியும்.

தாராபலனை அவசியம் கணிக்கவும்.

சந்திர பலனை அவசியம் பார்க்க வேண்டும்.

இரண்டு சதுர்த்தசி திதிகளும் நன்றன்று.

சூரிய கிரகணம் முடியும்வரை உண்ணக்கூடாது.

கிரகணம் முடியும் போது குளிக்க வேண்டும்.

லக்னத்தில் இராகு, கேது இருப்பது நாக தோஷமாகும்.

ஐந்தில் இராகு, கேது இருப்பது புத்திர நாக தோஷமாகும்.

மூன்றில் இராகு, கேது இருப்பது பிதுர் தோஷமாகும்.

நான்கில் இராகு, கேது இருப்பது தாயாருக்கு தோஷமாகும்.

இரண்டு மற்றும் ஏழில் சனி இருக்கக்கூடாது.

ஞாயிறும், வியாழனும் முதல் விருந்துக்கூடாது.

குளிகையில் நல்லதை மட்டும் செய்யவும்.

கோபூஜை சர்வ பாவங்களையும் போக்கும்.

செவ்வாய், சனிக்கிழமைகள் ஜோதிடம் பார்க்க நன்று.

************************